REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK

2024 ஜூலை 23 செவ்வாய்க்கிழமை

# தினகரன்

THINAKARAN தினகரன்

வரு. 92 இல. 174 | Tuesday 23, July, 2024 | 16 பக்கங்கள் | 50/-




## அரசாங்க பாடசாலைகளில் ஆசிரியர்களாக பணிபுரியும்

# 25,000 பேரை ஆசிரியர் சேவையில் உள்ளீர்க்க அரசாங்கம் நடவடிக்கை

### அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் தாக்கல் செய்த வழக்கில் சட்ட மாஅதிபர் நீதிமன்றில் தெரிவிப்பு

### கல்வி அமைச்சரினால் விரைவில் அமைச்சரவை பத்திரம் சமர்ப்பிக்கப்படுமென்றும் தெரிவிப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம்**

அரசாங்க பாடசாலைகளில் தற்போது ஆசிரியர்களாக பணிபுரியும் அபிவிருத்தி உத்தியோகத்தர்களை நேர்முகப் பரீட்சைக்கு உட்படுத்தி, தகைமைகளை பூர்த்தி செய்யும் அனைவரையும் ஆசிரியர் சேவையில் உள்ளீர்ப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளதாக சட்ட மாஅதிபர் நீதிமன்றத்துக்கு அறிவித்துள்ளார்.

இது தொடர்பான அமைச்சரவைப் பத்திரம் கல்வி அமைச்சர் சுசில் பிரேம ஜயந்தவினால் அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப்படவுள்ளதாகவும் சட்ட மா அதிபர் சார்பில் நேற்று ஆஜராகியிருந்த மேலதிக சொலிஸிட்டர் ஜெனரல் விராஜ் தயாரத்ன உயர் நீதிமன்றத்தில் தெரிவித்தார்.

பல வருடங்களாக ஆசிரியர் சேவையில் ஈடுபட்டுள்ள தம்மை ஆசிரியர் சேவையில் உள்ளீர்க்காததால், தமது அடிப்படை உரிமை மீறப்பட்டுள்ளதாக நீதிமன்றம் தீர்ப்பளிக்க வேண்டுமெனக் கோரி தற்போது ஆசிரிய சேவையில் ஈடுபட்டுள்ள அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் ஒரு தரப்பினர் இந்த அடிப்படை உரிமை மனுவை தாக்கல் செய்திருந்தனர்.

இந்த மனு மீதான விசாரணை நேற்று நீதிமன்றத்தில் நடைபெற்ற போதே, மேலதிக சொலிஸிட்டர் ஜெனரல் நீதிமன்றத்தில் இவ்வாறு தெரிவித்தார்.

மேற்படி மனு ஏ. எச். எம். டீ.நவாஸ் அச்சல வெங்கப்புலி மற்றும் ஷிரான் குணரத்ன ஆகியோரடங்கிய உச்ச நீதிமன்ற நீதிபதிகள் குழாம் முன்னிலையில் நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. இரு தரப்பினராலும் இதற்கு முன்னர் மனு தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட இணக்கப்பாட்டுக்கு இணங்க, அதனோடு சம்பந்தப்பட்ட இணக்கப்பாட்டு நிபந்தனையை மேலதிக சொலிஸிட்டர் ஜெனரல் நேற்று உயர் நீதிமன்றத்தில் சமர்ப்பித்தார்.

தற்போது ஆசிரியர் சேவையில் ஈடுபட்டுள்ள 25,000 அபிவிருத்தி உத்தியோகத்தர்களை விசேட நேர்முகப் பரீட்சைக்கு உட்படுத்தி தகைமைகளை பூர்த்தி செய்பவர்களை ஆசிரியர் சேவையில் உள்ளீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார். இதன்படி 40 வயது உச்ச வயதெல்லையின் கீழ் தேசிய

06

## விவசாய நவீனமயமாக்கல் திட்டத்தின் கீழ்

# வட்டியில்லா கடன் வழங்கும் செயல்முறை உடன்படிக்கை

### ஜனாதிபதி செயலகத்தில் நேற்று கைச்சாத்து



விவசாய நவீனமயமாக்கல் வேலைத்திட்டத்தின் கீழ் முதல் கட்டமாக விவசாய தொழில் முயற்சியாளர்கள் மற்றும் விவசாயிகளுக்கு வட்டியில்லாக் கடன்களை வழங்கும் செயல்முறை புரிந்துணர்வு ஒப்பந்தம் நேற்று (22) ஜனாதிபதி அலுவலகத்தில் கைச்சாத்தாகியது.

முதல் கட்டத்தில், இந்த வேலைத்திட்டத்துக்கு பங்களிப்பை வழங்கும் இலங்கை வங்கி, பிரதேச அபிவிருத்தி வங்கி ஆகியவற்றுடன், விவசாய, பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சின் செயலாளர் ஜானக தர்மகீர்த்தி இந்த புரிந்துணர்வு ஒப்பந்தங்களில் கைச்சாத்திட்டார். இதன்படி எதிர்காலத்தில் மக்கள் வங்கியுடனும் ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட உள்ளது.

விவசாய நவீனமயமாக்கல் வேலைத்திட்டத்தின் முதற்கட்டமாக முன்னோடித் திட்டங்களை நடைமுறைப்படுத்த தெரிவு செய்யப்பட்ட 26 பிரதேச செயலகங்களில் விவசாய நவீனமயமாக்கல் நிலையங்கள் ஊடாக வேலைத் திட்டங்களை நடைமுறைப்படுத்த,

06

# தேர்தல் அறிவிக்கப்பட்டதும் வாக்காளர் அட்டை விநியோகம்

### 8000 ஊழியர்களை ஈடுபடுத்த நடவடிக்கை

**லோரன்ஸ் செல்வநாயகம்**

ஜனாதிபதித் தேர்தலுக்கான திகதி அறிவிக்கப்பட்டதும் உடனடியாகவே தேர்தல் தொடர்பான நடவடிக்கைகளை தபால் திணைக்களம் ஆரம்பிக்கும் என, பிரதி தபால் மா அதிபர் ராஜித ரணசிங்க தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் மேற்கொள்ள வேண்டிய அனைத்து நடவடிக்கைகளையும் தபால் திணைக்களம் மேற்கொண்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

தபால் மூல வாக்களிப்பு மற்றும் வாக்காளர்

06

# ஈஸ்டர் தாக்குதலின் பிரதான சூத்திரதாரிகள் ஜே.வி.பியினரே

### ஞானசார தேரர் பகிரங்க குற்றச்சாட்டு

**லோரன்ஸ் செல்வநாயகம்**



ஈஸ்டர் குண்டுத் தாக்குதலின் முக்கிய சூத்திரதாரிகள் ஜே.வி. பியினரே என, கலகொட அத்தே ஞான சார தேரர் தெரிவித்தார்.

சிறையிலிருந்து நேற்று விடுதலையான ஞானசார தேரர் ஊடகவியலாளர்களுக்கு கருத்து தெரிவித்த போது இதனைத் தெரிவித்தார். குண்டுத் தாக்குதலை நடத்திய அடிப்படைவாத கும்பல் ஜே.வி. பியிடம்தான் ஒளிந்து கொண்டது என்றும் அவர் குறிப்பிட்டார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்; ஈஸ்டர் குண்டுத் தாக்குதலில் சம்பந்தப்பட்ட

06

# டெங்கு, வெள்ளத்தை கட்டுப்படுத்த கடும் தீர்மானங்களை எடுக்க வேண்டும்

### பொருளாதார மீட்சி பெறவும் இவ்வாறே தீர்மானம் எடுத்தோம்



பொருளாதார நெருக்கடியிலிருந்து நாட்டை மீட்பதற்கு கடுமையான தீர்மானங்களை எடுத்தது போன்றே, நாட்டில் ஏற்படும் வெள்ளம் மற்றும் டெங்கு பரவலைக் கட்டுப்படுத்தவும் முடிவுகளை எடுக்க வேண்டுமென தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க தெரிவித்துள்ளார். இவ்வாறு செயற்படுவதனூடாக இதன் பிரதிபலன்கள் இன்னும் சில வருடங்களில் தெரியும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

நாட்டு மக்கள் தமது கடமைகளை சரியாக செய்தால் டெங்கு நோய் இந்தளவுக்கு பரவாதெனவும் அவர்

06

# தமிழர் தரப்பு ஜனாதிபதி வேட்பாளர் உடன்படிக்கையில் நேற்று கைச்சாத்து

**பருத்தித்துறை விசேட, யாழ். விசேட நிருபர்**

ஜனாதிபதி தேர்தலில் தமிழர் தரப்பு பொது வேட்பாளரை களத்தில் நிறுத்துவதற்கான உடன்படிக்கை நேற்று திங்கட்கிழமை கைச்சாத்திடப்பட்டது.

தமிழ் சிவில் சமூகத்துக்கும் தமிழ்த் தேசிய அரசியல் கட்சிகளுக்குமிடையிலும் இந்த உடன்படிக்கை, யாழ்பாணம் தந்தை செல்வா கலையரங்கில் கைச்சாத்திடப்பட்டது. கடந்த காலங்களில் ஜனாதிபதி தேர்தல்களில் வாக்களித்த தமிழ் மக்களுக்கு எவ்வித பயனும் ஏற்படவில்லையென தமிழ்க் கட்சிகளும் சிவில் சமூகத்தினரும் பல்வேறு குற்றச்சாட்டுக்களை முன்வைத்துள்ளனர்.

இதனால் தமிழ் மக்களின் நிலைமைகள், தேவைகளை வெளிப்படுத்தும் வகையில் எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் தமிழர்

06

# அதிபர், ஆசிரியர்களின் சட்டப்படி வேலை: கல்வி நடவடிக்கை பாதிக்காது

**லோரன்ஸ் செல்வநாயகம்**



அதிபர், ஆசிரியர்கள் ஆரம்பித்துள்ள சட்டப்படி வேலை தொழிற்சங்கப் போராட்டம் பாடசாலை கல்வி நடவடிக்கைகளில் எவ்வித பாதிப்புக்களையும் ஏற்படுத்தாதென கல்வி அமைச்சர் சுசில் பிரேம ஜயந்த தெரிவித்துள்ளார்.

சட்டப்படி வேலை செய்யும் போராட்டத்தில் ஆசிரியர்கள் முறைப்படி காலை முதல் பிற்பகல் 1:30 மணி வரை கற்பித்தல் நடவடிக்கைகளில்

06

# சுகாதாரத்துறையை பலப்படுத்த ரூபா 38 கோடிக்கு வாகனங்கள்

### ஜப்பான் அரசாங்கம் நன்கொடை



**லோரன்ஸ் செல்வநாயகம்**

நாட்டின் ஆரம்ப சுகாதார சேவை வேலைத் திட்டத்தை பலப்படுத்துவதற்காக ஜப்பானிய அரசாங்கம் 383 மில்லியன் ரூபா பெறுமதியான வாகனங்களை நன்கொடையாக வழங்கியுள்ளது.

குளிரூட்டப்பட்ட நவீன வசதிகளுடனான 10 லொறிகள் மற்றும் 21 கெப் ரக வாகனங்களும் இந்த வாகனங்களில் உள்ளடங்குகின்றன. இதனை உத்தியோகபூர்வமாக சுகாதார அமைச்சருக்கு கையளிக்கும் நிகழ்வு நேற்று சுகாதார அமைச்சின் மருத்துவ

06

### மக்களால் தெரிவான ஜனாதிபதியை விரட்டியது போல

# லால் காந்தவினால் அரச ஊழியர்களுக்கு அச்சுறுத்தல்

### கண்டி சம்பவம் குறித்து சுகீஸ்வர கண்டனம்



மக்கள் வாக்குகள் மூலம் தெரிவு செய்யப்பட்ட ஜனாதிபதியை துரத்தி விட்டு நாட்டில் இரத்த ஆறு ஓடுவதற்கு செயல்பட்டவர்கள், கண்டியில் அரசாங்க ஊழியர்களின் பெயரைச் சொல்லி அச்சுறுத்தல் விடுத்துள்ள தொழிற்சங்கத் தலைவரான லால் காந்த, அரசாங்க ஊழியர்களுக்கு வழங்கும் பெறுமதி என்ன எனவும் புதிய மக்கள் முன்னணியின் தலைவர் சுகீஸ்வர பண்டார கேள்வி எழுப்பியுள்ளார்.

06

### கண்டி மாநகரசபை அதிகாரியை அச்சுறுத்திய சம்பவம்


# லால் காந்தவுக்கு எதிராக பொலிஸார் விசாரணை



கண்டி மாநகர சபையின் முற்றுகைப் பிரிவின் தலைமை அதிகாரியை தேசிய மக்கள் சக்தியின் நிறைவேற்று உறுப்பினர் கே.டி. லால்காந்த அச்சுறுத்தியதாக பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்த முறைப்பாட்டுக்கமைய விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. கண்டி மாநகர சபையின் முற்றுகை பிரிவு தலைமை அதிகாரியே இந்த முறைப்பாட்டை பதிவு செய்துள்ளார். கண்டி மணிக்கூட்டு கோபுரத்துக்கு முன்பாக தேசிய மக்கள் சக்தியின் பிரசார

06



06 ஜோ பைடன் விலகியதால் கமலா ஹாரிஸ் பரிந்துரை

### உலகின் முதல் நிலை பணக்காரர்

# எலான் மஸ்க் அடுத்த மாதம் நாட்டுக்கு விஜயம்



உலகின் முதல் நிலை பணக்காரர்களில் ஒருவரான அமெரிக்க வர்த்தகர் எலான் மஸ்க் அடுத்த மாதம் இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இலங்கையில் தனது *Star link* செயற்கைக்கோள் இணைய சேவையை அறிமுகப்படுத்துவதற்காக, இவரது

06

# கல்குவாரியில் நீராடச் சென்ற தாயும் இரு பிள்ளைகளும் பலி

### மூவரது சடலங்களும் மீட்பு



திஸ்ஸமஹாராம, காவந்திஸ்ஸபுர பிரதேசத்தில் கல் குவாரியில் நீர் நிரம்பிய குழிக்குள் மூழ்கி பெண்ணொருவரும் 02 சிறுமிகளும் உயிரிழந்துள்ளனர். இவர்களது சடலங்களை பொலிஸார் மீட்டுள்ளனர்.

32 வயது தாயும் அவரது 09 மற்றும் 14 வயதுடைய இரண்டு சிறுமிகளுமே இவ்வாறு உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். இவர்களின் சடலங்கள்

06

# ஹிருணிகா பிணையில் விடுவிப்பு வெளிநாடு செல்லவும் தடை



இளைஞர் ஒருவரின் கடத்தலுடன் தொடர்புடைய சம்பவத்தில் 03 வருட கடூழியச் சிறைத்தண்டனை விதிக்கப்பட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஹிருணிகா பிரேமச்சந்திர, நேற்று கொழும்பு மேல் நீதிமன்றத்தினால் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

இப்பிணை கோரிக்கை நேற்று (22) கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி அமல் ரணராஜா முன்னிலையில் எடுத்துக் கொள்ளப்பட்ட போது நீதவான் இவ்வுத்தரவை வழங்கியுள்ளார்.

06

# வளிமண்டலவியல் திணைக்களம் மீனவருக்கு எச்சரிக்கை




நாட்டில் பரவலாக பலத்த காற்று மற்றும் கடல் கொந்தளிப்பு தொடர்பில் வளிமண்டலவியல் திணைக்களம் சிவப்பு எச்சரிக்கை விடுத்துள்ளது.

அரபிக்கடல் மற்றும் வங்காள விரிகுடா கடற்பரப்பில் செயற்படும் ஆழ்கடல் மீன்பிடி படகு மீனவர்கள் மற்றும் கடல்சார் சமூகத்துக்காக இந்த அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

இதன்படி தென்மேற்கு பருவக்காற்று வானிலை காரணமாக அந்த கடல் பகுதிகளில் 7080 கிலோ மீற்றர் வேகத்தில் காற்று வீசக்கூடுவதுடன் கடல் பகுதிகள் மிகவும்

06

# அரசியல் நிகழ்ச்சி நிரலுக்கு ஏற்ப நாட்டின் எதிர்காலத்தை வடிவமைப்பதற்கு ஒருபோதும் இடமளிக்க முடியாது!



## கடவத்தை பஸ்நிலைய வளாகத்தில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க







### ரணில் விக்கிரமசிங்க அவர்களால் மாத்திரமே இந்நாட்டு மக்களை நெருக்கடியிலிருந்து மீட்க முடியும்

**அமைச்சர் பிரசன்ன ரணதுங்க**



### ரணில் விக்கிரமசிங்க போன்ற ஒரு தலைவரை நாட்டு மக்கள் இழக்கக் கூடாது

**அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ**



### ஜனாதிபதி இலங்கைக்கு புதிய அரசியல் கலாசாரத்தை அறிமுகப்படுத்தியுள்ளார்

**ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் ருவன் விஜயவர்தன**



### பொருளாதார நெருக்கடியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்கியவர் ஜனாதிபதி

**அமைச்சர் ரமேஷ் பத்திரண**



### நாட்டின் எதிர்காலம் பற்றி சிந்திப்போர் இன்று எம்மோடு இருக்கின்றனர்

**இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்த**



### நாட்டை மீட்டமைக்காகவே இன்று ஜனாதிபதிக்கு பெரும் மேடையை அமைத்துள்ளோம்

**மஹிந்தானந்த அளுத்கமகே எம்.பி**

அரசியல் நிகழ்ச்சி நிரல்களுக்கு ஏற்ப நாட்டின் எதிர்காலத்தை வடிவமைக்க தாம் ஒருபோதும் இடமளிக்கப் போவதில்லை எனவும், நாட்டின் நிகழ்ச்சி நிரலுக்கு அமையவே அரசியலை உருவாக்க வேண்டும் எனவும் வலியுறுத்திய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, சஜித் பிரேமதாச, அநுரகுமார திஸாநாயக்க ஆகியோரை இப்பயணத்தில் இணையுமாறு அழைப்பு விடுத்தார்.

'ஒன்றாக வெல்வோம் நாம் கம்பஹா' என்ற தொனிப்பொருளில் நேற்றுமுன்தினம் (21) கடவத்தை பஸ்நிலைய வளாகத்தில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் உரையாற்றும் போதே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இதனைக் குறிப்பிட்டார்.

தற்போதைய அரசாங்கத்தின் வேலைத் திட்டம் மற்றும் முன்நோக்கிச் செல்லும் வழிகள் குறித்து மக்களைத் தெளிவுபடுத்தும் வகையில் நடைபெற்ற இந்தப் பொதுக் கூட்டத்தில், கம்பஹா மாவட்டத்தின் பெருந்திரளான மக்கள் கலந்து கொண்டனர். அரசாங்கத்தின் வேலைத்திட்டத்திற்கு தமது ஆதரவைத் தெரிவித்த மக்கள், ஜனாதிபதியை அமோகமாக வரவேற்றனர்.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை, ஜனாதிபதி வேட்பாளராக நிறுத்த வேண்டும் என்ற முன்மொழிவை கம்பஹா மாவட்ட மக்கள் சார்பில் அமைச்சர் பிரசன்ன ரணதுங்க முன்வைத்தார்.

அப்போது, மேடையில் இருந்த பொதுஜன பெரமுனவின் அமைச்சர்கள் பாராளுமன்ற உறுப்பினர்கள் 26 பேர் உட்பட 250 முன்னாள் உள்ளூராட்சி உறுப்பினர்களும், கூட்டத்தில் பங்கேற்ற 15,000இற்கும் மேற்பட்டோர் கைகளை உயர்த்தி ஏகமனதாக அந்த மொன்மொழிவு நிறைவேற்றப்பட்டது.

இங்கு உரையாற்றிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க குறிப்பிட்டதாவது:

"மக்கள் எனக்கு வழங்கிய அடிப்படையான பொறுப்பை நான் நிறைவேற்றியுள்ளேன். பொருளாதாரமும் அரசாங்கமும் இல்லாத நாட்டையே பொறுப்பேற்றேன். பதில் ஜனாதிபதியாக பதவியேற்கக் கூட அரசாங்க அலுவலகம் ஒன்று இருக்கவில்லை. எனக்கு கட்சியும் இருக்கவில்லை. எனது கட்சியில் நான் மட்டுமே பாராளுமன்றத்தில் இருந்தேன். ஐக்கிய மக்கள் சக்தியிடம் ஒத்துழைப்பு கேட்டேன், ஒத்துழைக்கவில்லை, அவர்கள் டலஸ் அழகப்பெருமவுக்கு ஆதரவளித்தனர்.

மக்கள் விடுதலை முன்னணி பொறுப்புக்களை ஏற்றுக்கொள்ள விரும்பமில்லாத காரணத்தினால், அவர்களும் எனக்கு ஆதரவளிக்க முன்வரவில்லை. பின்னர் பொதுஜன பெரமுனவின் தலைவர் ஜீ.எல் பீரிஸிடம் ஒத்துழைப்பு கேட்டேன். அவர் என்னை சந்திக்கக் கூட தயாராக இருக்கவில்லை. நான் பேசினேன், அவர் என்னோடு பேசக்கூட தயாராக இருக்கவில்லை. பின்னர் மஹிந்த ராஜகக்ஷவைச் சந்தித்து பேசினேன். அவர் ஒத்துழைப்பு வழங்க இணக்கம் தெரிவித்தார்.

அவ்வாறு ஆரம்பித்த அரசாங்கத்தில் நான் ஜனாதிபதியாக இருக்க எனக்கு ஒரு இடமிருக்கவில்லை. ஜனாதிபதி மாளிகையில் ஒன்றுகூடியிருந்த மக்கள் நீச்சல் தடாகத்தில் நீராடிக் கொண்டிருந்தனர். எனது வீடு எரிக்கப்பட்டிருந்தது. அலுவலகமும் முற்றுகையிடப்பட்டிருந்தது. பிரதமர் அலுவலகம் மட்டும் எஞ்சியிருந்ததால் அதன் மேல் மாடியில் நானும், கீழ் மாடியில் பிரதமர் தினேஷ் குணவர்தனவும் பணிகளை ஆரம்பித்தோம்.

சில நிவாரணங்களைத் தவிர்த்து வருமானங்களைத் தேடிக்கொள்ள வேண்டிய அவசியம் ஏற்பட்டது. அவற்றை செய்திருக்காவிட்டால் நெருக்கடியில் விழுந்திருப்போம். எந்த அளவு கஷ்டங்கள் வந்தாலும் எழுந்து வர முடியும் என்று நம்பினேன். இவ்வாறு முன்னோக்கிச் சென்ற போதும் பல முறை எதிர்கட்சியின் ஒத்துழைப்பை கோரினேன்.

மூன்று மாதங்களுக்கு ஒரு முறை அவர்களின் ஒத்துழைப்பைக் கோரினேன். அவர்கள் ஆதரவு வழங்க முன்வரவில்லை. நான் மக்களின் மேம்பாட்டுக்காகவும் நாட்டின் மேம்பாட்டுக்காவுமே பாடுபடுகிறேன் என்பதை அறிந்து அனைத்து செயற்பாடுகளுக்கும் எதிர்ப்புத் தெரிவித்தனர். ஐக்கிய மக்கள் சக்தியும், மக்கள் விடுதலை முன்னணியும் மக்களுக்காக சிறிதும் ஒத்துழைப்பு வழங்க முன்வரவில்லை.

உலக நாடுகளும் எமக்கு உதவ முன்வர கூடாதென அறிவிப்புக்களை வெளியிட்டனர். ஆனால் எமது பயணம் தொடர்ந்தது. எமக்கு கடன் வழங்கும் நாடுகள், ஐ.எம்.எப் அமைப்பு உள்ளிட்ட அனைத்து தரப்புக்களும் இப்போது எம்மோடு இணக்கப்பாட்டுக்கு வந்துள்ளன. இலங்கையை இந்த நிலையிலிருந்து மீட்டெடுக்க முயற்சிக்கிறோம். இன்னும் சிறிது நாட்களில் இலங்கை வங்குரோத்து நிலையிலிருந்து மீண்டு விட்டது என்ற அறிவிப்பு வரும். அதன் பின்னர் நம் முன்பிருக்கும் பல தடைகள் நீங்கி விடும்.

10 கிலோ அரிசியை இலவசமாக வழங்கினோம். மருந்துகள் தட்டுபாடின்றி கிடைக்கிறன. பிரச்சினைகள் குறைந்துள்ளன. இவற்றைப் பெற்றுக்கொடுத்த பின்னர் புரட்சிகரத் திட்டமான காணி உறுதிகளை வழங்க 'உறுமய' வேலைத் திட்டத்தை நடைமுறைப்படுத்தினோம். அனுபத்திரம் உள்ள அனைவருக்கும் இலவசமாக காணி உறுதிகள் வழங்கப்படும். 20 இலட்சம் பேருக்கு அவ்வாறான உறுதிகள் வழங்கப்படவுள்ளன.

கொழும்பு நகருக்குள் 2 இலட்சம் பேருக்கு வீட்டின் உரிமைகளை வழங்கவுள்ளோம். தோட்டப் பகுதிகளை கிராமங்களாக பிரகடனப்படுத்தி வீடுகளை கட்டமைக்க நிதி நிவாரணங்களை வழங்குவோம். ஒரு மாதத்தில் 75 வருடத்தில் செய்ய முடியாத புரட்சியை செய்திருக்கிறோம் ''

இவ்வாறு ஜனாதிபதி தெரிவித்தார்.

நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் மற்றும் ஆளுங்கட்சி பிரதம கொறடா பிரசன்ன ரணதுங்க, உரையாற்றுகையில் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் நீங்கள் ஒரு முடிவை எடுக்க வேண்டும். இன்று நாம் தொங்கு பாலத்தில் செல்கிறோம். வாய்ச்சொல் வீரனான அநுரகுமார தொங்கு பாலத்தை கடக்க வேண்டும் என்று தெரிவித்துள்ளார். தொங்கு பாலம் ஆபத்தானது. அனுபவம் இல்லாதவர்கள் தொங்கு பாலத்தில் செல்ல முடியாது. ரணில் விக்கிரமசிங்க அவர்களால் மாத்திரமே இந்நாட்டு மக்களை தொங்கு பாலத்தைக் கடக்கச் செய்ய முடியும்" என்று குறிப்பிட்டார்.

சுகாதார மற்றும் கைத்தொழில் அமைச்சர் ரமேஷ் பத்திரண உரையாற்றுகையில், "இன்று கம்பஹாவிற்கு வந்துள்ள மக்கள் வெள்ளத்தைப் பார்க்கும் போது அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க மீண்டும் இந்த நாட்டின் ஜனாதிபதி பதவிக்கு வருவார் என்பதில் சந்தேகமில்லை.

கடவத்தை நகரம் நிரம்பி வழிகிறது. அண்மைக்கால வரலாற்றில் நாம் கண்ட மிகப்பெரிய மக்கள் வெள்ளம் கடவத்தை நகரில் நிறைந்துள்ளது.

பொருளாதார நெருக்கடியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவைத் தவிர வேறு யாரும் நிவாரணம் வழங்கவில்லை" என்றார்.

சுற்றுலாத்துறை, காணி, விளையாட்டுத் துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ உரையாற்றுகையில், "ரணில் விக்கிரமசிங்க ஐ.தே.க. உறுப்பினர் என்று சிலர் கூறுகின்றார்கள். ரணில் விக்கிரமசிங்க ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்தவர் என்று இன்னும் சிலர் கூறுகின்றனர். ரணில் விக்கிரமசிங்க மொட்டுக் கட்சி என்று சிலர் கூறுகிறார்கள். மேலும் சிலர் ரணில் விக்கிரமசிங்க ஐக்கிய மக்கள் சக்தியைச் சேர்ந்தவர் என்று கூறுகின்றனர்.

ஆனால் இன்று ரணில் விக்கிரமசிங்க எந்தக் கட்சியிலும் இல்லாமல், நாட்டு மக்களின் கட்சியில் இருக்கிறார் என்றுதான் கூற வேண்டும்.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தல் உங்கள் பிள்ளைகளின் எதிர்காலத்தையும் நாட்டின் எதிர்காலத்தையும் தீர்மானிக்கும் தேர்தல் என்பதை நீங்கள் நன்றாக நினைவில் கொள்ள வேண்டும். ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்கவின் வெற்றியை யாரும் மாற்ற முடியாது. இந்தப் போராட்டத்தில் அவர் நிச்சயம் வெற்றி பெறுவார்" என்று தெரிவித்தார்.

பெருந்தோட்டக் கைத்தொழில் மற்றும் மகாவலி அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்த உரையாற்றுகையில், "இந்த நாட்டைப் பற்றி சிந்திக்கும், நாட்டின் எதிர்காலம் பற்றி சிந்திப்போர் இன்று எம்மோடு இருக்கின்றனர். அரசியல் குடும்பத்தில் இருந்து வந்த நான், நாட்டின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஆற்றிய சேவையை கருத்தில் கொண்டே நான் மிகக் கடினமான தீர்மானத்தை எடுத்தேன்.'' என்றார்.

பாராளுமன்ற உறுப்பினர் மஹிந்தானந்த அளுத்கமகே உரையாற்றுகையில், "ஒன்றிணைந்து வெல்வோம் கூட்டத்தொடரின் மூன்றாவது கூட்டம் இன்று கடவத்தையில் நடக்கிறது. காலியிலும், கண்டியிலுரும் இரு கூட்டங்களை நடத்தினோம். அந்த இரண்டு இடங்களையும் விட அதிகளவான ஆதரவாளர்களுடன் இன்று கூட்டம் நடக்கிறது. இவ்வாறானதொரு அரசியல் கூட்டம் இலங்கையில் இதுவரை நடந்ததில்லை. இந்த கூட்டத்தில் பல கட்சிகளையும் பிரதிநிதித்துவப்படும் பிரதிநிதிகளும் ஆதரவளார்களும் உள்ளனர்.

ஜனாதிபதிக்கும் இதற்கு முன்னர் இவ்வாறானதொரு மேடை கிடைத்ததில்லை. அனைவரும் நாட்டை விட்டு ஓடிய வேளையில், நாட்டு மக்கள் அநாதரவாக இருந்தபோது, நாட்டை மீட்டமைக்காகவே இன்று ஜனாதிபதிக்கு இவ்வாறான மேடையை அமைத்திருக்கிறோம். ஜனாதிபதி பதவியை ஏற்க ஜனாதிபதி எந்த நிபந்தனையும் விதிக்கவில்லை.

இரண்டு வருடங்களுக்கு முன்னதாக இந்த நாட்டின் நிலை பற்றியும் வரிசை யுகம் பற்றியும் அனைவரும் அறிவோம். அந்த யுகத்தை மறந்துவிட முடியாது.

நாட்டில் இன்று சுற்றுலாப் பயணிகள் நிறைந்து வழியும் அளவுக்கு நிலைமையை ஜனாதிபதியே உருவாக்கினார். அடுத்த முறையும் அனைவரும் ஒன்றுபட்டு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை ஆட்சியில் அமர்த்த வேண்டும்" என்று தெரிவித்தார்.

காலநிலை மாற்றம் தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் ருவன் விஜயவர்தன உரையாற்றுகையில், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இலங்கைக்கு புதிய அரசியல் கலாசாரத்தை அறிமுகப்படுத்தியுள்ளார். இன்று இந்த மேடைகளைப் பார்க்கும்போது, அனைத்துக் கட்சிகளைச் சேர்ந்த அரசியல் தலைவர்களும் உள்ளனர். அவர்கள் இந்த நாட்டின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப ஒன்றிணைந்திருக்கிறார்கள்.

" என்றார். பாராளுமன்ற உறுப்பினர் சஹன் பிரதீப் உட்பட பலரும் இங்கு உரையாற்றினர்.

அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் உட்பட அரசியல் பிரதிநிதிகள் பலர் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

*ஜனாதிபதி ஊடகப் பிரிவு*

தினகரன் விளம்பரம்
0112429367
விற்பனை பிரிவு
0112429444,
0112429378
ஆசிரியபீடம்
editor.tkn@lakehouse.lk

2024 ஜுலை 23 செவ்வாய்க்கிழமை

# தினகரன்

THINAKARAN




**தொழுகை நேரம்**

| | | |
|---|---|---|
| சுபஹ் | - | 04.41 |
| லுஹர் | - | 12.18 |
| அஸர் | - | 03.43 |
| மஃரிப் | - | 06.32 |
| இஷா | - | 07.47 |

**இன்றைய சுபதினம்**

குரோதி வருடம் ஆடி 07

ராகுகாலம் : மாலை : 3.02 - 4.32வரை
சுபநேரம் : காலை : 10.32 - 12.02வரை

யோகம்: சித்தயோகம்

திதி: சஷ்டி

# கதிர்காமம் புனிதஸ்தல சமய நிகழ்வுகளில் சாகல பங்கேற்பு





வரலாற்றுச் சிறப்பு மிக்க கதிர்காமம் ஆலய வருடாந்த மகோற்சவத்தின் இறுதி நாள் எசல மஹா பெரஹரா நேற்று முன்தினம் (21) திருவீதி உலா நடைபெற்றது.

ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியும், தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகருமான சாகல ரத்நாயக்க (21) பிற்பகல் கதிர்காமம் ஆலயத்துக்குச் சென்று சமய வழிபாடுகளில் ஈடுபட்டு ஆசிர்வாதங்களைப் பெற்றுக்கொண்டார்.

கதிர்காமம் கிரி விகாரைக்குச் சென்ற சாகல ரத்நாயக்க முதலில் கிரிவெஹர விகாராதிபதி வண. கொபவக்க தம்மிந்த நாயக்க தேரைச் சந்தித்து ஆசிகளைப் பெற்றுக் கொண்டார்.

பின்னர் விகாரையில் நடைபெற்ற சமய நிகழ்வுகளில் கலந்து கொண்டு, கதிர்காமம் சமன் மகா தேவாலயம் உள்ளிட்ட தேவாலயங்களுக்குச் சென்று ஆசிர்வாதம் பெற்றுக்கொண்டார்.

கதிர்காம ஆலயத்தின் வருடாந்த எசல மஹா பெரஹரா உற்சவத்தின் இறுதி நாளான நேற்று முன்தினம் (21) கிரிவெஹர விகாரையின் விகாராதிபதி கொபவக தம்மிந்த தேரரின் ஆலோசனைக்கு அமைய சிங்கராஜா ஹஸ்திராஜா யானையின் மீது புனித கலசம் வைக்கப்பட்டது.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மற்றும் சாகல ரத்நாயக்க ஆகியோரின் தலைமையில் இந்நிகழ்வு இடம்பெற்றது.

கதிர்காமம் உற்சவத்துக்காக வந்திருந்த பக்தர்களுடனும் சாகல ரத்நாயக்க சிநேக பூர்வ உரையாடலில் ஈடுபட்டார்

இராஜாங்க அமைச்சர் ஷசீந்திர ராஜபக்ஷ, கதிர்காமம் மஹா தேவாலய பஸ்நாயக்க நிலமே டிஷான் குணசேக்கர மற்றும் பலர் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.


இலங்கை ஜனநாயக சோசலிஷ குடியரசு
போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு
வீதி அபிவிருத்தி அதிகாரசபை

**விலைமனு அழைப்பு (IFB)**

| இலக்கம் | ஒப்பந்தத்தின் பெயர் |
|---|---|
| 01 | 40KVA (Three Phase) மின் இயற்றி மற்றும் 15KVA (Single Phase) மின் இயற்றி வழங்கல் மற்றம் நிறுவுதல்<br>ஒப்பந்த இலக்கம் - **RDA/DPR/PRO/GA/NCB/KMTTDP/2024/58** |

மேற்கூறப்பட்ட நடவடிக்கைக்காக தேசிய போட்டி விலைமனு விதிமுறைகளின் கீழ் விலைமனுக்கள் கோரப்படுகின்றது. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் **2024.07.23** முதல் **2024.08.12** வரை வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் இணையத்தளமான **www.rda.gov.lk** பார்வையிடுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றது.




பிரதமர் தினேஸ் குணவர்தன பதவியேற்று இரண்டாண்டு நிறைவடைந்ததை முன்னிட்டு அவருக்கு ஆசி வழங்கும் பிரித் நிகழ்வு நேற்று (22 ) பிரதமர் அலுவலகத்தில் நடைபெற்றது.

இலங்கை அமரபுர நிக்காயவின் தர்மரக்ஷித பிரிவின் ஸ்ரீமத் அனு நாயக்கர் ராஜகீய பண்டித வடகெதர விமல புத்தி தேரர், நாரஹேன்பிட்டி அபயாராம விகாராதிபதி மேல் மாகாண தலைமை சங்க நாயக்கர் முருத்தெட்டுவே ஆனந்த தேரர், சாஸ்திராதிபதி , பண்டித தெமமூஸ்ஸய மேதங்கர தேரர், பொரள்ளை அதுல தேரர், கிருலப்பனை புஷ்பாராமாதிபதி எல்கடுவே நாகித தேரர் ஆகியோர் பிரித் ஓதி ஆசீர்வாதம் செய்தனர். பின்னர் பிரதமர் தினேஷ் குணவர்தன பேலியகொட வித்யாலங்கார பிரிவேனாவிற்குச் சென்று சமய வழிபாடுகளிலும் ஈடுபட்டார்.

# போலந்தில் இலங்கையருக்கு பல் துறை வேலைவாய்ப்புகள்

## அமைச்சர் அலி சப்ரி தெரிவிப்பு



இலங்கையருக்கு குறிப்பிட்ட துறைகளில் வேலை வாய்ப்பு வழங்குவது குறித்து போலந்து பரிசீலித்து வருவதாக வெளிநாட்டமைச்சர் ஜனாதிபதி சட்டத்தரணி அமைச்சர் அலி சப்ரி தெரிவித்துள்ளார்.

இரு அரசாங்கங்களுக்கிடையிலான (G2G) ஒப்பந்தத்தின் அடிப்படையில் இந்த முயற்சி மேற்கொள்ளப்பட்டுவருவதாக அமைச்சர் அலி சப்ரி தனது எக்ஸ் தளத்தில் தெரிவித்துள்ளார்.

இந்த விடயத்தில் இலங்கையருக்கான விசா வசதிகளில் தளர்வை மேற்கொள்வது தொடர்பில், போலந்தும் பரிசீலித்து வருவதாக வெளிவிவகார அமைச்சர் குறிப்பிட்டார். போலந்துக்கான விஜயத்தை வெற்றிகரமாக நிறைவு செய்த பின்னர் வெளியுறவு அமைச்சர் அலி சப்ரி விடுத்துள்ள தனது எக்ஸ் தள குறிப்பிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

# 2024; நடுப்பகுதி வரை பத்து இலட்சம் பயணிகள் வருகை

சுற்றுலாப்பயணிகளின் வருகை இவ்வாண்டின் நடுப்பகுதி வரை, பத்து இலட்சமாக பதிவாகியுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

2024 ஜனவரி முதலாம் திகதி முதல் ஜூலை 18 வரையான காலப் பகுதியில் 10,19,642 சுற்றுலா பயணிகள் வருகை தந்துள்ளனர். இதன்படி, ஜூலை மாதம் முதல் வாரத்தில் 43,083 பேரும், இரண்டாம் வாரத்தில் 42,343 பேரும், மூன்றாவது வாரத்தின் முதல் நான்கு நாட்களில் 23,967 பேரும் வருகை தந்துள்ளதாக சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை வெளியிட்டுள்ள தரவுகளில் குறிப்பிடப்பட்டுள்ளது.

06


# இலங்கை வங்கி

**ஏல விலைகூறலுக்கான அழைப்பு (IFB)**

**கேள்விப்பத்திர இலக்கம் : P/PROC/2024/55**

**தகவல் தொழில்நுட்ப சேவை முகாமைத்துவம் (ITSM) மற்றும் தகவல் தொழில்நுட்ப சொத்து முகாமைத்துவம் (ITAM) என்பவற்றுக்கான தீர்வுகளை இலங்கை வங்கிக்கு வழங்கி, நடைமுறைப்படுத்தி, செயற்படுத்தி, அவதானித்து, பராமரித்து மற்றும் முகாமைத்துவம் செய்வதற்கு**

மேற்குறித்த மென்பொருட் தீர்வை இலங்கை வங்கிக்கு வழங்குவதற்கு ஒட்டி முத்திரையிடப்பட்ட ஏல விலை கூறல்களை உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு வழங்குநர்களிடமிருந்து எதிர்பார்க்கின்றோம்.

**முக்கிய திகதிகள்**

| | | |
|---|---|---|
| விலை கூறல் ஆவணங்களை வெளியிடுவதற்கான இறுதித் திகதியும் நேரமும் | : | 12.08.2024 15.00 மணிக்கு |
| விலை கூறல் ஆவணங்களை வெளியிடுவதற்கான காலப்பகுதி | : | 09.00 மணியிலிருந்து 15.00 மணி வரை வேலை நாட்களில் |
| விலை கூறல்களுக்கான முன்கூட்டிய கூட்டம் | : | 30.07.2024 11.00 மணிக்கு இலங்கை வங்கித் தலைமைக் காரியாலயத்தின் 14 ஆம் தளம் |
| விலை கூறல் மூடும் திகதியும் நேரமும் | : | 13.08.2024 10.00 மணிக்கு |
| விலை கூறலைத் திறத்தல் | : | விலை கூறல் முடிவடைந்தவுடன் |

**மேலதிக விபரங்களுக்கு விலைகூறுவோர் www.boc.lk என்ற இலங்கை வங்கியின் வலைத் தளத்தைப் பார்வையிடலாம்.**

**ஏதேனும் அல்லது அனைத்து விலை கூறல்களையும் நிராகரிப்பதற்கான உரிமையையும் எவ்வித காரணமும் தெரிவிக்காது விலைகூறலை அல்லது ஏதேனும் ஒரு பாகத்தினை ஏற்றுக் கொள்வதற்கான உரிமையினையும் இலங்கை வங்கி கொண்டுள்ளது.**

**பிரதான முகாமையாளர்**
**சொத்துக்களும் சேகரிப்பும் பகுதி**
14 ஆம் தளம், இலங்கை வங்கி தலைமையகம்
"**BOC** சதுக்கம்" இல: 01, இலங்கை வங்கி மாவத்தை, கொழும்பு 01.
தொலைபேசி: 011 220 4267, 011 254 4310, 011 243 4786
மின்னஞ்சல்: procurement@boc.lk

மேலதிக விபரங்களுக்கு **Scan** செய்யவும்

1975 BOC CALL CENTRE
www.boc.lk
A (lka) Fitch ரேட்டிங், AAA Brand Finance ரேட்டிங்.
இலங்கை வங்கி இலங்கை மத்திய வங்கியினால் கண்காணிக்கப்படும் உரிமம் பெற்ற வணிக வங்கியாகும்
பரிந்துரைகள்/கருத்துக்கள்/முறைப்பாடுகளுக்கு - https://www.boc.lk/contact

**தலைமை அலுவலகம், BOC சதுக்கம், இல.1, இலங்கை வங்கி மாவத்தை, கொழும்பு 1.**

இலங்கை வங்கி
BOC
தேசத்தின் வங்கியாளர்





தினகரன்
THINAKARAN

35, டி.ஆர்.விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம் : 834
தொலைபேசி இலக்கம் : 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

குரோதி வருடம் ஆடி மாதம் 07ஆம் நாள் செவ்வாய்க்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1446 முஹர்ரம் பிறை 16

**குறள் தரும் சிந்தனை**

காக்க பொருளா அடக்கத்தை ஆக்கம்
அதனினூஉங் கில்லை உயிர்க்கு.

மிக்க உறுதியுடன் காக்கப்படவேண்டியது அடக்கமாகும். அடக்கத்தைவிட ஆக்கம் தரக் கூடியது வேறொன்றும் இல்லை.

# அந்நிய செலாவணியை அதிகரிக்கும் பொருளாதார மேம்பாட்டின் தேவை

பொருளாதார ரீதியில் நாட்டைக் கட்டியெழுப்புவதற்காக முன்னெடுக்கப்படும் வேலைத்திட்டங்கள் நம்பிக்கை அளிக்கும் வகையில் அமைந்துள்ளன. அவை நாட்டில் புதிய நம்பிக்கையையும் எதிர்பார்ப்பையும் ஏற்படுத்தக் கூடியனவாக விளங்குகின்றன.

அதன் விளைவாக நாடு பொருளாதார வீழ்ச்சிக்கு உள்ளாகி இருந்த காலத்தில் மக்கள் முகம்கொடுத்த அசௌகரியங்களும் நெருக்கடிகளும் குறுகிய காலப்பகுதிக்குள் நீங்கக்கூடியதாக இருந்தன. அன்றைய சூழலில் நாட்டில் நிலவிய நெருக்கடிகள் யாவும் பெரும்பாலும் நீங்கிய நிலையே தற்போது உருவாகியுள்ளது.

நாட்டின் நலன்களை முன்னிலைப்படுத்தி ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முன்னெடுக்கும் பொருளாதார வேலைத்திட்டங்களின் பிரதிபலனாகவே இவ்வாறான அடைவை அடைந்து கொள்ள முடிந்துள்ளது.

2022 ஆம் ஆண்டின் ஆரம்பப் பகுதியில் கடும் பொருளாதார வீழ்ச்சிக்கு உள்ளாகி வங்குரோத்து நிலையை அடைந்திருந்த நாட்டை குறுகிய காலப் பகுதியில் மீளக் கட்டியெழுப்புவது என்பது இமாலயச் சாதனைதான். அவ்வாறான சாதனைக்கு தேவையான வேலைத்திட்டங்கள் வெற்றிகரமாக முன்னெடுக்கப்படுவதற்கு தேவையான தலைமை நாட்டுக்கு அளிக்கப்படுகின்றது. அதன் பயனாக நாட்டைக் கட்டியெழுப்புவதற்கான பொருளாதார மேம்பாட்டு வேலைத்திட்டங்கள் சரியான பாதையில் நாட்டுக்கு நன்மை பயக்கும் பாதையில் பயணிக்கின்றன. உள்நாட்டிலும் சர்வதேச மட்டத்திலும் இவ் வேலைத்திட்டங்களுக்கு கிடைக்கப்பெறும் ஆதரவும் ஒத்துழைப்பும் இத்திட்டங்களுக்கு கிடைக்கப்பெறுவது நல்ல சான்றாகும்.

அந்த வகையில் இலங்கை இதுவரை பெற்றுக் கொண்டுள்ள வெளிநாட்டு கடனைத் திருப்பி செலுத்தும் வகையில் சலுகை கிடைக்கப் பெற்றுள்ளது. இந்நாட்டுக்கு கடன் வழங்கியுள்ள நாடுகளும் நிதியுதவி வழங்கியுள்ள நிறுவனங்களும் இணக்கம் தெரிவித்துள்ளன. இதன் நிமித்தம் அண்மையில் இணக்கப்பாடுகளும் கூட எட்டப்பட்டுள்ளன. பொருளாதார ரீதியில் நாட்டை கட்டியெழுப்புவதற்கு முன்னெடுக்கப்படும் வேலைத்திட்டங்களுக்கு சர்வதேச நாணய நிதியம் அளித்துவரும் ஆதரவும் ஒத்துழைப்பும் இதற்கு பக்கத்துணையாக அமைந்துள்ளன.

பொருளாதார வீழ்ச்சிக்கு உள்ளாகி கட்டம் கட்டமாக மீட்சி பெற்று நம்பிக்கை அளிக்கும் வகையில் மறுமலர்ச்சிப் பாதையில் பிரவேசித்து இருக்கும் இந்நாட்டுக்கு இது பாரிய சலுகையாகும்.

என்றாலும் இச்சலுகை கிடைக்கப்பெற்று விட்டதற்காக திருப்பி அடையவும் முடியாது. அச்சலுகையைப் பயன்படுத்தி தொடர்ந்தும் கடன் பெற்றுக் கொண்டும் இருக்க முடியாது. இச்சலுகையின் ஊடாக நாடு எதிர்கொண்டுள்ள பிரச்சினைகளும் சவால்களும் தீர்ந்துவிடும் எனவும் எதிர்பார்க்க முடியாது. கடன் பெறாத நாடாக இந்நாட்டைக் கட்டியெழுப்பப்பட வேண்டும். அதற்காக நிலைபேறான பொருளாதார அபிவிருத்தி இன்றியமையாதது. இது பரவலாக உணரப்பட்டுள்ள விடயமாகும். மேலும் இந்நாட்டில் மீண்டும் ஒரு போதும் பொருளாதார நெருக்கடி ஏற்பட்டு விடக்கூடாது. அதுவே அனைத்து தரப்பினரதும் எதிர்பார்ப்பாக உள்ளது. அதற்கு ஏற்ப அனைத்து வேலைத்திட்டங்களும் முன்னெடுக்கப்பட வேண்டும் என்ற எதிர்பார்ப்பும் விருப்பமும் பரவலாகக் காணப்படுகிறது. ஏனெனில் 2022 ஆரம்பப் பகுதியில் நாடு முகம்கொடுத்த பொருளாதார வீழ்ச்சி பெற்றுக் கொடுத்துள்ள அனுபவம் அத்தகையதாக உள்ளது.

இவை அனைத்துக்கும் விவசாய மற்றும் கைத்தொழில் உற்பத்தி துறை மேம்பாடு அடைய வேண்டும். ஏற்றுமதி பொருளாதாரம் முன்னேற்றமடைய வேண்டும். அவை நாட்டின் தேவையை நிறைவேற்றக் கூடியதாக அமைவதோடு அந்நிய செலாவணியை ஈட்டித்தரக் கூடியதாகவும் திகழும்.

அந்த வகையில் நேற்றுமுன்தினம் குருநாகலில் நடைபெற்ற வைபவமொன்றில் உரையாற்றிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, 'நாட்டுக்கு தேவையான அளவு அந்நியச் செலாவணி கிடைக்கப்பெறும் வரை கடன் பெறவேண்டிய நிலைமை காணப்படுகிறது. கடனை திருப்பி செலுத்த சலுகை கிடைக்கப் பெற்றுள்ள போதிலும் நாம் கடன் பெறும்போது, கடன் தொகை அதிகரித்துச் செல்லும். அதனால் எமது அந்நியச் செலாவணி அளவை அதிகரிக்க முயற்சி செய்வது அவசியம்' என்று குறிப்பிட்டுள்ளார்.

அதுதான் உண்மை. நாடு பெற்றுக் கொள்ளும் அந்நியச் செலாவணியை அதிகரிப்பதில் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும். அதற்கான வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட வேண்டும். இதன் ஊடாக உற்பத்தியும் ஏற்றுமதியும் அதிகரிக்கும். இதன் நிமித்தம் கட்சி, அரசியல் பேதங்களுக்கு அப்பால் நாட்டின் நலன்களை முன்னிலைப்படுத்தி ஆதரவும் ஒத்துழைப்பும் அளிப்பது அவசியம். அப்போது நாடு பெற்றுக் கொள்ளும் அந்நியச் செலாவணி நிச்சயம் அதிகரிக்கும். அதுவே இன்றைய தேவையாகும்.

editor.tkn@lakehouse.lk

# இலங்கையின் அவசரகால முன்னாயத்த முயற்சிகளுக்கு உலக உணவு திட்டத்தினூடாக அமெரிக்கா உதவி

காலநிலை தொடர்பான அவசரநிலைகளுக்கு இலங்கையின் முன்னேற்பாடுகளை வலுப்படுத்துவதற்கு அமெரிக்க அரசாங்கம், சர்வதேச அபிவிருத்திக்கான ஐக்கிய அமெரிக்க நிறுவனம் (USAID), மனிதாபிமான உதவிக்கான பணியகம் மூலம் ஐக்கிய நாடுகளின் உலக உணவுத் திட்டத்தினூடாக அனர்த்த முகாமைத்துவ நிலையத்திற்கு (DMC) முக்கிய உபகரணங்களை வழங்கியது.

2.5 மில்லியன் அமெரிக்க டொலர் (சுமார் ரூ. 760 மில்லியன்) பெறுமதியான பரந்த நிதியுதவியிலான USAID உலக உணவுத் திட்ட செயற்றிட்டத்தின் ஒரு பகுதியாக கருதப்படும் இந்த உதவித் தொகுதியானது அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் பேரிடர் முகாமைத்துவ திறன்களை மேம்படுத்துவதற்கான அரசாங்கத்தின் முயற்சிகளுக்கு உதவி செய்கின்றது. நீர்மூழ்கிக் குழாய்கள், சமையலறை உபகரணங்கள், செயின்சாக்கள், போலிசாக் பைகள் மற்றும் தார்ப்பாய்கள் அடங்கிய இந்த உதவித்தொகுதி இன்தெற்கு மற்றும் மத்திய ஆசியாவிற்கான பிராந்திய மனிதாபிமான ஆலோசகர் டஸ்டின் ஷியாவினால், இலங்கை அரசாங்கம் மற்றும் அதிகாரிகளும் கலந்துகொண்ட இந்நிகழ்வின் போது DMC இன் பணிப்பாளர் நாயகம் ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரல் உதய ஹேரத்திடம் கையளிக்கப்பட்டது.

'உயிர்களைக் காப்பாற்றுதல், உடைமைகளைப் பாதுகாத்தல் மற்றும் மக்கள் மீதான பேரழிவுகளின் தாக்கத்தைக் குறைத்தல் ஆகியவை இலங்கையிலும் உலகெங்கிலும் உள்ள அமெரிக்க மனிதாபிமான பேரிடர் பதில் முயற்சிகளின் மையமாக உள்ளன. 'உயிர்களையும் வாழ்வாதாரங்களையும் காப்பாற்றுவதிலும் ஆபத்துக்களை பேரழிவுகளாக மாற்றுவதைத் தடுப்பதிலும் பயனுள்ள தயார்நிலை மிகவும் முக்கியமானது' என றுகுP இன் இலங்கைப் பிரதிநிதியும் வதிவிடப் பணிப்பாளருமான அப்துர் ரஹீம் சித்திக்கி கூறினார்.

'காலநிலை மாற்றம் தீவிரமடைந்து வருவதால், மக்களைப் பாதுகாப்பதற்கும் அவர்களின் உணவு மற்றும் ஊட்டச்சத்துக்கான அணுகலுக்கும் அதன் தாக்கத்தைத் தணிக்க எங்கள் முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

காலநிலை அதிர்ச்சிகளுக்கு சிறந்த முறையில் தயாராகும் இலங்கையின் திறனை வலுப்படுத்துவதில் அமெரிக்காவின் தொடர்ச்சியான ஆதரவிற்கு நாங்கள் நன்றியுள்ளவர்களாக இருக்கிறோம்' என அவர் மேலும் தெரிவித்தார்.




# சுவாமி விபுலாநந்தர் நினைவுதினம் பேத்தாழை நூலகத்தில் அனுஷ்டிப்பு

உலகின் முதல் தமிழ்ப் பேராசிரியரான முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலாநந்தரின் 77 ஆவது மகா சமாதி தின நிகழ்வுகள் வாழைச்சேனை, பேத்தாழை விபுலாநந்தர் கலை இலக்கிய மன்றத்தின் ஏற்பாட்டில் பேத்தாழை பொதுநூலக கேட்போர் கூடத்தில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றன.

இந்நிகழ்வில் விபுலாநந்தர் கலை இலக்கிய மன்ற நிருவாகிகள், உறுப்பினர்கள், பேத்தாழை பொதுநூலக உத்தியோகத்தர்கள், ஆசிரியர்கள், பாடசாலை மாணவர்கள் மற்றும் நலன்விரும்பிகள் கலந்து சிறப்பித்திருந்தனர்.

கலை மன்றத்தின் தலைவர் ம.பிரகாஷ் தலைமையிலான இந்நிகழ்வு சுவாமி விபுலானந்தரின் திருவுருவப் படத்திற்கு பூமாலை சாத்துதலுடன் ஆரம்பித்தது. இந்நிகழ்வில் சுவாமி விபுலாநந்தரின் பல்பரிமாணம் பற்றி கல்குடா ஆரோக்கிய அன்னை ஆலய பங்குத் தந்தை வணபிதா நோட்டன் ஜோன்ஸ்சன் சிறப்புரை ஆற்றி இருந்தார். மேலும், வாழைச்சேனை இந்துக் கல்லூரி (தேசிய பாடசாலை) பிரதி அதிபரும் கோறளைப்பற்று பிரதேச சபையின் முன்னாள் தவிசாளரும் எழுத்தாளரும் இலக்கிய ஆர்வலருமான திருமதி ஸோபா ஜெயரஞ்சித், விபுலானந்தர் கலை இலக்கிய மன்றத்தின் செயலர் த.சர்மிதன் மற்றும் உறுப்பினர் யோ.சிவநந்தினி ஆகியோர் கருத்துரை வழங்கினர்.

கவிஞர் இரா.நவநிதன், கவிஞர் தமிழூராள் அனுஷ்திக்கா, கவிஞர் பிள்ளைக்கவி பிரசாந் ஆகியோர் சுவாமி விபுலானந்தர் பற்றிக் கவி பாடினர்.

த. சர்மிதன்...





# மாணவர்களின் வாழ்வில் ஒளியேற்றிய ஆசான் அமரர் கந்தையா சக்திவேல்

பதுளை சரஸ்வதி தமிழ் தேசியக் கல்லூரியின் ஓய்வுநிலை ஆசிரியர் கந்தையா சக்திவேல் அவர்களின் மறைவு ஊவா மாகாண கல்வி சமூகத்தின் பேரிழப்பாகும். பொருளியல் பாட ஆசிரியர் கந்தையா சக்திவேல் தனது 67 ஆவது வயதில் இயற்கை எய்தினார்.

பதுளை, கலன் தோட்டத்தில் பிறந்த இவர், பல தடைகளைக் கடந்து பல்கலைக்கழகம் சென்று பொருளியல் பாடத் துறையில் பட்டம் பெற்றவர் ஆவார். தொடர்ந்து தனது ஆசிரியர் சேவையை பதுளை சரஸ்வதி தமிழ் தேசியக் கல்லூரியில் சுமார் முப்பதாண்டுகள் கடந்து ஓய்வு காலம் வரை பணியாற்றினார்.

இப்பாடசாலையின் கல்வி வளர்ச்சிக்கு பெரும் பங்காற்றிய இவர் க.பொ.த உயர்தர கலை, வர்த்தகப் பிரிவு மாணவர்களுக்கு பொருளியல் பாடத்தை கற்பித்து வந்த்தோடு, இவரிடம் கல்வி பயின்ற மாணவர்கள் பல்கலைக்கழகம் செல்வதற்கு வழிகாட்டினார். பல நூற்றுக்கணக்கான மாணவர்கள் அரச மற்றும் தனியார் துறையில் உயர் பதவிகளைப் பெறுவதற்கும் வழிகாட்டினார். 1987 ஆம் ஆண்டுக்கு பிற்பட்ட காலம் முதல் 2017 ஆம் ஆண்டுவரை தனது உன்னத ஆசிரியர் சேவையாற்றியுள்ளதுடன் கற்பித்தல் கற்றல் செயற்பாடுகளில் மட்டுமன்றி தற்காப்பு கலையாகிய கராத்தே உள்ளிட்ட ஏனைய இணைப்பாடவிதான துறைகளிலும், சமூக சேவைகளிலும் ஈடுபட்டு தான் சார்ந்த சமூக உயர்விற்கு உறுதுணையாக விளங்கியவர் ஆவார். மேலும் இவரது சேவை காலத்தி



லேயே சரஸ்வதி தேசிய கல்லூரியின் சுற்றுச்சூழலை அழகுப்படுத்தும் செயற்றிட்டத்தை ஆரம்பித்து இன்று கல்லூரி வளாகம் அழகுபெற்று விளங்குவதற்கு அடித்தளமிட்டவர் எனலாம்.

அத்தோடு ஊவா மாகாணத்தில் பொது கலை தகுதி (G.A.Q) தேர்வுகளில் வெளிவாரி பட்டக்கற்கை நெறியை உரிய முறையில் நடத்தி பல மாணவர்கள் பட்டதாரிகளாக உருவாகுவதற்கு காரணகர்த்தாவாகத் திகழ்ந்தார். அக்காலப் பகுதியில் மலைய பெருந்தோட்ட கல்வி அபிவிருத்தி செயற்றிட்டத்தின் கீழ் ஆசிரியர் மாணவர்களை வாண்மைத்துவமிக்கவர்களாக மிளிர செய்த முதன்மையான வளவாளர்களுள் சக்திவேல் ஆசிரியரும் ஒருவர்.

ஆசிரியர் கந்தையா சக்திவேல் அவர்களின் திடீர் மறைவு பதுளை சரஸ்வதி தேசிய கல்லூரியில் கல்வி கற்ற அனைவர் மத்தியிலும் பெரும் அதிர்ச்சியையும் சோகத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

நடராஜா மலர்வேந்தன்
லுணுகலை நிருபர்

# புன்னாலைக்கட்டுவன் சித்தி விநாயகர் வித்தியாலயத்தில் திறன் வகுப்பறை

1846 ஆம் ஆண்டில் சங்கர ஐயர் கதிர்காம ஐயர் அவர்களால் ஆயக்கடவை சித்தி விநாயகருக்கு முன்பாக தோற்றுவிக்கப்பட்டு 1927 இல் சேர் பொன் இராமநாதன் அவர்களால் அடிக்கல் நாட்டப்பட்டு கட்டியெழுப்பப்பட்ட புன்னாலைக்கட்டுவன்





சித்தி விநாயகர் வித்தியாலயத்தில் இவ்வாரம் யூலை 17ஆம் திகதி திறன் வகுப்பறை செயற்பாடுகள் இப்பாடசாலை சமூகத்தினரின் முன்னிலையில் சிறப்பாக ஆரம்பித்து வைக்கப்பட்டது. இரட்னம் பவுண்டேசன் ஸ்தாபகர் வைத்திய கலாநிதி இரட்னம் நித்தியானந்தம் வழிகாட்டலில் லண்டனைச் சேர்ந்த பாரத கலாலயத்தின் திருமதி ஐங்கரன் அனைத்துலக மருத்துவ நல அமைப்புடன் இணைந்து திறன் பலகை ஒன்றை வழங்கியதன் மூலம் இப்பாடசாலை ஆசிரியர் மாணவர்களின் இடைவினை கற்றல் கற்பித்தல் செயற்பாடுகள் வலுப்படுத்தப்பட்டுள்ளன.

இப்பாடசாலையின் அதிபர் சி.சிவகுமார் மற்றும் அழகியல் பாட ஆசிரியர் திருமதி கருணரூபினி குணநிதி ஆகியோரின் வேண்டுதலில் வலிகாமம் வலயக்கல்வி அலுவலகத்தினரின் நேரடிப் பங்களிப்பில் இது நிறைவேறியுள்ளது.

இதன் ஆரம்ப வைபவத்தில் அனைத்துலக மருத்துவ நல அமைப்பின் இலங்கைக்கான பணிப்பாளர் முத்து இராதா கிருஸ்ணன்,முன்னாள் பணிப்பாளர் கிருஷ்ணகுமார் மற்றும் வலயத்தின் பிரதிக்கல்விப்பணிப்பாளர் சஞ்சீவன் ஆகியோருடன் இப்பாடசாலைமயின் கல்விச்சமூகத்தினரும் இணைந்து சிறப்பித்திருந்தார்கள்.

ஆசிரியர்கள் தம் வகுப்பு மாணவர்களை இணைத்து இடைவினையுடனான கற்றல் செயற்பாடுகளை நிகழ்த்தியமை சிறப்பான அம்சம் ஆகும். மற்றும் இவ்வைபவத்தில் அனைவருக்கும் ஆடிக்கூழ் மற்றும் மோதக பலகார வகைகள் பரிமாறப்பட்டன.

# கடவுளின் பிரதிநிதிகளான பணிபுரியும் அருட்பணியாளர்கள்

## சுதேச குருக்கள் தினம்; திருச்சபை நாளை சிறப்பிக்கின்றது

கத்தோலிக்கத் திருச்சபை நாளை 24ஆம் திகதி சுதேச குருக்கள் துறவியர் தினத்தைக் கொண்டாடுகிறது. விசுவாசத்திலும் இறை பக்தியிலும் மக்களை வழிநடத்தி இறைவனுக்கும் மக்களுக்குமிடையிலான உறவைப் பலப்படுத்தும் உன்னத பணிகளில் ஈடுபடுபவர்கள் நம்



அருட் தந்தையர்கள்.

தன்னலம் கருதாது மறை வளர்ப்பதிலும் விசுவாசத்தில் மக்களை வளர்த்தெடுப்பதிலும் அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வரும் அவர்கள் இறைவனின் பிரதிநிதியாக நம் முன் வாழ்பவர்கள்.

"கோயிலில்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்" என்பது முதுமொழி. அந்த வகையில் பங்குகளில் மட்டுமன்றி குடும்பங்களின் ஆன்மிகத் தலைவராகவும் வழிகாட்டியாகவும் ஆயனாகவும் ஆசானாகவும் கடவுளின் சார்பில் திகழ்பவர்களே நமது குருக்களாவர்.

சுதேச குருக்கள் துறவியர் தினத்தில் அப்போஸ்தலரான புனித பேதுரு சபையைப் பற்றி அறிவது முக்கியமாகும். 1889 ஆம் ஆண்டில் பிரான்ஸ் நாட்டில் சென். நகரில் ஜான்பிகார் என்ற பெண்மணியால் இச்சபை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. குருக்களையும் துறவற சபையினரையும் பயிற்றுவிக்கவும் உருவாக்கவும் அவர்களுக்கு உதவவும் குரு மடங்களுக்கும் துறவற சபை இல்லங்களுக்கும் உதவி வழங்கவுமென இந்த சபை உருவாக்கப்பட்டுள்ளது.

தேவ அழைத்தலைப் பெருக்கி குறிப்பாக சுதேச குருக்களை உருவாக்கவும் செபத்தாலும் பக்தி யாகத்தாலும் ஒத்துழைப்பை வழங்கி திருச்சபைக்குப் பங்களிப்பு செய்யும் பணியையும் இந்த சபை மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. சுதேச குருக்கள் துறவற சபைக்குப் பொறுப்பான அருட் தந்தை சபரமாது அடிகளார் இத் தினத்தில் விடுத்துள்ள செய்தியானது இறைவனிடமிருந்து விலகிய அல்லது பிரிந்த மனிதனை மீண்டும் இறைவனிடத்திற்கு கொண்டு செல்வதே இறைமகனான இயேசு கிறிஸ்துவுக்கு ஒப்படைக்கப்பட்ட பணியாகும்.

அவரிடத்தில் ஒப்படைக்கப்பட்ட அப்பணியை தொடர்ந்தும் செயற்படுத்து வதற்காகவே பரிசுத்த திருச்சபையை கட்டியெழுப்பினார். அவர் அவர்களுக்கு கூறியது. "நீங்கள் போய் எல்லா மக்களினத்தாரையும் சீடராக்குங்கள்" என்பதாகும். (மத்தேயு 28 : 19). அத்துடன் அவர்களுக்கு தைரியமூட்டி அவர்களுக்குக் கொடுத்த வாக்குறுதியானது "உலக முடிவு வரை எந்நாளும் நான் உங்களுடன் இருக்கிறேன்" என்பதாகும். (மத்தேயு 28 : 20). இயேசு சீடர்களுக்கு கூறியதை நினைவிற்கு கொண்டு வருவோமானால்;

"அறுவடை மிகுதி வேலைகளோ குறைவு. ஆகையால் தேவையான வேலையாட்களைத் தமது அறுவடைக்கு அனுப்பும் படி அவறுவடையின் உரிமையாளரிடம் மன்றாடுங்கள்" என்றார். (மத்தேயு 9 : 37).



இதிலிருந்து எமக்கு தெளிவுறுத்துவது, இறைவனே திருச்சபையிடம் விசுவாச விதையை விதைக்கும் அந்த பொறுப்பை கொடுத்திருக்கிறார்.

திருமுழுக்கினூடாக இறைவனைப் பின்பற்றும் அனைவரும் பொது குருத்துவத்தினூடாக இறைவார்த்தையை பரப்பும் பொறுப்பை ஏற்றுள்ளனர். இன்னும் சிலரை விசேட விதமாக அவரிடத்தில் அழைக்கின்றார். "தாம் விரும்பியவர்களைத் தம்மிடம் வரவழைத்தார். அவர் பன்னிருவரை நியமித்தார்" (மாற்கு 3 : 13 14).

சுங்கச் சாவடியில் அமர்ந்திருந்த லேவி என்னும் பெயருடைய வரி தண்டுபவரின் அழைப்பு இதற்கு உதாரணமாகும் (லூக்கா 5 : 27). பழைய ஏற்பாட்டில் தனக்கு வேண்டியவர்களை இறைவன் தனது விசேட வேலைக்கு எவ்வாறு தெரிவு செய்தார் என்பதை அறிவோம்.

ஆபிரகாம், மோயீசன், தாவீது, ஈசாக், ஏரேமியா மற்றும் யோனா ஆகியோரை இறைவன் தேர்ந்தெடுத்தார். பல பேர் இறைவனின் விருப்பத்திற்கு ஒத்துப் போனார்கள். ஆனாலும் சிலர் அவர்களது பாவத்தாலும் குறைபாடுகளாலும் இறைவனை விட்டு விலகிப் போக முயற்சித்தார்கள். ஆனால் இறைவன் அவர்களை ஊக்கப்படுத்தி தனது திட்டத்திற்கு அவர்களை தகுதியுடையவராக்கினார்.

அவர் பேசத் தெரியாது என்று கூறிய ஏசாயாவின் நாவை கொதிக்கும் கோலால் தொட்டார். அத்தோடு நினிவேக்கு போக விரும்பாத யோனாவை ஒரு மீனின் உதவியுடன் நினிவேக்கு கொண்டு வந்து மக்களின் மனதை மாற்ற வழி வகுத்தார். புதிய ஏற்பாட்டிலும் சிலர் இயேசுவின் அழைப்பை ஏற்க மறுத்தார்கள்.

"நீ போய் உமக்கு உள்ளவற்றை விற்று ஏழைகளுக்குக் கொடும். பின்பு வந்து என்னைப் பின்பற்றும்" என்று அவரிடம் கூறினார். இயேசு சொன்னதைக் கேட்டதும் அவர் முகம் வாடி வருத்தத்தோடு சென்று விட்டார். ஏனெனில் அவருக்கு ஏராளமான சொத்து இருந்தது. என்று மாற்கு நற்செய்தியாளர் இயேசு கூறியதாக குறிப்பிடுகிறார்.

இன்னுமொரு இடத்தில் இயேசு "கலப்பையில் கை வைத்தபின் திரும்பிப் பார்ப்பவர் எவரும் இறையாட்சிக்கு உட்படத் தகுதியுள்ளவர் அல்ல" என்றார்.

**ஜூட் ஆபிரகாம்**




# ஆண்டவர் இயேசுவின் உயிர்ப்பை உலகுக்கு முதலில் அறிவித்த புனித மகதலேனா மரியாள்

## அவரது திருவிழா ஜூலை 22 இல்

ஆண்டவர் இயேசு உயிர்த்தெழுந்தார் என்பதே கிறிஸ்தவ மறையின் தலையாய விசுவாசமும் நற்செய்தியும் ஆகும்.அதை முதன் முதலில் உலகுக்கு அறிவித்தது ஒரு பெண். அவள் தான் புனித மகதலேன் மரியா. கத்தோலிக்க திருச்சபையானது நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் உயிர்ப்பு விழாவுடன் தொடர்புடைய புனித மகதலேன் மரியாவின் திருவிழாவை ஜூலை 22ஆம திகதி சிறப்பிக்கின்றது.



திருத்தந்தை மகதலா மரியாளை நம்பிக்கையின் திருத்தூதராக சுட்டிக் காட்டுகின்றார்.புனித மகதலா மரியாள் திருத்தூதர்களுக்கு நற்செய்தியினை அறிவித்ததால்"மகதலா மரியா, நம்பிக்கையின் திருத்தூதர் என, நற்செய்தியால் சுட்டிக்காட்டப்படுகிறார்.

இயேசு, உயிர்த்த நாளின் காலையில், மரியா, இயேசுவின் கல்லறைக்குச் சென்றார், காலியான கல்லறையை அவர் கண்டார், பின், இந்தச் செய்தியை, பேதுருவிடமும் மற்ற சீடர்களிடமும் சொல்வதற்காக அங்கிருந்து திரும்பினார் என, புனித யோவான் நற்செய்தியில் தெரிவித்துள்ளார்.என்ன நடந்தது என்பதை அறியாத நிலையில், மரியா கல்லறைக்குச் சென்றார், அங்கே உயிர்த்த ஆண்டவரைச் சந்தித்தார்,அவர், மரியாவை, பெயர் சொல்லி அழைக்கும்வரை, அவரை யார் என மரியா அறியாமல் இருந்தார். இறந்தோரிடமிருந்து இயேசு உயிர்பெற்றெழுந்தபின், இது அவர் அளித்த முதல் காட்சியாகும். இக்காட்சி, மிகவும் ஓர் ஆழமான தனிப்பட்ட நிகழ்வாக உள்ளது. இயேசு, மகதலா மரியாவை அழைத்தது போன்று, நம் ஒவ்வொருவரையும் பெயர் சொல்லி அழைக்கிறார். தம் பிரசன்னத்தால் நம்மை மகிழ்வால் நிரப்புகிறார். இயேசுவை நாம் சந்திக்கும்போது, அது நமக்குச் சுதந்திரத்தைக் கொணர்ந்து, வாழ்வை புதிய கோணத்தில் பார்ப்பதற்கு, நம் பார்வையைத் திறந்து வைக்கின்றது. அது எமக்கான இந்த உலகை மாற்றுகின்றது மற்றும் இறவா நம்பிக்கையை நமக்கு அளிக்கின்றது.உயிர்த்த ஆண்டவர், மரியாவிடம், என்னை பற்றிக் கொள்ளாதே, மாறாக, போய், உயிர்ப்பின் நற்செய்தியை மற்றவருக்கு அறிவி என்று சொன்னார். இவ்வாறு, மகதலா மரியா, கிறிஸ்தவ நம்பிக்கையின் திருத்தூதராக மாறுகிறார்.நாமும், இவரின் செபங்களின் வழியாக உயிர்த்த ஆண்டவரைப் புதிதாகச் சந்திக்க விழைவோம். உயிர்த்த ஆண்டவர், நம்மைப் பெயர் சொல்லி அழைக்கின்றார், நம் துன்பங்களை மகிழ்வாக மாற்றுகின்றார் மற்றும், அவர் உண்மையிலேயே உயிர்பெற்றெழுந்தார் என்பதை, நம் வாழ்வால் அறிவிப்பதற்கு நம்மை அனுப்புகிறார்." அப்போஸ்தலர்களுக்கு அப்போஸ்தலி .திருத்தூதர்களுக்கு திருத்தூதுரைத்தவள் மகதலேனா மரியா.

திருத்தந்தை பிரான்சிஸ் மகதலா மரியாளின் நினைவு நாளை அப்போஸ்தலர்களை போலவே திருவிழாவாக மாற்றினார்.அதில் மகதலா மரியாளின் சிறப்பான அப்போஸ்தலிக்கப் பணியானது சுட்டிக்காட்டப்படுகிறது. "ஆண்டவர் இயேசு உயிர்த்தெழுந்தார் " என்பதே கிறிஸ்தவ மறையின் தலையாய விசுவாசமும் நற்செய்தியும் ஆகும்(1 கொரிந்தியர் 15:14).அதை முதன் முதலில் உலகுக்கு அறிவித்தது ஒரு பெண். அவள் தான் மகதலா மரியாள். ஏதேன் தோட்டத்தில், வாழ்வு நிறைந்திருந்த நிலையில் ஏவாள் என்னும் முதல் அன்னை மனிதனுக்கு சாவினை கனி வழியாக அறிவித்தாள். கெத்சமணி தோட்டத்தில் , சாவும் துயரமும் நிறைந்திருந்த நிலையில் மகதலா மரியாள் என்னும் அன்னை மனிதனுக்கு வாழ்வினை நற்செய்தி என்னும் இயேசுவின் கனி வழியாக அறிவித்தாள். இதை புனித தோமா அக்குவினாரும் குறிப்பிட்டுள்ளார். புனிதர்களில் இத்தகு சிறப்பு பெயரை தாங்கியுள்ள ஒருவர் புனித மகதலா மரியாள் என்பது குறிப்பிடப்பட்டது. கெத்சமணி தோட்டத்தில் இயேசுவை காணாத மகதலா மரியாள் கண்ணீர் வடித்தாள் என்று திருவிவிலியம் கூறுகின்றது . அவளின் அன்புக்கண்ணீரை புனித அன்ஸ்லம் "தாழ்ச்சியின் கண்ணீர் " என்று குறிப்பிடுகின்றார்.

**திருமதி எனீடா யோகராணி**

# உடன்படிக்கையின் பேழையாக புனித அன்னை மரியாள்

தேவமாதா எப்பொழுதும் நீலநிற உடையில் காட்சியளிப்பது ஏன்?

நாமும் ஏன் தேவமாதாவின் திருநாள், மற்றும் மாதாவிற்கான முக்கிய தினங்களில் நீலநிற ஆடைகளை அணிகிறோம்? என்ற கேள்விகள் எமக்குள் எழலாம்.

தேவ மாதாவின் காட்சிகள், ஓவியங்களில் பொதுவாக காணப்படும் நிறம் நீலம். நீலநிறம் பரலோகத்தையும் உன்னதத்தையும் அற்புதங்களையும் உணர்த்துகிறது.



எண்ணாகமம் அதிகாரம் 15 37 முதல் 40 வரை உள்ள வசனங்களில் கடவுள் இவ்வாறு கூறுகிறார். "மேலும் ஆண்டவர் மோசேயிடம் கூறியது: இஸ்ரயேல் மக்களிடம் நீ பேசு; அவர்கள் தலைமுறைதோறும் தங்கள் உடைகளின் முனைகளில் குஞ்சங்கள் செய்து ஒவ்வொரு குஞ்சத்திலும் ஒரு நீல நாடாவைக் கட்டச்செய்; நீங்கள் ஒழுக்கம் கெட்டு நடப்பதற்கு ஏதுவாய் உங்கள் இதயங்களும் உங்கள் கண்களும் விரும்புவதைப் பின்பற்றாமல் நீங்கள் அவற்றைப் பார்த்து ஆண்டவர் கட்டளைகள் அனைத்தையும் நீங்கள் நினைவுகூர்ந்து அவற்றைச் செய்திடவே இக்குஞ்சம். அதனால் நீங்கள் என் கட்டளைகளையெல்லாம் நினைவில் கொண்டு அவற்றை நிறைவேற்றுவீர்கள், உங்கள் கடவுளுக்கு அர்ப்பணிக்கப்பட்டவர்களாயிருப்பீர்கள்."அன்





னையும் தன் வாழ்நாள் முழுவதிலும் கடவுளின் கட்டளைகளை கடைப்பிடித்து, பாவத்திலிருந்து விலகியே வாழ்ந்தார். கபிரியேல் தூதர் இயேசுவின் பிறப்பை முன்னறிவித்தபோது தன்னையே அர்ப்பணித்தார்.

(லூக்கா 1:38) "பாளையத்தினர் புறப்பட்டுச்செல்லும்போது ஆரோனும் புதல்வரும் உள்ளே சென்று மூடுதிரையை இறக்கி அதனைக் கொண்டு உடன்படிக்கை பேழையை மூடுவர்; பின் வெள்ளாட்டுத் தோலால் அதனை மூடி கருநீலமான ஒரு துணியை அதன்மேல் விரித்து நிலைக் கால்களில் வைப்பர்."

(எண்ணாகமம் 4:56)

நாமும் அன்னையை உடன்படிக்கையின் பேழையாக, வாக்குத்தத்தத்தின் பெட்டகமாக உருவகப்படுத்துவதால் அன்னை மாமரியாள் நீலநிற உடையில் தோன்றுகிறார்கள்.

தேவமாதாவிற்கு நீல நிற ஆடை உடுத்துவதன் நோக்கமும் அதற்கான தகுதியையும் நாம் அறிந்து பரிசுத்தமாக நம்மை மாற்றிக் கொள்ள மாதாவின் அருள் நாடுவோம்.

**எல்.எஸ்**

# உழைப்புக்குப் பின்னரான ஓய்வு நற்செய்தியில் இயேசு தரும் படிப்பினை

கடுமையாக உழைக்கும் மனிதர்களுக்கு சற்று ஓய்வு தேவை அந்த ஓய்வை எவ்வாறு பெற்றுக் கொள்வது? அந்த ஓய்வு எதற்காக? என்பது தொடர்பில் கடந்த ஞாயிறு நற்செய்தியில் இயேசு சொல்லித்தருந்தார்.

கடந்த ஞாயிறு நற்செய்தி வாசகம் அந்த நமக்கு தெளிவாக எடுத்துக் கூறுகின்றது.

திருத்தூதர்கள் இயேசுவிடம் வந்து கூடித் தாங்கள் செய்தவை, கற்பித்தவையெல்லாம் அவருக்குத் தெரிவித்தார்கள். அவர் அவர்களிடம், "நீங்கள் பாலைநிலத்திலுள்ள தனிமையான ஓர் இடத்திற்குச் சென்று சற்று ஓய்வெடுங்கள்" என்றார். ஏனெனில் பலர் வருவதும் போவதுமாய் இருந்ததால், உண்பதற்குக்கூட அவர்களுக்கு நேரம் கிடைக்கவில்லை.

தங்கள் அருள்பணியில் நிகழ்ந்தவற்றை, ஆர்வத்துடன், பரபரப்புடன் பகிர்ந்துகொண்ட சீடர்களுக்கு இயேசு சொன்ன வார்த்தைகள் ஏமாற்றத்தைத் தந்திருக்க வேண்டும். 'நீங்கள் பாலைநிலத்திலுள்ள தனிமையான ஓர் இடத்திற்குச் சென்று சற்று ஓய்வெடுங்கள்'

மேலோட்டமாகப் பார்க்கும்போது, இயேசுவின் இந்தக் கட்டளை பொருத்தமற்றதாகத் தெரிகிறது. மக்கள் மத்தியில் கடுமையாக பணிபுரிந்து திரும்பி வந்துள்ள சீடர்களைப் பாலைநிலத்திற்குப் போகச் சொன்னதற்குப் பதில், "சீடர்களே, பிரமாதம், இன்னும் பல இடங்களுக்குச் சென்று போதியுங்கள், அருஞ்செயல்களை ஆற்றுங்கள்" என்று இயேசு உற்சாகப்படுத்தி அனுப்பியிருக்க வேண்டாமா?

தன்னலம் மிக்க ஒரு சராசரித் தலைவன் தன்னுடைய சீடர்களுக்கு இவ்விதக் கட்டளையைத் தந்திருப்பார். சராசரித் தலைவனுக்குத் தேவையானதெல்லாம், அவரது கொள்கைகள், அவரது பெயர் மக்கள் மத்தியில் மீண்டும், மீண்டும் ஒலிக்கவேண்டும். இந்தச் சுயநலத் தேவைக்காக தன் தொண்டர்களைத் தலைவன் பயன்படுத்திக் கொள்வார். தொண்டர்களை இவ்விதம் பயன்படுத்தி, தன் தேவைகள் நிறைவடைந்ததும், அவர்களைத் தூக்கி எறியும் எத்தனைத் தலைவர்களை நாம் பார்த்திருக்கிறோம்?

தங்கள் சுயநலத்திற்காகப் பிறரைப் பயன்படுத்தும் தலைவர்களைப்போல், தவறாக வழிநடத்தும் போலியான மேய்ப்பர்களைப்பற்றியும், அவர்களை இறைவன் எவ்விதம் தண்டிப்பார் என்பதைப்பற்றியும் கடந்த ஞாயிறு முதல் வாசகத்தில் இறைவாக்கினர் எரேமியா தெளிவாகக்கூறுகிறார். போலி மேய்ப்பர்களைத் தண்டிப்பதாகக் கூறும் இறைவன், ஆடுகளைப் பேணிக்காக்கும் நல்ல மேய்ப்பர்களை அனுப்புவதாகவும் வாக்களிக்கிறார். இந்த வாக்குறுதியின் உச்சக்கட்டமாக இறைவன் அனுப்பியவரே இயேசு. அந்த நல்ல ஆயன் தன் சீடர்கள்மீது உண்மையான அக்கறை கொண்டிருப்பதை



அந்த நற்செய்தியில் நாம் வாசிக்கிறோம்.நல்லாயன் இயேசுவுக்கு, தன் பணிகளும், கொள்கைகளும் முக்கியம்தான். ஆனால், அதே வேளை, அப்பணிகளைச் செய்யும் சீடர்களும் மிகவும் முக்கியம். பணி செய்து திரும்பியுள்ள சீடர்களின் நலனுக்கு முக்கியத்துவம் கொடுத்து, அவர்களை ஓய்வெடுக்கும்படி பணிக்கிறார் இயேசு.

உடலுக்கும், உள்ளத்திற்கும் புத்துயிர் தரும் மருந்து ஓய்வு. உடல் ஓய்வெடுக்கும் நேரத்தில் நமது உள்ளம் விழித்தெழுந்து, நாம் செய்த வேலைகளை, நமது அன்றைய நாளை அலசிப் பார்க்கவும் வாய்ப்பு கிடைக்கும். வாய்ப்பு கிடைக்கும்போது, அல்லது வாய்ப்புக்களை உருவாக்கிக்கொண்டு வாழ்வை அலசிப்பார்ப்பது பல வழிகளில் பயனளிக்கும். ஒவ்வொரு நாளும் இந்த அலசலுக்கு நேரம் ஒதுக்கினால், பல பிரச்சனைகளுக்குத் தீர்வு கிடைக்கும். இதைத்தான் புனித லொயோலா இஞ்ஞாசியார் தன் ஆன்மீகப் பயிற்சிகளில் நமக்குக் கற்றுத்தந்துள்ளார்.

புனித இஞ்ஞாசியார் கற்றுக்கொடுத்த ஆன்மீகப் பயிற்சிகளில் ஒரு முக்கியக் கூறு... ஒவ்வொரு நாளும் பத்து அல்லது பதினைந்து நிமிடங்களை ஒதுக்கி, அந்நாளைப் பற்றிய ஆன்மீகத்தேடலை மேற்கொள்வது.

'ஆன்மீக ஆய்வு' என்ற இந்த பயிற்சிக்குப் புனித இஞ்ஞாசியார் தலையாய இடம் கொடுத்திருந்தார். ஒரு நாளில் தியானம், செபம் என்ற மற்ற ஆன்மீக முயற்சிகளில் ஈடுபட ஒருவருக்கு நேரம் இல்லை என்றாலும், ஆன்மீக ஆய்வுக்குக் கட்டாயம் நேரம் ஒதுக்கவேண்டும் என்று அவர் வலியுறுத்தினார்.

புனித இஞ்ஞாசியார் கற்றுத்தந்த இந்த ஆன்மீக ஆய்வு, துறவு வாழ்வில் உள்ளவர்கள் மட்டும் பின்பற்றும் வழிமுறை அல்ல. நம் அனைவருக்குமே தேவையான ஒரு சிறந்த பாடம்.

காலையில் எழுந்தது முதல், இரவு படுக்கப் போகும்வரை, பல நூறு வேலைகளால் நமது நாள் நிறைந்துவிடுகிறது. இவற்றில், மேலோட்டமாகச் செய்யும் பணிகள், முழு ஈடுபாட்டுடன் செய்யும் பணிகள் என்று பலவகைப் பணிகள். 'ரொக்கெட்' வேகத்தில் மிகத் துரிதமாக இயங்கும் இவ்வுலகில், உண்பது, குளிப்பது, உடற்பயிற்சி செய்வது, உறங்குவது போன்ற தனிப்பட்ட தேவைகளை நிறைவேற்றினோமா என்ற கேள்வி பல நாட்கள் நமக்குள் எழும் அளவுக்கு நாம் வேகமாகச் செல்கிறோம்.

*மிகுதி அடுத்த வாரம்...*

**அருட்தந்தை எல்.எக்ஸ். ஜெரோம்**

# புத்த பெருமானின் திருவுருவ சிலை ஸ்தாபித்து மறைந்த ரயில்வே GM நினைவு கூரப்பட்டார்





கடமையிலிருந்த போது திடீரென காலமான முன்னாள் ரயில்வே பொது முகாமையாளர் எச்.எச். கே டபிள்யூ கே. பண்டாரவை நினைவுகூரும் வகையில், அமைக்கப்பட்ட புத்தர் சிலையை போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் வெகுஜன ஊடகத்துறை அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தன திறந்து வைத்தார்.

அன்னார் மறைந்து மூன்று மாதங்கள் நிறைவடைந்துள்ள தினத்தில் இந்தச் சிலை திறக்கப்பட்டது. இலங்கை ஜெர்மன் ரயில்வே தொழில்நுட்ப பயிற்சி நிலைய வளாகத்தில் இந்தச் சிலை நிறுவப்பட்டுள்ளது.

அமைச்சரின் தனிப்பட்ட நிதியுதவியுடன், உமந்த பௌத்த விஸ்வகிராமத்தின் ஸ்தாபகர் சிறி சமந்த பத்ர நாயக்க தேரரின் ஆலோசனைக்கு அமைய சமாதி முத்திரையுடன் கூடிய இந்த புத்தர் சிலை உருவாக்கப்பட்டுள்ளது.

இங்கு உரையாற்றி அமைச்சர் தெரிவித்ததாவது:

“நூறு ஆண்டுகளுக்கும் மேலான இலங்கை புகையிரத சேவையில் முதன்முறையாக நன்றி தெரிவிக்கும் நிகழ்வாக இந்த சமய நிகழ்ச்சியை அறிமுகப்படுத்தலாம். முன்னாள் பொது முகாமையாளர் எச்.எம். கே.டபிள்யூ. பண்டார நிறுவனத்தின் வளர்ச்சிக்காக பெரும் பங்காற்றியவர். அநுராதபுரம் பகுதியில் கடமையாற்றிய போது, காலமான அவரின் நினைவாக இந்த புத்தர் சிலை திறப்புவிழா நடத்தப்படுகிறது

ரயில்வே திணைக்களத்தின் அனைத்து அதிகாரிகளின் பங்களிப்புடன், இலங்கை ஜெர்மன் ரயில் தொழில்நுட்ப பயிற்சி நிலையம் இருக்கும் வரை, இந்த சமாதி புத்தர் சிலையை வணங்குவதன் மூலம் கிடைக்கும் அனைத்து புண்ணியங்களும் பண்டார அவர்களுக்கு கிடைக்கும் என நாங்கள் நம்புகிறோம்." என அமைச்சர் தெரிவித்தார்.

# ஜோ பைடன் விலகியதால் கமலா ஹாரிஸ் பரிந்துரை



அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் இரண்டாவது முறையாகப் போட்டியிடுவதிலிருந்து விலகுவதாக அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் அறிவித்துள்ளார்.

இந்த நிலையில் தேர்தலில் ஜனநாயக கட்சி வேட்பாளராக, அமெரிக்காவின் தற்போதைய துணை ஜனாதிபதி கமலா ஹாரிஸ் போட்டியிடுவதற்கு ஜோ பைடன் பரிந்துரைத்துள்ளார்.

எதிர்வரும் நவம்பர் மாதம் அமெரிக்காவில் ஜனாதிபதித் தேர்தல் இடம்பெறவுள்ளது.

தமது கட்சி மற்றும் நாட்டின் நலனுக்காகத் தேர்தல் போட்டியிலிருந்து விலகுவதற்கு தீர்மானித்துள்ளதாக ஜோ பைடன் குறிப்பிட்டுள்ளார்.

ஜூன் மாத பிற்பகுதியில் தம்மை எதிர்த்துப் போட்டியிடும், அமெரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி டொனால்ட் டிரம்பிற்கு எதிரான விவாதத்தில் ஏற்பட்ட தடுமாற்றத்தின் பின்னர், சக ஜனநாயகக் கட்சியினரிடையே ஜனாதிபதி ஜோ பைடன் கடுமையான விமர்சனத்துக்கு உள்ளானார். அதேநேரம், டொனால்ட் டிரம்பின் குடியரசுக் கட்சியினர் உள்ளிட்ட பலர் ஜோ பைடன் பதவி விலக வேண்டும் என வலியுறுத்தி வருகின்றனர். இந்த நிலையில் அமெரிக்க மக்களின் நலன்களுக்காகக் கடினமான முடிவை எடுத்தமைக்காக ஜனாதிபதி ஜோ பைடனுக்கு பிரித்தானியப் பிரதமர் கெய்ர் ஸ்டார்மர் உட்பட பல நாடுகளின் தலைவர்கள் பாராட்டுக்களைத் தெரிவித்துள்ளனர்.

# பதுளையில் ஊடகவியலாளர் ஜெயக்குமார் காலமானார்



ஊடகவியலாளராக சுமார் 30 வருடங்கள் கடமையாற்றிய டி.ஜெயக்குமார் (63) கடந்த (21) காலமானார்.

ஊவாவிலுள்ள ஊடகவியலாளர்களுக்கு மத்தியில், மும்மொழிகளிலும் எழுதுகோலை கையாண்ட ஜெயக்குமார், லேக்ஹவுஸ் நிறுவனத்தின் பதுளை பிரதேச பிராந்திய நிருபராக ஊடகத்துறையில் பிரவேசித்தார். பின்னர், அவர் திவயின பத்திரிகையில் இணைந்து பணியாற்றிய அவ, தொழில்சார் மொழி பெயர்ப்பாளராகவும்செயற்பட்டார்.

சிரச தொலைக்காட்சியின் நீதிமன்ற நிருபராகவும், பதுளை தொழிலாளர் இணக்கசபையில் மற்றும் கொழும்பு மேல் நீதிமன்றத்தின் மொழிபெயர்ப்பாளராகவும் பணியாற்றிய அவர் ஏழு மொழிகளை மொழி பெயர்க்கும் ஆற்றலைக் கொண்டிருந்தார். பதுளை பிரதேசத்திலிருந்து கொழும்பு பிலியந்தலை பிரதேசத்துக்குச் சென்று சிரச ஊடகத்தின் நீதிமன்ற நிருபராகவும், ராவய பத்திரிகையின் குழு எழுத்தாளராகவும் பணியாற்றினார்.

பின்னர் அவர் கொழும்பில் புதுக்கடை நீதிமன்ற வளாகத்திற்கு அருகில் உள்ள ஜே.கே.சத்தியப்பிரமாண மொழி பெயர்ப்பு நிறுவனத்தை நிறுவினார். தனது எழுதுகோலை இயக்கிய டி.ஜெயக்குமாரால் பல நூல்கள் எழுதப்பட்டன. டி.ஜெயக்குமாரின் பூதவுடல் பொதுமக்கள் அஞ்சலிக்காக பிலியந்தலையில் இலக்கம் 240 குடாமாதுவ இல்லத்தில் வைக்கப்பட்டுள்ளதுடன் இறுதிக்கிரியைகள் நாளை (24) பிலியந்தலையில் நடைபெறவுள்ளது.

## டெங்கு, வெள்ளத்தை கட்டுப்படுத்த...

சுட்டிக்காட்டியுள்ளார். கொழும்பு தாஜ் சமுத்ரா ஹோட்டலில் நடைபெற்ற இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் கொழும்புக் கிளையால் நடத்தப்படும் வெள்ள அபாயங்கள் மற்றும் டெங்கு ஒழிப்பு பிரச்சாரத்தின் ஆரம்ப நிகழ்வில் பங்குபற்றிய போதே, சாகல ரத்நாயக்க இதனை தெரிவித்துள்ளார்.மேலும் இங்கு கருத்து தெரிவித்த சாகல ரத்நாயக்க கூறியதாவது:

"அனர்த்தம் ஏற்படும் சந்தர்ப்பத்தில், அரசாங்கம், பல்வேறு அமைப்புகள், நாடுகள் பெருமளவில் பணம் செலவிட வேண்டியுள்ளது. வெள்ள நிலை ஏற்படுவதற்கு முன்பே அதைத் தணிக்க நடவடிக்கை எடுத்தால், செலவழிப்பதை விட அதிகப் பணத்தைச் சேமிக்க முடியும்.

டெங்குவைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கைகளுக்கான செலவு, டெங்கு நோய்க்கான சுகாதார சேவைகளின் செலவை விட மிகக் குறைவாக இருக்கும் என்பதையும் கூற வேண்டும். உயிரிழப்பு மற்றும் குடும்ப உறுப்பினர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளை பணத்தால் மதிப்பிட முடியாது.

## தமிழர் தரப்பு ஜனாதிபதி வேட்பாளர்...

தரப்பிலிருந்து பொது வேட்பாளர் ஒருவரை நிறுத்துவதற்கான நடவடிக்கைகள் அண்மைக் காலமாக முன்னெடுக்கப்பட்டன.

இந்நிலையில் இரு தரப்பினர்களுக்குமிடையிலும் பல்வேறு விடயங்களை உள்ளடக்கி ஒப்பந்தம் கைச்சாத்தானது. இந்த உடன்படிக்கையில், பாராளுமன்ற உறுப்பினர்களான சி.வி விக்கினேஸ்வரன், செல்வம் அடைக்கலநாதன், தர்மலிங்கம் சித்தார்த்தன் ஆகியோரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமசந்திரன், வடமாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் பொ.ஐங்கரநேசன், சட்டத்தரணி ந.ஸ்ரீகாந்தா உள்ளிட்ட அரசியல்வாதிகளும், அரசறிவியல்துறை பேராசிரியர் கே.ரி கணேசலிங்கம், யதீந்திரா உள்ளிட்ட சிவில் சமூக செயற்பாட்டாளர்களும் ஒப்பந்தத்தில் கையொப்பமிட்டனர்.

## தேர்தல் அறிவிக்கப்பட்டதும்...

அட்டை உள்ளிட்டவற்றை பகிர்ந்தளிக்கும் நடவடிக்கைகள் தொடர்பிலும் பிரதி தபால் மாஅதிபர் இதன் போது தெளிவுபடுத்தியுள்ளார்.

அந்த வகையில் வாக்காளர் அட்டை பத்திரங்களை வீடுகளுக்கு பகிர்ந்தளிப்பதற்காக 8,000 ஊழியர்களை ஈடுபடுத்த திட்டமிட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

தபால் வாக்களிப்புக்காக உரிய அனைத்து ஆவணங்களையும் பாதுகாப்பாக பரிமாற்றம் செய்வதற்கான நடவடிக்கைகளை தபால் திணைக்களம் பொறுப்பேற்று மேற்கொள்ளவுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

## சுகாதாரத்துறையை பலப்படுத்த...

வழங்கல் பிரிவில் நடைபெற்றது.

இதற்கான விஷேட வைபவத்தின் போது வாகனங்களை சுகாதார மற்றும் கைத்தொழில் துறை அபிவிருத்தி அமைச்சர் ரமேஷ் பத்திரண, ஜப்பானிய தூதுவர் மிசுகோசி ஹிடெகி மற்றும் இலங்கையிலுள்ள பதில் யுனிசெப் பிரதிநிதி பெகோனா எரலானோ ஆகியோரிடமிருந்து உத்தியோகபூர்வமாக பெற்றுக் கொண்டார்.

யுனிசெப் நிறுவனம் இதற்கான இணைப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தது.

## லால் காந்தவுக்கு எதிராக...

பலகையை அகற்ற முற்பட்டதாக கூறப்படும் சம்பவத்தை அடிப்படையாகக்கொண்டு, கே.டி.லால் காந்த, கண்டி கூட்டத்தில் தம்மை தூற்றி அச்சறுத்தியதாக தெரிவித்தே, கண்டி மாநகர சபையின் முற்றுகைப் பிரிவின் தலைமை அதிகாரி அனுர வஸ்கேவத்த என்பவர் கண்டி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடுசெய்துள்ளார். சம்பவம் தொடர்பில் கண்டி மாநகர ஆணையாளரிடம் வாக்குமூலம் பெற்றுக்கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக, கண்டி பொலிஸார் தெரிவித்தனர். தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அனுரகுமார திஸாநாயக்க தலைமையில் கடந்த (16) கண்டி மத்திய சந்தைக்கு முன்பாக நடைபெற்ற பிரசாரக்கூட்டத்தின் போது இந்த அச்சுறுத்தலை விடுத்ததாக தெரிவித்து, வஸ்கேவத்த என்ற நபர் பொலிஸாரிடம் இது தொடர்பான ஒளிநாடா பதிவு ஒன்றையும் சமர்ப்பித்துள்ளார்.

## வளிமண்டல திணைக்களம்...

கொந்தளிப்பாக காணப்படக் கூடும் என, அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த கடற்பரப்புகளில் மீன்பிடி தொழிலில் ஈடுபடுவோர் உடனடியாக கரையின் பாதுகாப்பான பகுதிகளுக்கு வருமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

## ஈஸ்டர் தாக்குதலின் பிரதான...

முஸ்லிம் அடிப்படைவாத கும்பல், மக்கள் விடுதலை முன்னணி மற்றும் நல்லாட்சி அரசாங்கத்தில் இருந்த ஐக்கிய மக்கள் சக்தியினரிடமே ஒழிந்து கொண்டது.

இவ்வாறிருக்கையில், ஜப்பானுக்கு சென்றுள்ள அனுரகுமார திசாநாயக்க அங்கு ஒரு நிகழ்வில் உரையாற்றும் போது தாம், ஆட்சிக்கு வந்தால் ஈஸ்டர் குண்டுத் தாக்குதல் தொடர்பில் ஆரம்பம் முதல் இறுதி வரை ஆராய்வதாக தெரிவித்திருந்தார்.இச் செய்தியை இரண்டு தினங்களுக்கு முன் நான்,அவதானித்தேன்.

இவர்களுக்குத்தான் அந்த ஆரம்பமும் முடிவும் தெரியும். ஏனென்றால் அவர்களிடமே ஈஸ்டர் குண்டு தாரிகளான அடிப்படை வாதிகள் ஒளிந்திருந்தனர். அத்துடன் ஈஸ்டர் குண்டுத் தாக்குதல் சம்பவம் தொடர்பில் நான் அறிந்த போது, பேராயர் கர்தினாலுடன் அது தொடர்பில் தெரிவித்தேன். சஹ்ரான் தொடர்பிலும் காத்தான்குடி சம்பவம் தொடர்பிலும் நான் அவருக்கு தெளிவுபடுத்தினேன். அவரும் இது தொடர்பில் தெரியவந்துள்ளதாக எனக்கு கூறினார்.

இவ்வாறு எம்மால் வெளியிடப்பட்ட இஸ்லாமிய அடிப்படைவாதிகள், ஜேவிபி மற்றும் ஐக்கிய மக்கள் சக்தியினரிடமேதான் ஒளிந்திருந்தனர்.

## எலான் மஸ்க் அடுத்த மாதம்...

விஜயம் அமையுமென எதிர்பார்க்கப்படுகிறது. இந்த இணைய வசதி சேவையை இலங்கையில் வழங்குவதற்கு இலங்கை அரசாங்கம் முன்னதாக அனுமதி வழங்கியுள்ளது.

இதற்கமைய தொலைத்தொடர்பு ஒழுங்குமுறை ஆணையமும் இதற்கான ஒப்புதலை வழங்கியுள்ளது.

*Star link* செயல்பாடுகளுக்குத் தேவையான விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகள் தற்போது வேகமாக உருவாக்கப்பட்டு வருகின்றன.

## கல்குவாரியில் நீராடச் சென்ற...

நேற்று முன்தினம் இரவு மீட்கப்பட்டன. அத்துடன், இரு சிறுமிகளின் சடலங்களையும் தேடும் பணிகள் தொடர்ந்த நிலையில், நேற்றுக்காலை இவர்களின் சடலங்கள் மீட்கப்பட்டன.

## லால் காந்தவினால் அரச...

இவர்கள் இப்போதே இவ்வாறென்றால் அதிகாரம் கிடைத்தால் எவ்வாறு செயல்படுவார்கள் என்றும் சுகீஸ்வர பண்டார கேள்வி எழுப்பியுள்ளார்.

புதிய மக்கள் முன்னணியில் கோட்டே தொகுதி மக்கள் பேரணிக் கூட்டத்தில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அங்கு மேலும் உரையாற்றியுள்ள அவர்,

2022 ஜூலை 09 இல், உங்கள் பிள்ளைகள் செயற்பட்டது போன்றே இன்று பங்களாதேஷிலும் இடம் பெறுகிறது. அதே போன்று நடுவீதியில் படுகொலை செய்வதற்கு அனுரகுமார, லால் காந்த போன்றவர்கள் மேற்கொண்ட திட்டத்தை கோட்டாபயவும்,ஜனாதிபதி ரணிலும் உணர்ந்ததால்தான் இன்று உங்கள் பிள்ளைகள் உயிருடன் உள்ளார்கள் என்பதை மறந்து விட வேண்டாம்.

இதுதான் சமாஜவாதி பயங்கரவாதத்தில் காணப்படும் மிக மோசமான நிலை. இவர்கள் உலகில் எங்கு போராட்டம் மேற்கொண்டாலும் அங்கெல்லாம் இளைஞர்களின் உயிர்கள் இழக்கப்பட்டுள்ளன.

மக்கள் விடுதலை முன்னணியின் ஜூலை 09 "கேம்" நடந்திருந்தால் அது இலட்சங்களாகியிருக்கும்.

இதுபோன்ற சமாஜவாதி பயங்கரவாத தலைவர்கள் தமது மேடைகளில் தமக்கு எதிராக அரசியல் கருத்துக்களை தெரிவிப்பவர்களுக்கு அச்சுறுத்தல் விடுக்க ஆரம்பித்துள்ளனர்.

மக்கள் வாக்குகளினால் தெரிவு செய்யப்பட்ட ஜனாதிபதியை துரத்திவிட்டு நாட்டில் இரத்த ஆறு ஓட செயற்பட்ட வர்களுக்கு உரிய தண்டனை வழங்கியிருந்தால் இன்று இவ்வாறு செயற்பட மாட்டார்கள். வேறு நாடுகளில் இப்படி செயற்பட்டிருந்தால் இவர்கள் அனைவரும் இப்போது சிறையில் இருப்பர்.

## 25,000 பேரை ஆசிரியர் சேவையில்...

பாடசாலைகளுக்கும் 45 வயது என்ற உச்ச வயதெல்லையின் கீழ் மாகாண பாடசாலைகளுக்கும் அவர்களை நியமிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அந்த வகையில் மேற்படி நியமனங்கள் தொடர்பான அமைச்சரவைப் பத்திரத்தை விரைவில் அமைச்சரவையில் சமர்ப்பித்து அமைச்சரவையின் அங்கீகாரத்தைப் பெற்றுக் கொண்ட பின்னர், இந்த நியமனமனங்கள் வழங்கப்படும் என மேலதிக சொலிஸிட்டர் ஜெனரல் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பிலான விடயங்களை மனு ஒன்றின் மூலம் நீதிமன்றத்திற்கு சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# இன்றைய பலன்கள் (23.07.2024)



கலாநிதி சிவஸ்ரீ இராமசந்திர குருக்கள் பாபு சர்மா (ஸ்ரீ வித்யா ஜோதிட நிலையம் கொழும்பு)

**மேஷம்:**
பின்னர் செய்யலாமென்று தள்ளி வைத்த வேலையை உடனடியாக செய்ய வேண்டியது இருக்கும். காரியங்களில் சிறுசிறு தடைகள் இருந்தாலும் அவற்றை சமாளித்து முன்னேறுவீர்கள்.

**ரிஷபம் :**
உத்தியோகத்தர்கள் சிலருக்கு முயற்சியின் பெயரில் வெளியூர் மாற்றம் ஏற்படும். நண்பர்களால் பாராட்டு பெறுவீர்கள்.

**மிதுனம்:**
உங்கள் முயற்சிக்கு வெற்றியும் புகழும் கிடைக்கும். சிலருக்கு வீடு அல்லது மனை வாங்கும் யோகம் உண்டாகலாம். நீண்ட நாள் பார்க்காமல் இருந்த நண்பரை சந்திப்பதால் திடீர் திருப்பம் உண்டாகும்.

**கடகம்:**
வாழ்க்கையின் முன்னேற்றத்திற்கும் தொழில் வளர்ச்சிக்குமான செயல்களில் ஈடுபடுவீர்கள். நீண்ட எதிர்பார்ப்பிற்கு பின் முக்கியமான காரியம் ஒன்று நடந்தேறும்.

**சிம்மம்:**
எதிர்பார்க்கும் இடங்களில் இருந்து பணம் வந்து சேரும். சகோதரி வழியில் மன வருத்தம் ஏற்படக்கூடும். எனவே பேச்சில் கடுமையை குறைப்பது நல்லது.

**கன்னி:**
நீங்கள் எடுக்கும் முயற்சிகளில் சிறிது தடை ஏற்பட்டாலும் தெய்வ பலத்தினால் அந்த தடைகளில் இருந்து விடுபட்டு முன்னேறுவீர்கள்.

**துலாம்:**
இந்த வாரம் இடையில் ஏற்பட்ட சிறுசிறு தடங்கல்களை இன்முகத்தோடு எதிர்கொண்டு தொடர் முயற்சியால் வெற்றி பெறுவீர்கள். வீடு அல்லது மனை வாங்கும் யோகம் உண்டாகும்.

**விருச்சிகம்:**
முக்கிய ஆவணங்களில் கையெழுத்து இடுவதை தவிர்க்கவும். உறவினர் இல்லத்து நிகழ்ச்சியில் மனைவி மக்களுடன் கலந்து கொள்வீர்கள்.

**தனுசு:**
செய்யும் காரியங்கள் நீங்கள் எதிர்பார்த்தபடி நடைபெறாமல் போகலாம். சேமிப்புகளை செலவழிக்க வேண்டிய நிர்ப்பந்தம் உண்டாகும். என்றாலும் முக்கியமானவர்களின் துணை கொண்டு வெற்றியை நோக்கி முன்னேறுவீர்கள்.

**மகரம்:**
கவனத்தோடும் நிதானத்தோடும் பணிகளில் ஈடுபடுவது அவசியம். நிச்சயமாக நடைபெறும் என்று நம்பிய காரியம் முடிவடையாமல் இழுத்தடிக்க படலாம்.

**கும்பம்:**
வாழ்க்கையில் முன்னேறவும் வசதிகளை பெருக்கிக் கொள்ளவும் பாடுபடுவீர்கள். உத்தியோகத்தர்களில் சிலர் சக பணியாளர்களின் மூலமாக பிரச்சனையை சந்திக்க நேரிடும்.

**மீனம்:**
இந்த வாரம் செய்ய வேண்டிய பணிகளை சிறப்பாக செய்து வெற்றி பெறுவீர்கள். நீண்ட காலமாக சந்திக்காத நபர் ஒருவரை சந்தித்து மகிழ்வீர்கள்.

## 2024; நடுப்பகுதி... (3ஆம் பக்கத் தொடர்ச்சி)

இதேவேளை, ஜூலை மாதம் மூன்றாவது வாரத்தின் முதல் நான்கு நாட்களில் 23,967 பேர் வருகை தந்துள்ளனர்.

ஜூலை 18 வரையான காலப் பகுதியில் 27,574 இந்திய சுற்றுலாப் பயணிகள் வருகை தந்துள்ளனர். இது நாட்டுக்கு வருகை தந்த மொத்த சுற்றுலாப் பயணிகளின் வருகையில் 25.2 சதவீதம் ஆகும். பிரிட்டன், சீனா, ஜேர்மனி மற்றும் நெதர்லாந்து ஆகிய நாடுகளிலிருந்தும் குறிப்பிடத்தக்க எண்ணிக்கையிலான சுற்றுலாப் பயணிகள் வருகை தந்துள்ளதாக சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை தெரிவித்துள்ளது.

## ஹிருணிகா பிணையில் விடுவிப்பு...

தனக்கு வழங்கப்பட்ட சிறைத் தண்டனைக்கு எதிராக ஹிருணிகா பிரேமச்சந்திர, மேன்முறையீடு செய்தார். இதையடுத்து, அவரை பிணையில் விடுவிக்குமாறு அவரது சட்டத்தரணிகள் முன்வைத்த பிணை கோரிக்கைக்குமைய இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

இதற்கமைய 50,000 ரூபா ரொக்கம் மற்றும் 5,00,000 ரூபா கொண்ட இரண்டு சரீரப் பிணைகளில் அவரை பிணையில் விடுதலை செய்யுமாறு நீதவான் உதரவிட்டார்.

பிணை உத்தரவுகளை அறிவித்த நீதிபதி, ஹிருணிகாவிற்கு வெளிநாடு செல்வதற்கும் தடை விதித்தார். ஹிருணிகா பிரேமச்சந்திர சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணி நளிந்த இந்ததிஸ்ஸ ஆஜராகியிருந்தார். சட்ட மாஅதிபர் சார்பில் மேலதிக சொலிசிட்டர் ஜெனரல் ஜனக பண்டார ஆஜராகியிருந்தார்.

ஹிருணிகா பிரேமச்சந்திரவின் பிணைக் கோரிக்கைக்கு ஆட்சேபனைகளை தாக்கல் செய்யவுள்ளதாக சட்ட மாஅதிபர், கடந்த அமர்வில் கொழும்பு மேல் நீதிமன்றத்தில் அறிவித்திருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

தெமட்டகொடை பகுதியிலுள்ள கடை ஒன்றில் பணிபுரிந்த அமில பிரியந்த அமரசிங்க எனும் இளைஞர் ஒருவரை 2015 டிசம்பர் 21இல், ஹிருணிகா பிரேமச்சந்திரவுக்கு சொந்தமான டிபெண்டர் வாகனத்தில் கடத்திய வழக்கு விசாரணையிலே இவருக்கு கடூழிய சிறைத்தண்டனை விதித்து கொழும்பு மேல் நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது.

## வட்டியில்லா கடன் வழங்கும்...

தலா 25 மில்லியன் ரூபா வீதம் 650 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. இரண்டாம் கட்டமாக 10 மில்லியன் ரூபா பெறுமதியான விவசாய நவீனமயமாக்கல் திட்டங்களை நடைமுறைப்படுத்த 75 பிரதேச செயலகங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன. பிரதேச செயலகங்களில் விவசாய நவீனமயமாக்கல் திட்டங்களை நடைமுறைப்படுத்தும்போது, குறித்த வேலைத்திட்ட செலவில் 30% இற்கும் அதிகமான பங்களிப்பை விவசாயத் தொழில் முயற்சியாளர்கள் மற்றும் விவசாயிகள் வழங்குவதுடன், மீதமுள்ள 70% அரசாங்கத்தின் பங்களிப்பாகவும் உள்ளது. சுழற்சி முறைக் கடன் திட்டமாக செயல்படுத்தும் வகையில், அரசு வழங்கிய பங்களிப்பை விவசாய நவீனமயமாக்கல் கடன் திட்டத்தின் கீழ் வட்டியில்லாக் கடனாக, இலங்கை, மக்கள் வங்கி மற்றும் பிரதேச அபிவிருத்தி வங்கி ஆகிய மூன்று அரச வங்கிகளில் இருந்து பயனாளிகள் தேர்ந்தெடுக்கும் வங்கி மூலம் திரும்பப் பெற்றுக்கொள்ளக் கூடிய வகையில், பொறிமுறைமையொன்றைத் தயாரித்து நடைமுறைப்படுத்த ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க முன்வைத்த அமைச்சரவைப் பத்திரத்திற்கு அங்கீகாரம் கிடைத்துள்ளது.

## அதிபர், ஆசிரியர்களின் சட்டப்படி...

ஈடுபடுவதாக அறிவித்துனர். இதனால், இப்போராட்டம் பாடசாலைகளின் கல்வி நடவடிக்கைகளுக்கு பாதிப்பை ஏற்படுத்தாது. எனினும் ஏனைய நடவடிக்கைகள் தொடர்பில் கல்வி அமைச்சு உரிய கவனம் செலுத்தும் என்றும் கல்வி அமைச்சர் தெரிவித்துள்ளார்.

நேற்று முதல் இரண்டு வாரங்களுக்கு ஆசிரியர்கள் மற்றும் அதிபர்கள் சட்டப்படி வேலை செய்யும் தொழிற்சங்க நடவடிக்கையை ஆரம்பித்துள்ளதாக ஆசிரியர்கள் மற்றும் அதிபர்கள் தொழிற்சங்கங்கள் தெரிவித்தன. அதற்கிணங்க நேற்று முதல் மாகாண கல்வி மற்றும் வலயக் கல்வி அலுவலகங்களால் பரிந்துரைக்கப்படும் செயலமர்வுகள், தர வட்டங்கள் மற்றும் பயிற்சி நிகழ்வுகளில் பங்கேற்கப் போவதில்லை என்றும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

# அப்ரார் கல்வி நிலையத்தின் 11 ஆவது வருட புலமைப் பரிசில் வழங்கும் நிகழ்வு









(பேருவளை விசேட நிருபர்)



பேருவளை அப்ரார் கல்வி நிலையத்தின் குறைந்த வருமானம் பெறும் திறமையான மாணவர்களுக்கான 11 ஆவது வருட புலமைப் பரிசில் வழங்கும் நிகழ்வு கடந்த ஞாயிற்றுக்கிழமை (21) பேருவளை, மஹகொட ஐ.எல்.எம் சம்சுதீன் வித்தியாலய கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

தினகரன் பத்திரிகை, தினகரன் வாரமஞ்சரி மற்றும் பேருவளை நியூஸ் ஊடக வலையமைப்பின் ஊடக அனுசரணையில் இந்நிகழ்வு சிறப்பாக நடைபெற்றது.

கல்வி நிலையத்தின் தலைவர் எம்.ஜே.எம் நிஸாம் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வின் பிரதம அதிதிகளாக ஓமான் நாட்டின் இலங்கைக்கான தூதுவர் அஹமத் பின் அலி பின் சயீத் அலி ராஷிதி மற்றும் பலஸ்தீன நாட்டின் இலங்கைக்கான பதில் தூதுவர் ஹிஷாம் அபூ தாஹா ஆகியோர் கலந்து கொண்டனர்.

அப்ரார் கல்வி நிலையத்தின் போஷகரும் பாராளுமன்ற உறுப்பினருமான இம்தியாஸ் பாக்கீர் மாக்கார் கலந்துகொண்ட இந்நிகழ்வின் விசேட பேச்சாளராக ஸம் ஸம் நிறுவனத்தின் தலைமை நிறைவேற்று அதிகாரி முஹம்மத் ஹிஷாம் கலந்துகொண்டு விசேட உரையாற்றினார். மஹகொட ஸாவியாவின் பிரதான இமாம் முஹம்மத் அலியினால், பாலஸ்தீன தேசத்திற்காக உருக்கமான பிரார்த்தனை நிகழ்வொன்றும் இங்கு நடைபெற்றதோடு, பாராளுமன்ற உறுப்பினர் மர்ஜான் பளீல் சார்பாக அவரது புதல்வர் ராசிக் மர்ஜான் இந்நிகழ்வில் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

பேருவளை மஹகொட ஐ.எல்.எம். சம்சுதீன் வித்தியாலய மற்றும் மஹகொட அஹதியா மாணவர்களின் அழகிய கலாசார நிகழ்வுகளும் அரங்கேறிய இந்நிகழ்வில் பேருவளை முன்னாள் நகர பிதா மசாஹிம் முஹம்மத், முன்னாள் உப நகர பிதா ஹஸன் பாஸி, அப்ரார் கல்வி நிலையத்தின் செயலாளர் கலாநிதி அஸ்வர் அஸாஹிம் (அல் அஸ்ஹரி) மற்றும் இன்னும் பல முக்கியஸ்தர்கள் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வில், பேருவளையின் தமிழ் மற்றும் சிங்கள மொழிப் பாடசாலைகளில் ,தெரிவு செய்யப்பட்ட குறைந்த வருமானம் பெறும் திறமையான சுமார் 70 மாணவர்களுக்கான புலமைப் பரிசில்கள் வழங்கிவைக்கப்படடன.

# ஜனாதிபதியின் தலைமைத்துவம் நீடிப்பதே மக்கள் எதிர்பார்ப்பு

## பொருளாதார மீள் எழுச்சியை வெற்றிகரமாக முன்னெடுக்க முடியும்

(புத்தளம் தினகரன் நிருபர்)



ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தலைமைத்துவம் தொடர்ந்திருப்பதே பொது மக்களின் எதிர்பார்ப்பு என்றும் அவரது தலைமைத்துவத்திலேயே, பொருளாதார மீ ள் எழுச்சியை வெற்றிகரமாக முன்னெடுக்க முடியும் எனவும் வடமேல் மாகாண ஆளுநர் நஸீர் அஹமட் தெரிவித்தார்.

இலங்கையின் அந்நியச்செலாவணி கையிருப்பில் புலம்பெயர் தொழிலாளர்களின் பங்களிப்பை பாராட்டும் வகையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையில் விகமணிக ஹரசற எனும் நிகழ்ச்சி ஞாயிற்றுக்கிழமை (21) குருநாகல் சத்தியவாடி மைதானத்தில் நடைபெற்றது.

நிகழ்வின் அதிதிகளில் ஒருவராக கலந்துகொண்டு கருத்து வெளியிட்டபோதே வடமேல் மாகாண ஆளுநர் நஸீர் அஹமட் இவ்வாறு தெரிவித்தார்.தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர்:

நாடு கடந்த காலத்தில் எதிர்கொண்ட பாரிய பொருளாதார நெருக்கடியை வெற்றிகொள்வதில் ஜனாதிபதியின் திறமையே முக்கிய பங்களித்தது.

நாட்டின் பொருளாதாரம் 2022 ஆம் ஆண்டில் பாரிய நெருக்கடியை எதிர்கொண்டது. அரசாங்கத்தின் தலைவரான ஜனாதிபதியே பதவி விலகும் நிலை ஏற்பட்டது.

அத்தியாவசியப்பொருட்களுக்கு பாரிய தட்டுப்பாடு ஏற்பட்டது. இவ்வாறான நிலையில் நாட்டின் தலைமைப் பொறுப்பை ஏற்றுக் கொண்ட ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, பொருளாதார நெருக்கடியை சமாளிப்பதற்கான அந்நிய செலாவணியை ஈட்டிக் கொள்வதில் புலம்பெயர் தொழிலாளர்கள் மீது நம்பிக்கை வைத்தார்.

அவரின் நம்பிக்கை வீண்போகவில்லை. இன்று இலங்கைக்கு அந்நிய செலாவணியை ஈட்டித் தரும் முக்கிய துறையாக புலம்பெயர் தொழிலாளர்களைக் குறிப்பிடலாம்.

இலங்கையின் பொருளாதார நெருக்கடிகளைத் திறமையாக சமாளித்தது போன்றே , எதிர்காலத்தில் அவ்வாறான ஒரு நிலை ஏற்படுவதைத் தடுக்கும் வகையிலும் மிக முக்கியமான நடவடிக்கைகளை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முன்னெடுத்துள்ளார்.

அவர் ஆரம்பித்துள்ள இந்த நடவடிக்கைகளை தொடர்ந்தும் வெற்றிகரமாக முன்னெடுக்க அவரது தலைமைத்துவத்தினால் மட்டுமே முடியும்.

அந்த வகையில் எதிர்வரும் காலத்திலும் அவரது தலைமைத்துவம் தொடர்ந்திருப்பதே பொதுமக்களின் எதிர்பார்ப்பாகும்.

# பாராளுமன்றம் கலைக்கப்பட்டாலும் ஜனாதிபதித் தேர்தலை அறிவிக்கும் அதிகாரத்திற்கு பாதிப்பு ஏற்படாது

## தேர்தல் ஆ.குழுவின் மேலதிக ஆணையாளர் சிவசுப்பிரமணியம் அச்சுதன்

(லோரன்ஸ் செல்வநாயகம்)




பாராளுமன்றம் கலைக்கப்பட்டாலும் ஜனாதிபதித் தேர்தலை அறிவிப்பதற்காக தேர்தல் ஆணைக்குழுவுக்கு காணப்படும் அதிகாரத்தை அது பாதிக்காது என தேர்தல்கள் ஆணைக்குழுவின் மேலதிக ஆணையாளர் சிவசுப்பிரமணியம் அச்சுதன் தெரிவித்துள்ளார்.

ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலின் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார். அதேவேளை ஒரே சந்தர்ப்பத்தில் ஜனாதிபதித் தேர்தல் மற்றும் பாராளுமன்றத் தேர்தலை நடத்த வேண்டிய சூழ்நிலை ஏற்படுமானால் அதனை எதிர்கொள்வதற்கும் தேர்தல் ஆணைக்குழு தயாராகவுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

அது தொடர்பில் மேலும் தெரிவித்துள்ள அவர், எந்த சந்தர்ப்பத்திலும் எந்த தேர்தலையும் நடத்துவதற்கு ஆணைக்குழு தயாராகவே உள்ளது. தேர்தலை நடத்துவதற்கான நிதி தேர்தல் ஆணைக்குழுவுக்கு கிடைக்கப் பெற்றுள்ளதுடன் ஆரம்ப நடவடிக்கைகளுக்கான செலவுகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

2015 ஆம் ஆண்டு தேர்தல் செலவுக்காக அரசாங்கத்தினால் 1.7 பில்லியன் ஒதுக்கப்பட்டது. அதேபோன்று 2019 ஆம் ஆண்டு தேர்தலுக்காக 4.9 பில்லியன் ஒதுக்கப்பட்டது.

எதிர்வரும் தேர்தலுக்காக அரசாங்கம் 10 பில்லியன் ரூபாவை ஒதுக்கியுள்ளது.

தேர்தல் நடவடிக்கைகள் தொடர்பில் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் பேச்சு வார்த்தைகள் நடத்தப்பட்டுள்ளதுடன் மேலும் பேச்சு வார்த்தைகள் நடத்தப்பட்டு வருகின்றன. அரசாங்க அச்சகம் உட்பட சம்பந்தப்படும் அனைத்து நிறுவனங்களுடனும் பேச்சு வார்த்தை நடத்தப்படுகிறது. நீதி, நேர்மை சுதந்திரமான தேர்தலை நடத்துவதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் தேர்தல் ஆணைக்குழு மேற்கொள்ளும் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# அநுராதபுரத்தில் இடம்பெற்ற விபத்துகளில் மூவர் பலி

அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்

அநுராதபுரம் பிரதேசத்தில் இடம்பெற்ற மூன்று விபத்துக்களில் 11 வயது சிறுமி உட்பட மூவர் உயிரிழந்துள்ளனர்.

குறித்த விபத்துகள் சனிக்கிழமை (20) அநுராதபுரம் , மதவாச்சி மற்றும் கெக்கிராவ பொலிஸ் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

மதவாச்சி பொலிஸ் பகுதிக்குட்பட்ட ஏ 09 வீதியில் முச்சக்கர வண்டியும் எரிபொருள் நிரப்பப்பட்ட பௌசர் ஒன்றும் நேருக்கு நேர் மோதியதில் வஹமல்கொல்லாவ பகுதியைச் சேர்ந்த 11 வயது சிறுமி வைத்தியசாலையில் உயிரிழந்துள்ளார். விபத்திற்குள்ளான பௌசர் சாரதி கைது செய்யப்பட்டுள்ளார்.

இதேவேளை, அநுராதபுரம் ரம்பாவ பகுதியில் வீதியைக்கடந்த பாதசாரி மீது லொறியொன்று மோதி விபத்துக்குள்ளானதில் படுகாயமடைந்த புளியங்குளம் பகுதியைச் சேர்ந்த 65 வயதுடைய நபர் வைத்தியசாலையில் உயிரிழந்துள்ளார்.

கெக்கிராவ கணேவல்பொல வீதியில் உழவு இயந்திரம் ஒன்று வீதியோரத்தில் இருந்த கல்வெட்டில் மோதி விபத்திற்குள்ளானதில் காயமடைந்த சாரதி கெக்கிராவ வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளதாக பொலிசார் தெரிவித்தனர்.


ජාතික ලොතරැයි මණ්ඩලය
தேசிய லொத்தர் சபை
National Lotteries Board
ஞாயிறு 2024.07.21
உத்தியோகபூர்வ முடிவுகள்
www.nlb.lk
NLB

மஹஜன சம்பத — சீட்டிழுப்பு இலக்கம் 5541 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 42,191,864.00
ஆங்கில எழுத்து Q — வெற்றி இலக்கங்கள் 5 0 5 6 1 0

அத சம்பத — சீட்டிழுப்பு இலக்கம் 116 — ஆங்கில எழுத்து Q — வெற்றி இலக்கங்கள் 5 6 1 0

கொவிசெத — சீட்டிழுப்பு இலக்கம் 3783 — சீட்டிழுப்பு திகதி 2024.07.21 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 66,915,917.12
ஆங்கில எழுத்து C — வெற்றி இலக்கங்கள் 05 16 25 37 — விசேட எழுத்து C — இலட்சாதிபதி டபள் சான்ஸ் வெற்றி இலக்கம் 84939

Mega POWER — சீட்டிழுப்பு இலக்கம் 1889 — 2024.07.21 — 63407 — அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ. 439,590,538.00
ஆங்கில எழுத்து A — சுப்பர் இலக்கம் 25 — வெற்றி இலக்கங்கள் 23 27 39 58
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

VIP — திகதி 2024.07.21 — சீட்டிழுப்பு இலக்கம் 0367
ஆங்கில எழுத்து Y — வெற்றி இலக்கங்கள் 1 0 5 2 7 8
L7 எழுத்து Y — அடுத்த சீட்டிழுப்புக்கான சுப்பர் பரிசு ரூ. 33,190,886.48

ராசி சுப பலன் — திகதி 2024.07.21 — சீட்டிழுப்பு இலக்கம் 850 — அடுத்த சீட்டிழுப்புக்கான சுப்பர் பரிசு ரூ. 3,313,477.60
வெற்றி இலக்கினம் மேஷம் — வெற்றி இலக்கங்கள் 17 25 38 44 — தனயோக இலக்கம் 67330 — நாளுக்கான விதி எண் 30

தன நிதானய — சீட்டிழுப்பு இலக்கம் 1571 — 2024.07.21 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 102,134,197.12
ஆங்கில எழுத்து S — வெற்றி இலக்கங்கள் 01 18 25 44 — விசேட எழுத்து S — இலட்சாதிபதி டபள் சான்ஸ் வெற்றி இலக்கம் 75565



ST & S SINCE 1892 — softlogic Finance

சொப்ட்லொஜிக் பினான்ஸ் பீஎல்சி
மாபெரும் வாகன ஏலவிற்பனை

43 டீசல் மற்றும் பெற்றோல் மோட்டார் வாகனங்கள்
2024 ஜூலை 26 வெள்ளிக்கிழமை
இல. 463, கண்டி வீதி, களனி
என்ற முகவரியில்
காலை 10.00 மணிக்கு ஆரம்பமாகும்.

விபரம்:

கார்கள்:

| | | |
|---|---|---|
| CAW-4XXX | சுசூகி DAA-MH55S வெகன் R | 2017 |
| CAT-3XXX | மைக்ரோ பண்டா L.C 1.0 | 2017 |
| CAN-2XXX | சுசூகி DAA-MH44S வெகன் R | 2014 |
| KX-8XXX | மைக்ரோ MX7 மார்க் II | 2013 |
| CAN-3XXX | மஸ்டா DAA-BYEFP அக்ஸெலா | 2013 |
| KW-4XXX | மைக்ரோ பண்டா குரோஸ் | 2013 |
| KU-6XXX | மைக்ரோ MX7II | 2012 |
| KH-0XXX | செவ்ரோலெட் அவோயு -VA | 2008 |
| JK-5XXX | டொயோட்டா கேம்ரி | 2004 |
| KF-0XXX | புரோட்டன் வைரா | 2003 |
| JG-7XXX | கியா கார்னிவெல் | 2000 |
| 65-9XXX | பியூஜியோட் 406 ST | 2000 |
| 65-8XXX | நிசான் புளு பேர்ட் | 1997 |
| 19-7XXX | டொயோட்டா டெர்செல் | 1996 |
| 19-0XXX | மஸ்டா E-BG3P-பமிலா | 1991 |

வேன்கள்:

| | | |
|---|---|---|
| PJ-5XXX | ஹொண்டா EBD-HH5 அக்டி | 2014 |
| PC-9XXX | சுசூகி EBD-DA64V | 2007 |
| JD-9XXX | ஹைஉண்டாய் கிரேஸ் H10 | 2001 |
| PA-4XXX | சுபாரு சாம்பார் | 2001 |
| JS-4XXX | ஹைஉண்டாய் மெட்ரிக்ஸ் | 2001 |
| HG-9XXX | டைஹட்சு GD-S200V | 1999 |
| JZ-2XXX | மஸ்டா GA-SS88H | 1998 |
| 54-0XXX | இசுசு பார்கோ | 1989 |

லொறிகள்:

| | | |
|---|---|---|
| DAF-8XXX | டாட்டா 207 FX பிக்கப் | 2017 |
| DAA-7XXX | டாட்டா 207 RX பிக்கப் | 2015 |
| PX-7XXX | டாட்டா சுப்பர் ஏஸ் | 2014 |
| PT-8XXX | டாட்டா ஏஸ் | 2012 |
| LK-2XXX | டாட்டா LPK 407 | 2012 |
| PT-3XXX | மஹின்ட்ரா மெக்ஸிமோ | 2012 |
| PT-4XXX | மஹின்ட்ரா மெக்ஸிமோ | 2012 |
| PR-5XXX | டாட்டா ஏஸ் | 2011 |
| PR-9XXX | டாட்டா ஏஸ் | 2011 |
| LD-7XXX | டாட்டா ஏஸ் | 2007 |
| LG-5XXX | டாட்டா - LPT 709E | 2007 |
| LC-6XXX | ஐச்சர் 20.16 ஜம்போ | 2006 |
| LE-4XXX | மஸ்டா KK-WHF5T | 2001 |
| LA-4XXX | டைஹட்சு GD-S210C | 1999 |
| HJ-3XXX | மிட்ஷுபிஷி KC-FH217G | 1997 |

பஸ்:

| | | |
|---|---|---|
| NB-0XXX | லங்கா அசோக் லேலன்ட் வைக்கிங் | 2011 |

முச்சக்கர வண்டிகள்:

| | | |
|---|---|---|
| YL-0XXX | பஜாஜ் RE 205 | 2011 |
| YL-2XXX | பஜாஜ் RE 205 | 2011 |
| YG-1XXX | TVS கிங் | 2010 |

மோட்டார் சைக்கிள்கள்:

| | | |
|---|---|---|
| BGW-0XXX | மஹின்ட்ரா UZO125 | 2017 |

பார்வையிடல் - ஏலவிற்பனை நிலையத்தில்
2024 ஜூலை 24 புதன் மற்றும் 25 வியாழன் ஆகிய தினங்களில்
(காலை 9.00 முதல் மாலை 5.00 மணி வரை)

விற்பனை நிபந்தனைகள்
- **நுழைவு** : ஏல விற்பனை நடைபெறும் தினத்தில், ஒவ்வொருவரும் பிரவேசக் கட்டணமாக மீளளிக்கப்படாத ரூபா 2000/- செலுத்துவதுடன், மீளச் செலுத்தப்படும் ரூபா 25,000/- ஐ வைப்புச் செய்தலும் வேண்டும்.
- **கொடுப்பனவுகள்** : விற்பனை முடிவின் போது, மொத்தத் தொகையில் மீளளிக்கப்படாத 25% காசாகச் செலுத்தப்படல் வேண்டும். எஞ்சிய 75% ஐயும் **2024 ஜூலை 30ஆந் திகதி செவ்வாய்க்கிழமை** பி.ப 3.00 மணிக்கு முன்னர், இல. 305B, நாவல வீதி, நாவல என்ற முகவரியில் அமைந்துள்ள சொப்ட்லொஜிக் பினான்ஸ் பீஎல்சி நிறுவனத்தில் காசாகச் செலுத்தப்பட வேண்டும்.
- எவ்வித முன்னறிவித்தலுமின்றி எந்தவொரு வாகனத்தையும் ஏல விற்பனையிலிருந்து விடுவித்துக் கொள்ளும் உரிமை முகாமைத்துவத்திற்கு உண்டு.
- ஏலதாரர் / சொப்ட்லொஜிக் பினான்ஸ் பீஎல்சி யின் தீர்ப்பே இறுதி முடிவாகும்.

ஷொக்மன் அன்ட் சமரவிக்ரம®
ஒரே தேசம், ஒரே ஏலவிற்பனையாளர்
Celebrating 132 Years
011 2671468
www.sandslanka.com

# நகர்வலம்



## கம்பஹாவில் ஜனாதிபதி புலமைப் பரிசில் வழங்கும் நிகழ்வு



**(பாணந்துறை மத்திய குறூப் நிருபர்)**

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் எண்ணக்கருவின் பிரகாரம் நடைமுறைப்படுத்தப்படுகின்ற ஜனாதிபதி கல்விப் புலமைப் பரிசில் வழங்கும் வேலைத்திட்டத்தின் கம்பஹா மாவட்டத்தின் ஒரு பிரிவுக்கான நிகழ்வு கம்பஹா நய்வல ஜயசிங்க சிடி சென்டர் வரவேற்பு மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் 1773 மாணவர்களுக்கு புலமைப் பரிசில்கள் வழங்கப்பட்டன.

வீடமைப்பு, நகர அபிவிருத்தி அமைச்சர் பிரசன்ன ரணதுங்க மற்றும் ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் ஆசு மாரசிங்க ஆகியோரின் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் கம்பஹா மாவட்டத்தின் மினுவாங்கொடை கல்விப் பிரிவைச்சேர்ந்த 1377 மாணவர்களுக்கும் தகவுலப்பிட்டிய கல்விப் பிரிவைச் சேர்ந்த 396 மாணவர்களுக்கும் பிரமுகர்களினால் புலமைப் பரிசில்கள் வழங்கி வைக்கப்பட்டன.

பல்வேறு பொருளாதார கஷ்டங்களுக்கு மத்தியில் கல்வியைத் தொடரும் பாடசாலை மாணவர்களுக்கு ஊக்குவிப்பு அளிக்கும் நோக்கில் ஜனாதிபதியின் சிந்தனையின் அடிப்படையில் மேற்படி திட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. இந்த புலமைப் பரிசில் திட்டத்தின் கீழ் கம்பஹா மாவட்டத்தில் 6490 மாணவர்கள் ஜனாதிபதி கல்வி புலமைப் பரிசில்பெற தகுதி பெற்றுள்ளனர்.

அநுராதபுரம் மாவட்டத்தில்...

## மின்சார வசதியற்ற குறைந்த வருமானம் பெறும் குடும்ப பிள்ளைகளுக்கு சூரிய ஒளி மின்விளக்குகள்

### அநுராதபுரம் மாவட்ட செயலத்தினால் வழங்கி வைப்பு

**திறப்பனை தினகரன் நிருபர்**

அநுராதபுரம் மாவட்டத்தில் மின்சாரம் இல்லாத குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களைச் சேர்ந்த பிள்ளைகளுக்கு சூரிய ஒளி மின் விளக்குகளை வழங்கி வைக்கும் நிகழ்வு அநுராதபுரம் மாவட்ட செயலகத்தில் மேலதிக மாவட்ட செயலாளர் திருமதி ஷமிலா விக்கிரமாராச்சி தலைமையில் அண்மையில் இடம் பெற்றது.

ஒரு சமூக சேவையாக தொடங்கப்பட்டுள்ள இத்திட்டம் " ஜபுரா 84/85 சஹ்ருதா சமூகப் பாதுகாப்புத் திட்டம் " என்ற பெயரில் மின்சாரம் இல்லாத குறைந்த வருமானம் பெறும் குழந்தைகளின் கல்வி நிலையை மேம்படுத்தி நாட்டுக்காக உழைக்கும் பிரஜையை உருவாக்குவதே இத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும்.

இங்கு பாடசாலை மாணவர்களுக்கான புத்தகங்கள் மற்றும் உபகரணங்களும் வழங்கிவைக்கப்பட்டன.



அநுராதபுரம் மாவட்டத்தின் 11 பிராந்திய செயலகத் தொகுதிகளில் உள்ள சுமார் 48 பயனாளிகள் இதற்காக தெரிவு செய்யப்பட்டிருந்தனர்.

மாவட்ட அரசாங்க அதிபரின் வேண்டுகோளின் பேரில் அநுராதபுரம் மாவட்டத்திற்கு இந்த வேலைத் திட்டம் கிடைக்கப்பெற்றுள்ளது. இங்கு மாவட்ட செயலகத்தின் வேலைத்திட்டத்துடன் கெக்கிராவ பிரதேச செயலகம் மற்றும் மிஹிந்தலை பிரதேச செயலகம் ஆகியவற்றிலும் சூரிய ஒளியில் இயங்கும் சோலார் மின் விளக்குகள் வழங்கிவைக்கப்பட்டன.

இந்த சோலார் மின் குமிழ்கள் சுமார் 6 மணி நேரம் ஒளியை வழங்கும் தன்மையை கொண்டுள்ளது. இந் நிகழ்வில், அரச சார்பற்ற நிறுவன நுண்கடன் இணைப்பாளர் உத்தியோகத்தர் எச்.எம். அபேரத்ன மற்றும் பயனாளிகளின் குடும்ப உறுப்பினர்கள் உட்பட அரச அதிகாரிகள் குழுவும் இதில் கலந்து கொண்டனர்.

## தொழிற்சங்க நடவடிக்கைகள் நாட்டின் வளர்ச்சிக்கு இடையூறு



நாட்டில் இளைஞர்கள் மத்தியில் வேலையின்மையைக் குறைப்பதற்காகப் பொதுத்துறையினரின் ஓய்வுபெறும் வயதெல்லையைக் குறைப்பது குறித்து அரசு தீவிரமாகப் பரிசீலிக்க வேண்டும் என்று சந்தைப் படுத்தல் நிபுணரான கலாநிதி ரங்க ஜயக்கொடி தெரிவித்துள்ளார். பொதுச்சேவையின் செயற்றிறனை மேம்படுத்தவும் அரச செலவினங்களைக் குறைக்கவும் பொதுமக்களுக்கு அசௌகரியங்களை ஏற்படுத்தும் வேலை நிறுத்தங்களை நிர்வகிக்கவும் இது பெரிதும் உதவும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஊடகவியலாளர் மாநாடொன்றில் உரையாற்றிய கலாநிதி ஜயக்கொடி, பொதுத்துறையில் ஓய்வு பெற்ற பின்னர் ஓய்வூதியம் பெறுபவர்கள் வருமானம் ஈட்டும் தொழிலிலோ அல்லது வர்த்தக நடவடிக்கைகளிலோ ஈடுபடலாம். அதன் ஊடாக தேசிய பொருளாதார மேம்பாட்டுக்கும் அவர்களது தனிப்பட்ட வாழ்க்கைத் தர மேம்பாட்டுக்கும் பங்களிக்கும் வகையில் அவர்களால் ஓய்வூதியத்திற்கு மேலதிகமாக வருமானத்தை ஈட்ட முடியும்.

அரச துறையிலோ அல்லது தனியார் துறையிலோ பணியாற்றும் ஒருவர் 50 வயதைக் கடக்கும் போது அவரது திறன்களிலும் உழைப்பிலும் படிப்படியாக வீழ்ச்சி ஏற்படுவது இயல்பானது. அதனால் புதிய தலைமுறையினருக்கு இடமளிப்பதன் மூலம் செயற்றிறன் மிக்க சேவைகளை சிறந்த முறையில் முன்னெடுக்கக்கூடியதாக இருக்கும். அது பொதுச்சேவையின் செயற்றிறனை வலுப்படுத்துவதாகவும் அமையும்.

புதிய அறிவு, நவீன உலகுக்கு ஏற்ற புதிய உத்திகள் மூலம் நாடு முன்னேற்றமடைய இளைஞர்களின் ஆற்றலும் உற்சாகமும் பாரிய பங்களிப்பை நல்கும். இளம் வயதிலேயே பொறுப்புகளும் வாய்ப்புகளும் கிடைக்கும் என்பதால் வெளிநாடுகளுக்கு செல்வதில் அதிக ஆர்வம் காட்டும் இளைஞர்களில் பெரும்பகுதியினர் உள்நாட்டிலேயே பணியாற்ற முன்வருவர்.

தற்போதைய வேலை நிறுத்தங்களும் தொழிற்சங்க நடவடிக்கைகளும் பொதுத்துறையைப் பெரிதும் பாதிக்கின்றன. சேவைகளைப் பெற்றுக்கொள்வதில் மக்கள் அசௌகரியங்களுக்கு முகம் கொடுக்கின்றனர். தொழிற்சங்க நடவடிக்கைகள் நாட்டின் வளர்ச்சிக்கு பெரும் இடையூறாக உள்ளது. தொழிற்சங்கங்கள் தம் அங்கத்தவர்களைப் பாதுகாத்து, அவர்களின் திறமையின்மையை நியாயப்படுத்துகின்றன என்றும் குறிப்பிட்டுள்ளார்.

## நிசாம் காரியப்பரின் கவிதை நூல் வெளியீடு





ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் செயலாளர் நாயகமும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான நிசாம் காரியப்பர் எழுதிய "அந்த கல்முனைக் குடி நாட்கள்..." எனும் கவிதைத் தொகுப்பு ஞாயிற்றுக்கிழமை (21) பண்டார நாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் வெளியிட்டு வைக்கப்பட்டது. இந்நிகழ்வில் அதிதிகளாக உயர் நீதிமன்ற நீதியரசர் திலிப் நவாஸ், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவுப் ஹக்கீம், தென்கிழக்கு பல்கலைக்கழக மொழித் துறை பேராசிரியர் ரமீஸ் அப்துல்லாஹ், கல்முனை கவிஞர் சோலைக்கிளி அதீக், முன்னாள் வெளிநாட்டுத் தூதுவர் எச்.ஏ. அஸீஸ் மற்றும் நூலாசிரியர் நிசாம் காரியப்பர் ஆகியோர்கள் உரையாற்றினர். நூலின் முதல் பிரதியை நூலாசிரியர் தனது தாய்க்கு வழங்கி வெளியிட்டு வைத்தார். (படங்கள் : அஷ்ரப் ஏ சமத்)

## கதிர்காமத்தில் பெரஹராவை பார்வையிட வந்த இருவர் பலி

**(ஹம்பாந்தோட்டை குறூப் நிருபர்)**

வரலாற்று சிறப்புமிகு கதிர்காமம் மகா தேவாலயத்தின் ஆடிவேல் உற்சவத்தின் போது பெரஹராவை பார்வையிட சென்றுகொண்டிருந்த இருவர் சனநெரிசலில் சிக்கி உயிரிழந்துள்ளதாக கதிர்காமம் பொலிஸார் (21) தெரிவித்தனர்.

கடந்த சில தினங்களில் பெரஹராவை பார்வையிடுவதற்கு புனித பிரதேசத்திற்கு பெரும் திரளான மக்கள் கூட்டம் வருகை தந்ததினால் பாலத்திற்கு அண்மிய பிரதேசத்தில் பாரிய சனநெரிசல் காணப்பட்டது. சனநெரிசலில் சிக்கிய இருவர் கதிர்காமம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதன் பின்பு உயிரிழந்துள்ளதாகவும் இவர்கள் கல்முனை மற்றும் இரத்தினபுரி ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.




மதுகம கல்வி வலயத்திற்குட்பட்ட அலுத்கம்கொட கனிஷ்ட பாடசாலை மாணவர்களுக்கு சுமார் 1,25,000.00 ரூபா பெறுமதியான அத்தியாவசிய மற்றும் கற்றல் உபகரணங்கள் ஜேர்மனி சமூக சேவை அமைப்பான 'Builders and Constructors Kleespies Gmbh Co Gk City of Jossgrund' நிதியுதவியில் இலவசமாக பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ளது. இதனை அமைப்பின் இலங்கை இணைப்பாளரான ரிழா பாரூக் பாடசாலை அதிபரிடம் வைபவரீதியாக கையளிப்பதை படத்தில் காணலாம்.

## வீதியை விட்டு வான் விலகி விபத்து; இருவர் படுகாயம்

**அநுராதபுரம் மேற்கு தினகரன், திறப்பனை தினகரன் நிருபர்கள்**

ஏ 09 வீதியில் திறப்பனை புஞ்ஞிகுளம் பகுதியில் வான் ஒன்று வீதியை விட்டு விலகிச் சென்று மரம் ஒன்றில் மோதி நேற்று (22) விபத்திற்குள்ளாகியுள்ளது. அந்த விபத்தில் வானின் பின் ஆசனத்தில் அமர்ந்து பயணித்த இருவர் படுகாயமடைந்துள்ளதாக தெரியவந்துள்ளது.

படுகாயமடைந்த இருவரும் அநுராதபுரம் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். கொழும்பில் இருந்து கிளிநொச்சி நோக்கி ஏ09 வீதி ஊடாகச் சென்ற வான் வேக கட்டுப்பாட்டை இழந்து வீதியை விட்டு விலகிச் சென்று மரத்தில் மோதியுள்ளது. அவ்வேளையில் சாரதிக்கு தூக்கம் ஏற்பட்டிருந்ததாக பொலிஸ் விசாரணையில் இருந்து தெரியவந்துள்ளது.

## றிசாத் பதியுதீன் பாடசாலை மாணவர்கள் புத்தளம் பொது நூலகத்துக்கு விஜயம்



**புத்தளம் தினகரன் நிருபர்**

புத்தளம் தில்லையடி அல் காசிம் சிட்டி றிசாத் பதியுதீன் பாடசாலை மாணவர்கள் புத்தளம் பொது நூலகத்துக்கு நூலகத்தை பார்வையிடும் நோக்கில் திங்கட்கிழமை (22) காலை விஜயம் செய்தனர்.

பொது நூலகத்தில் அமையப்பெற்றுள்ள நூல் உசாத்துணை பகுதி, பத்திரிகை வாசிப்பு பகுதி, சிறுவர் பகுதி உள்ளடங்கலாக அங்கு அமையப்பெற்றுள்ள புத்தளம் நகர சபையின் சபா மண்டபத்தையும் மாணவர்கள் பார்வையிட்டனர்.

புத்தளம் பொது நூலகத்தின் பிரதம நூலகர் கே.எம். நிஷாத், நூலக வளங்கள் தொடர்பாகவும், நூலகத்தை எவ்வாறு பயன்படுத்துவது தொடர்பாகவும் மாணவர்கள் மத்தியில் விளக்கமளித்தார்.

## தர்கா நகர் நூலகத்துக்கு நூல்கள் அன்பளிப்பு



தர்கா நகர் ஸாஹிரா கல்லூரி 1982ஆம் வருட க.பொ.த. சாதாரண தர மாணவர்களால் தர்கா நகர் பொது நூலகத்துக்கு புத்தகங்கள் கையளிக்கும் நிகழ்வு அண்மையில் மாணவர் அமைப்பின் தலைவர் ஏ.ஜே.எம். பாரி தலைமையில் நடைபெற்றது. நூலகத்தின் பொறுப்பாளர் ஜயமினி ஜயசூரிய சில்வா, நூலகத்தின் ஆலோசனை கமிட்டி தலைவர் ஓய்வு பெற்ற அதிபர் எம்.இஸட். எம்.நயீம், செயலாளர் முன்னாள் பிரதேச சபை உறுப்பினர் ஹசீப் மரிக்கார் ஆகியோரிடம் புத்தகங்கள் கையளிக்கப்பட்டன. மேற்படி நிகழ்வில் 1982 O/L மாணவர் அமைப்பின் பொருளாளர் தேசபந்து ஏ. பீ. எம். ஸுஹைர் தலைமையிலான குழுவினர் கலந்து சிறப்பித்தனர். இதன்போது பெறுமதிமிக்க 80 நூல்கள் கையளிக்கப்பட்டன.

**படம் : பேருவளை விசேட நிருபர்**

## மாளிகாவத்தை தாருஸ் ஸலாமில் 'டிஜிட்டல் அறிமுக' நிகழ்வு

**ருஸைக் பாரூக்**




கொழும்பு 10, மாளிகாவத்தை தாருஸ் ஸலாம் கல்லூரி செரண்டிப் கல்வி அறக்கட்டளையின் ஆதரவுடன் 'டிஜிட்டல் அறிமுகம்' தாருஸ்ஸலாம் கல்லூரி கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

கல்லூரி அதிபர் நிப்ராஸ் அஹமட் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் செரண்டிப் கல்வி அறக்கட்டளையின் பிரதித் தலைவர் ரிசா இஸ்மாயில் கலந்து சிறப்பித்தார். செரண்டிப் கல்வி அறக்கட்டளையின் தலைவர் பசால் அமானுல்லா, Asia Pacific Alliance for Disaster Management முகாமையாளர் பிர்ஸான் ஹாசிம் மற்றும் பாக்கினி கஹவெல முஸ்லிம் மகா வித்தியாலய ஆசிரியர் நௌஷாத் ஹாஷிம் ஆகியோரும் உரையாற்றினர்.

செரண்டிப் கல்வி அறக்கட்டளையின் 34வது ஆண்டு விழாவை முன்னிட்டு தாருஸ்ஸலாம் கல்லூரி தகவல் தொழில்நுட்ப ஆசிரியர் திருமதி எம்.எஸ்.எஸ் சலீமாவுக்கு மற்றும் பல்கலைக்கழக மாணவர்களுக்கு மடிக்கணினி வழங்கப்பட்டன. நிகழ்வில் தாருஸ் ஸலாம் கல்லூரி வரலாற்றில் முதன்முறையாக 99 வது குழுவினரால் தயாரிக்கப்பட்ட தனது செய்தி மடலை Newsletter அறிமுகப்படுத்தியது டன் அதன் பிரதிகளை செரண்டிப் கல்வி அறக்கட்டளையின் அதிகாரிகளுக்கும் வழங்கி வைத்தனர்.

# கிழக்கின் குரல்



ரூ.124 மில்லியன் செலவில்

## நிந்தவூர் ஆதார வைத்தியசாலைக்கு இயன் மருத்துவ பிரிவு கட்டடத் தொகுதி





(பாலமுனை விசேட நிருபர்)

சுகாதார அமைச்சின் 124 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீட்டில் நிந்தவூர் ஆதார வைத்தியசாலையில் நிர்மாணிக்கப்பட்ட இயன் மருத்துவ பிரிவு கட்டடத் தொகுதி நேற்றுமுன்தினம் (21) உத்தியோகபூர்வமாக திறந்து வைக்கப்பட்டது.

பாராளுமன்ற உறுப்பினர் பைசால் காசிமின் அழைப்பின் பேரில், கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் இந்நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்து கொண்டு இயன் மருத்துவ பிரிவு கட்டடத் தொகுதியை திறந்து வைத்தார்.

நிந்தவூர் ஆதார வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் டொக்டர் எம்.பி.அப்துல் வாஜித் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் முன்னாள் சுகாதார இராஜாங்க அமைச்சரும், பாராளுமன்ற உறுப்பினருமான பைசல் காசிம், கிழக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் பொறியியலாளர் என்.சிவலிங்கம், கிழக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் டொக்டர் ட.ஜி.எம்.கொஸ்தா, கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டொக்டர் திருமதி சகீலா இஸ்ஸடீன், பிராந்திய கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டு பிரிவு பொறுப்பு வைத்திய அதிகாரி டொக்டர் எம்.சீ.எம். மாஹிர் உள்ளிட்ட வைத்தியர்கள், சுகாதாரத் திணைக்கள உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.



வரலாற்று பிரசித்தி பெற்ற உகந்தைமலை ஸ்ரீ முருகன் ஆலய ஆடிவேல் சமுத்திர தீர்த்தோற்சவம் பல்லாயிரக்கணக்கான அடியார்களின் அரோகரா எனும் வேண்டுதலுடன் நேற்று நடைபெற்றது. (படம்: வாச்சிக்குடா விசேட நிருபர்)

## மருமகனால் மாமனார் அடித்துக் கொலை

(மாளிகைக்காடு குறுப் நிருபர்)

சாய்ந்தமருது பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வொலிவேரியன் சுனாமி குடியேற்ற கிராமத்தில் இடம்பெற்ற தாக்குதலில் ஒருவர் அடித்துக் கொலை செய்யப்பட்டுள்ளதுடன் 32 வயதுடைய சந்தேகநபர் தலைமறைவாகியுள்ளதாகவும் தெரியவருகின்றது.

தனது மகளை விவாகரத்து செய்த முற்பட்டமையால் மருமகனுடன் ஏற்பட்ட முரண்பாடே கொலையில் முடிவடைந்துள்ளதாக முதற்கட்ட விசாரணையிலிருந்து தெரிய வந்துள்ளது.

இதுதொடர்பில் நீண்டகாலமாக மாமனாருக்கும் மருமகனுக்கும் இடையில் வாக்குவாதம் இருந்துவந்துள்ளது.

அடிக்கடி இவ்விடயத்தினால் தனது மாமாவுடன் தகராறு செய்து வந்த மருமகன், போதைப்பொருளுக்கு அடிமையானவர் எனவும் தெரியவருகின்றது.

சந்தேகநபர் சாய்ந்தமருது பொலிஸ் நிலையத்திலும் இருவேறு குற்றச்சாட்டுகளின் கீழ் விசாரணைக்கு அழைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## காத்தான்குடியில் கைக்குண்டு மீட்பு

(மட்டக்களப்பு குறுப் நிருபர்)

காத்தான்குடி பூநொச்சிமுனையில் கைவிடப்பட்ட நிலையில் கைக்குண்டு ஒன்று நேற்றுமுன்தினம் மாலை (21) இரவு இனம்காணப்பட்டதாக காத்தான்குடி பொலிஸார் தெரிவித்தனர்.

பூநொச்சிமுனையில் பச்சை வீட்டுத்திட்டம் என அழைக்கப்படும் முகைதீன் ஜூம்ஆ பள்ளி வீதியில் வீடொன்றுக்கு முன்னால் உள்ள வடிகானுக்கு அருகில் கைக்குண்டு ஒன்று கிடப்பதை அவதானித்த பொதுமக்கள் இதுதொடர்பில் பொலிஸாருக்கு அறிவித்தனர்.

இதனையடுத்து நீதிமன்ற அனுமதியுடன் கைக்குண்டை மீட்பதற்கு பொலிஸார் நடவடிக்கை மேற்கொண்டனர். விசேட அதிரடிப்படையின் குண்டு செயலிழக்கும் பிரிவினரும் அழைக்கப்பட்டனர்.

இதுதொடர்பான மேலதிக விசாரணைகளை காத்தான்குடி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

இதேவேளை கைக்குண்டு மீட்கப்பட்ட வீட்டுக்கு அருகிலுள்ள வீட்டின் மீது கடந்த 15ஆம் திகதி இரவு இனந்தெரியாத நபர்களால் கைக்குண்டுதாக்குதல் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

## சவளக்கடை விவசாயக் கண்டத்தில் துரித சிறுபோக அறுவடை

(நற்பிட்டிமுனை தினகரன் நிருபர்)

அம்பாறை மாவட்டத்தில் பெரு நிலப்பரப்பான நாவிதன்வெளி பிரதேசத்துக்குட்பட்ட சவளக்கடை விவசாயக் கண்டத்தில் துரித சிறுபோக அறுவடை அண்மைக்காலமாக நடைபெற்றுவருவதுடன் பாரிய விளைச்சலும் கிடைத்துவருவதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

ஏக்கர் ஒன்றுக்கு முப்பது மூட்டை தொடக்கம் 35 மூட்டை வரை விளைச்சல் காணப்படுவதோடு தனியார் துறையினர் அதிகளவில் நல்ல விலை கொடுத்து கொள்வனவு செய்துவருவதாகவும் தெரிவிக்கின்றனர்.

66 கிலோ கொண்ட சிவப்பு நெல் 6800 ரூபாவுக்கும் வெள்ளை நெல் 6500 ரூபாவுக்கும் விவசாயிகள் விற்பனை செய்கின்றனர்.

கடந்த இருபோகங்களில் அறுவடை காலத்தில் மழை பெய்ததால் விவசாயிகள் கடும் நஷ்டத்தை எதிர்கொண்டனர். இம்முறை காலநிலை சீராக இருப்பதால் விவசாயிகளுக்கு பெரும் சாதகமாய் இது அமைந்துள்ளது.

இருந்தும் அரசாங்கம் உத்தரவாத விலையில் நெல்லை கொள்வனவு செய்தால் அதிக இலாபத்தை பெற முடியுமெனவும் விவசாயிகள் தெரிவித்தனர்.

குறிப்பாக இவ்வருடம் பெரும் போகத்தில் குத்தகைக்காணிகளுக்கு நல்ல கிராக்கி ஏற்படும் எனவும் விவசாயிகள் மேலும் தெரிவித்தனர்.

ஆளுநர் நஸீர் அஹமட்டின் முயற்சியில்

## கிழக்கு அபிவிருத்திக்கு ரூ.2 கோடி நிதி ஒதுக்கீடு



மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்தி வேலைத்திட்டத்தின் ஊடாக வடமேல் மாகாண ஆளுநர் நஸீர் அஹமட்டின் முயற்சியினால் கோறளைப்பற்று மத்தி, வாழைச்சேனை பிரதேச செயலகப்பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் காணப்படும் சமூக மட்ட அமைப்புக்கள், விளையாட்டுக் கழகங்கள், பள்ளிவாசல்கள், அரச நிறுவனங்களுக்கான நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய தெரிவு செய்யப்பட்டவர்களுக்கான கடிதங்களை கையளிக்கும் நிகழ்வு வடமேல் மாகாண ஆளுநரின் கல்குடா இணைப்பாளர் எம்.ஜவாத் தலைமையில் பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் சிறப்பு அதிதியாக வடமேல் மாகாண ஆளுநர் நஸீர் அஹமட்டின் ஏறாவூர் இணைப்புச் செயலாளர் தஸ்லீம், ஜனநாயக ஐக்கிய முன்னணியின் மட்டக்களப்பு மாவட்ட அமைப்பாளர், முன்னாள் கோறளைப்பற்று வாழைச்சேனை பிரதேச சபை உறுப்பினர் எம்.பி.எம்.தையூப் ஆசிரியர் ஆகியோரும் கலந்து சிறப்பித்தனர்.

ரூ.1 கோடி 82 இலட்சம் கோறளைப்பற்று மத்தி, வாழைச்சேனை பிரதேச செயலகப்பிரிவுக்கும், கோறளைப்பற்று வடக்கு, வாகரை பிரதேச செயலகப்பிரிவுக்கு ரூ.15 இலட்சமும், கோறளைப்பற்று தெற்கு கிரான் பிரதேச செயலகப்பிரிவுக்கு ரூ.39 இலட்சமும் முதலாம் கட்டமாக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மேலும், பல்வேறு கட்டங்களாக நிதியொதுக்கீடுகள் நடைபெறவுள்ளதாக வடமேல் மாகாண ஆளுநர் நஸீர் அஹமட்டின் கல்குடா இணைப்பாளர் எம்.ஜவாத் தெரிவித்தார்.

(எம்.எம்.ஜெஸ்மின்)

## முன்னாள் அமைச்சர் மர்ஹூம் ஏ.ஆர். மன்சூர் நினைவுப் பேருரையும் பரிசளிப்பு வைபவமும்

முன்னாள் அமைச்சர் மர்ஹூம் ஏ.ஆர். மன்சூர் நினைவு தினத்தை முன்னிட்டு சாய்ந்தமருது எம்.எஸ். காரியப்பர் வித்தியாலயத்தினால் நடத்தப்பட்ட முன்னாள் அமைச்சர் ஏ.ஆர். மன்சூரின் 'கறை படியா சேவைகள்' எனும் தலைப்பில் நடைபெற்ற நினைவு தின கட்டுரைப் போட்டியில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கான பரிசளிப்பு நிகழ்வு சாய்ந்தமருது கலாசார மத்திய நிலையத்தில் எதிர்வரும் (25) வியாழக்கிழமை நடைபெறவுள்ளது.

ஏ.ஆர்.மன்சூர் பௌண்டேஷனின் அனுசரணையில், சாய்ந்தமருது எம்.எஸ். காரியப்பர் வித்தியாலய அதிபர் எம்.எஸ்.எம். ஆரிப் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில், பிரதம அதிதியாக சாய்ந்தமருது கோட்டக்கல்விப் பணிப்பாளர் திருமதி அஸ்மா மலிக் கலந்து கொள்வார்.

முன்னாள் அமைச்சர் மர்ஹூம் ஏ.ஆர். மன்சூர் பற்றிய நினைவுப் பேருரையை முன்னாள் பிரதேச சபை உறுப்பினரும் ஓய்வுபெற்ற அதிபருமான ஏ.அப்துல் கபூர் ஆற்றுவார்.

இதன்போது கட்டுரைப் போட்டியில் தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கான பரிசளிப்பு நிகழ்வும் நடைபெறவுள்ளது.

முன்னாள் அமைச்சர் மர்ஹூம் ஏ.ஆர். மன்சூரின் அவரது மறுமை ஈடேற்றத்திற்காக துஆப் பிரார்த்தனையும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

(எம்.எஸ்.எம்.ஸாகிர்)

## மட்டக்களப்பு பொதுநூலக நிர்மாண பணியை பார்வையிட்ட ஆளுநர்



மட்டக்களப்பில் நிர்மாணிக்கப்பட்டு வரும் புதிய பொது நூலகத்தை கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் பார்வையிட்டதோடு, அதன் கட்டுமானப்பணிகளை துரிதப்படுத்துமாறும் அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்தார். மட்டக்களப்பின் அடையாளமாக விளங்கும் இந்நூலகத்தை இலங்கையின் மிகப் பெரிய நூலகமாக மாற்றத் திட்டமிட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

## மாவடி ஸ்ரீ கந்தசுவாமி ஆலயத்தின் ஆடி மஹோற்சவ தீர்த்தோற்சவம்





காரைதீவு மாவடி ஸ்ரீ கந்தசுவாமி ஆலய வருடாந்த ஆடிவேல் விழா மஹோற்சவ தீர்த்தோற்சவம் நேற்று திங்கட்கிழமை சிறப்பாக நடைபெற்றது. கடந்த 06 ஆம் திகதி கொடியேற்றத்துடன் தொடங்கிய மகோற்சவம் தினமும் பகல் இரவு திருவிழாவாக வசந்தமண்டப பூஜையும் சுவாமி உள்வீதி வெளிவீதி வருதலும் நடைபெற்று வந்தது. நேற்று முருகப் பெருமான் காவடி சகிதம் ஊர்வலமாக வந்து சமுத்திர தீர்த்தம் நடைபெற்றது. (படம்: காரைதீவு குறுப் நிருபர்)

## கல்முனையில் போதைப்பொருள் ஒழிப்பு விழிப்புணர்வு நிகழ்வு

(மாளிகைக்காடு குறுப் நிருபர்)



'டயக்கோனியா' மற்றும் பெண்கள் ஆராய்ச்சி செயல் முன்னணியின் அனுசரணையில் போதை ஒழிப்பு தொடர்பான நிகழ்ச்சிகள் கல்முனை இஸ்லாமாபாத் முஸ்லிம் மகா வித்தியாலயத்தின் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

திட்ட இணைப்பாளரும், இஸ்லாமாபாத் முஸ்லிம் மகா வித்தியாலயத்தின் அதிபருமான ஏ.ஜி.எம். றிசாத் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் இளைஞர் யுவதிகள் மத்தியில் எவ்வாறு போதை பாவனை பரவலாக்கப்படுகின்றன? அவை எவ்வாறான முறைகளில் விஸ்தரிக்கப்படுகின்றன? என்பவை தொடர்பான நாடகங்கள், போதையினால் உண்டாகும் தீமைகள். அதில் நாம் எவ்வாறு பாதிக்கப்படுகின்றோம் என்பதை எடுத்துக்காட்டும் வில்லுப்பாட்டு மற்றும் இஸ்லாமிய கசீதா, உரையாடல் என பல ஆக்கங்கள் மாணவர்களால் முன்வைக்கப்பட்டன. இந்நிகழ்வில் அதிதிகளாக கல்முனை கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் எம்.எச்.எம். ஜாபிர், கல்முனை பொலிஸ் நிலையத்தின் பொதுப் பொலிஸ் பரிசோதகர். டபிள்யூ.வாஹிட், இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் பிராந்திய இணைப்பாளர் ஏ.சீ.ஏ.அசிஸ் ஆகியோர் பிரசன்னமாகியிருந்தனர்.

காரைதீவு விவேகானந்தா மத்திய கல்லூரி, கல்முனை அல் பஹ்றியா மகா வித்தியாலயம், கல்முனை இராம கிருஷ்ணமிசன் மகா வித்தியாலயம், நற்பிட்டிமுனை அல் அக்ஸா மத்திய மகாவித்தியாலயம், மருதமுனை அல்மனார் மத்திய கல்லூரி மற்றும் கல்முனை இஸ்லாமாபாத் முஸ்லிம் மகா வித்தியாலயம் ஆகிய ஏழு பாடசாலைகள் இதில் கலந்துகொண்டு ஆக்கங்களை வெளிப்படுத்தியமை குறிப்பிடத்தக்கது.

## வைரஸ் காய்ச்சலிலிருந்து பாதுகாப்பு பெறுமாறு வைத்தியர்கள் ஆலோசனை

(அக்கரைப்பற்று மத்திய நிருபர்)

அம்பாறை மாவட்டத்தில் ஒரு வகையான வைரஸ் காய்ச்சல் பரவி வருவதனால் பொதுமக்கள் அவதானமாக செயற்படுமாறு வைத்தியர்கள் ஆலோசனை வழங்கியுள்ளனர்.

அம்பாறை மாவட்டம் மற்றும் ஏனைய சில மாவட்டங்களிலும் கடும் வெப்பமான காலநிலை நிலவி வருகிறது.

அத்துடன் அண்மைக்காலமாக சிறுவர்கள், பெரியோர்கள், முதியோர்கள் என அனைவரும் ஒரு வகையான காய்ச்சலுடன் கூடிய தடிமன், தொண்டை நோவு, உடல் நோவு போன்ற பல்வேறு உபாதைகளுக்கு உட்பட்டு வருகின்றனர்.

இவை ஒரு வகையான வைரஸினால் ஏற்பட்டுவருவதாகவும், ஒருவரிலிருந்து மற்றைய நபருக்கு இலகுவில் தொற்றக்கூடியது எனவும், அவற்றிலிருந்து பாதுகாப்பு பெறுவதற்கு சுகாதார நடைமுறைகளை கடைப்பிடிக்குமாறு வைத்தியர்கள் ஆலோசனை வழங்கிவருகின்றனர்.

ஒருவரின் மூச்சுக் காற்று மற்றுமொருவருக்கு படுமாயின் அவருக்கும் இந்நோய் பரவுவதற்கு அதிக வாய்ப்பு உள்ளது. இவ்வாறான காய்ச்சல், தடிமன் போன்ற உபாதைகள் ஏற்படுமாயின் உடன் வைத்தியர்களின் ஆலோசனைகளை பெற்று சிகிச்சை பெற்றுக் கொள்ளுமாறு வைத்தியர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

எனவே இதுபோன்ற அறிகுறிகள் தென்படுபவர்கள் உடன் வைத்தியர்களின் ஆலோசனைகளை பெற்று சிகிச்சை பெறுவதன் மூலம் வைரஸ் தொற்றிலிருந்து பாதுகாப்பு பெற்றுக் கொள்வதுடன், ஏனையவர்களுக்கும் பரவாமலும் பாதுகாத்துக் கொள்ளலாம்.

# வைத்தியசாலையில் ஊழியர்கள் இல்லாமல் நோயாளர்கள் திரும்பிச் செல்லும் நிலை இருக்கக்கூடாது – அமைச்சர் டக்ளஸ்

**சாவகச்சேரி விசேட நிருபர்**



சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் கடந்த சில தினங்களுக்கு முன்னர் இரவு வேளையில் திருநீலகண்டன் கடிக்கு இலக்காகிய நபர் ஒருவரை சிகிச்சைக்காக கொண்டு வந்த போது வைத்தியசாலையில் ஊழியர்கள் எவரும் இருக்கவில்லை. இவ்வாறான சம்பவம் போன்று எதிர்காலத்தில் இடம்பெறக்கூடாது. தவறுகளை திருத்திக் கொள்ள வேண்டுமே தவிர நியாயப்படுத்தக்கூடாது என அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா எச்சரித்துள்ளார்.

21/07 ஞாயிற்றுக்கிழமை சாவகச்சேரி ஆதார வைத்தியசாலைக்கு விஜயம் மேற்கொண்டு வைத்தியசாலை நிர்வாகம் மீதான மக்களுடைய குற்றச்சாட்டுக்களை ஆராயும் போதே அவர் இதனைத் தெரிவித்திருந்தார். இது தொடர்பாக மேலும் அவர் கருத்துத் தெரிவிக்கையில்;

மாவட்ட அபிவிருத்திக்குழுத் தலைவர் என்ற ரீதியில் மக்களுடைய பிரச்சினைகளைத் தீர்ப்பதில் எனக்கு அதிக பொறுப்பு உள்ளது. வைத்தியர்கள் வைத்தியசாலையில் இருப்பதில்லை என்ற மக்களுடைய குற்றச்சாட்டுக்களை உறுதிப்படுத்துவது போன்ற ஓர் சம்பவமே அன்று இரவு இடம்பெற்றுள்ளது.

கடமை நேரத்தில் வைத்தியசாலையில் இருக்காத வைத்தியசாலை பணியாளர்கள் மற்றும் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் எனத் தெரிவித்தார். இது தொடர்பாக சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் ரஜீவ் தெளிவுபடுத்துகையில்;

வைத்தியசாலையில் உத்தியோகத்தர்கள் இல்லை என்ற குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்ட தினத்தில் இரவு 12.40 மணிக்கு ஒரு நோயாளரும், 1.30 மணிக்கு இன்னொரு நோயாளரும் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

திருநீலகண்டன் கடிக்கு உட்பட்டவர் 1.00 மணிக்கு முச்சக்கரவண்டியில் வந்ததனை பாதுகாப்புக் கமரா உதவியுடன் பார்வையிட்டோம். ஆனால் அவர்கள் வெளிநோயாளர் பிரிவின் கண்ணாடிக் கதவு அருகில் செல்லவில்லை. அந்த நேரத்தில் வைத்தியர் கடமையில் இருந்ததனை உறுதிப்படுத்தியுள்ளோம்.

இவ் விடயம் தொடர்பாக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என்றார்.

# தங்கள் மத்தியில் வாழ்ந்து தங்களது பிரச்சினைகளை நன்கு புரிந்துகொண்ட ஒரு மதகுருவே புதிய ஆயராக வேண்டும்

## யாழ்ப்பாண மறைமாவட்ட கத்தோலிக்க சமூகம் வேண்டுகோள்

வட மாகாணத்திலும் கிழக்கு மாகாணத்திலும் நான்கு கத்தோலிக்க மறைமாவட்டங்கள் உள்ளன. யாழ்ப்பாண முறைமாவட்டம், மன்னார் மறைமாவட்டம், திருகோணமலை மறைமாவட்டம், மட்டக்களப்பு மறைமாவட்டம் ஆகியனவே அவையாகும்.

இந்த மறைமாவட்டங்களின் நான்கு ஆயர்களுமே தங்களின் ஓய்வுவயதை அடைந்தவர்களாக இருக்கிறார்கள். அதனால் விரைவில் புதிய ஆயர்களை கத்தோலிக்கத் திருச்சபை நியமனம் செய்யவேண்டிய நிலை இருக்கிறது.

புதிய ஆயர்கள் நியமனம் தொடர்பில் கத்தோலிக்க சமூகத்தின் மத்தியில் பெரும் எதிர்பார்ப்புகள் காணப்படுகின்றன. அந்த எதிர்பார்ப்புகளை கருத்தில் எடுத்ததாக நியமனங்கள் அமையவேண்டியது அவசியம் என்பதை அந்த சமூகம் கத்தோலிக்க திருச்சபை உயர்பீடத்தின் கவனத்துக்கு கொண்டுவர விரும்புகிறது.

குறிப்பாக யாழ்ப்பாண மறைமாவட்டத்திற்கான புதிய ஆயர் நியமனம் குறித்து பல்வேறு தகவல்கள் பொதுவெளியில் பரவுகின்றன. பல வருடங்களாக வெளிநாட்டில் இருந்து அண்மையில் நாடு திரும்பிய ஒரு கத்தோலிக்க மதகுரு புதிய ஆயராக நியமிக்கப்படக்கூடிய சாத்தியம் இருப்பதாகவும் பேசப்படுகிறது.

யாழ்ப்பாண மறைமாவட்ட கத்தோலிக்க சமூகம் தங்கள் மத்தியில் நெடுகவும் வாழ்ந்து தங்களது பிரச்சினைகளை நன்கு புரிந்துகொண்ட ஒரு மதகுருவே புதிய ஆயராக நியமனமாக வேண்டும் என்று விரும்புகிறது.

இந்த அக்கறையை கொழும்பு அதிமேற்றிராசனமும் வத்திக்கானும் கருத்தில் எடுத்துச் செயற்படவேண்டும் என்று அவர்கள் வேண்டுகோள் விடுக்கிறார்கள்.

அண்மைக்காலமாக சில மதகுருமாரின் நடவடிக்கைகள் தொடர்பில் கத்தோலிக்க சமூகம் பெரும் விசனம் கொண்டிருக்கிறது. முறைகேடுகள் குறித்து பல்வேறு முறைப்பாடுகள் தெரிவிக்கப்பட்டிருக்கின்றன. இதை கத்தோலிக்க திருச்சபை உன்னிப்பாக கவனத்தில் எடுக்கவேண்டும் என்று யாழ்ப்பாண கத்தோலிக்க சமூகம் விரும்புகிறது.

மக்களின் நலன்களில் கண்ணும் கருத்துமாக இருக்கக்கூடியவரும் திருச்சபையின் மாண்பை பாதுகாக்கக்கூடிய பண்புகளும் கொண்டவருமான ஒரு மதகுருவையே புதிய ஆயராக நியமனம் செய்யவேண்டும் என்று கத்தோலிக்க சமூகம் உயர்பீடத்தை வேண்டிக்கொள்கிறது.

# யாழ். இளையோரிடம் 75 இலட்சம் மோசடி இரு பெண்கள் உள்ளிட்ட மூவர் கைது

**யாழ். விசேட நிருபர்**

யாழ்ப்பாணத்தை சேர்ந்த இளையோரை வெளிநாடுகளுக்கு அனுப்பி வைப்பதாக கூறி பெருந்தொகையான பண மோசடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் இரு பெண்கள் உட்பட மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

வெளிநாடு அனுப்பி வைப்பதாக கூறியவர்களை நம்பி பணத்தினை கொடுத்து ஏமாந்த மூவர் வழங்கிய முறைப்பாட்டின் அடிப்படையில், விசாரணைகளை முன்னெடுத்த யாழ்ப்பாண பொலிஸார் மூவரை கைது செய்துள்ளனர். மானிப்பாய் பகுதியைச் சேர்ந்த பெண்ணொருவரை 10 இலட்ச ரூபாய் மோசடி செய்த குற்றச்சாட்டிலும், காத்தான்குடி பகுதியை சேர்ந்த தற்போது களுத்துறை பகுதியில் வசித்துவரும் பெண்ணொருவரை 25 இலட்ச ரூபாய் மோசடி செய்த குற்றச்சாட்டிலும், யாழ்ப்பாணத்தை சேர்ந்த தற்போது தெஹிவளையில் வசித்து வரும் நபரொருவரை 40 இலட்ச ரூபாய் மோசடி செய்த குற்றச்சாட்டிலும் பொலிஸார் கைது செய்துள்ளனர்.



வடமாகாணத்தில் பாரிய செலவில் ஜூனியர் சுப்பர் சிங்கர் நிகழ்ச்சியை நடத்தி வருகின்ற தொழில் அதிபர்களான சிவதுஷியந்தன், S. பிரசன்னராஜ், வி. நிஷாந்தன் ஆகியோரையும் பிரபல பாடகரும் இசையமைப்பாளரும் நுண்கலைமாணி பட்டதாரியுமான வெற்றி சிந்துஜனையும் கௌரவிக்கும் நிகழ்வு கடந்த ஞாயிற்றுக்கிழமை மன்னார் நகர சபை மண்டபத்தில் நடைபெற்றது. தினகரன், தினகரன் வாரமஞ்சரி சார்பில் சங்கவி பிலிம்ஸ் நிறுவனத்தின் பணிப்பாளரும் மன்னார், பேசாலை சங்கவி தியேட்டர் உரிமையாளருமான துரைராசா சுரேஷ் இவர்களை பொன்னாடை போர்த்தி கௌரவித்தார்.

# புளியங்கூடல் கோவில் நகைகள் திருடிய உதவி குருக்கள் கைது

**யாழ்.விசேட நிருபர்**

யாழ்ப்பாணம், புளியங்கூடல் முத்து விநாயகர் கோவில் நகைகளைக் கொள்ளையிட்ட குற்றச்சாட்டில் 28 வயதான உதவிக் குருக்கள் யாழ்ப்பாணம் மாவட்ட விசேட குற்றத்தடுப்புப் பிரிவுப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

ஆலயத்தினுள் பாதுகாப்புப் பெட்டகத்தில் வைக்கப்பட்டிருந்த 62 பவுண் நகையுடன் 8 இலட்சம் ரூபா பணம் காணாமல்போயிருந்தமை தொடர்பாக ஊர்காவற்றுறைப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.முறைப்பாட்டின் பிரகாரம் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வந்த நிலையில், ஆலயப் பெட்டகம் உடைக்கப்படாது, போலிச் சாவிகளை பயன்படுத்தி கொள்ளையிடப்பட்டுள்ளமையை கண்டறிந்தனர். இதுதொடர்பாக, ஆலய மகோற்சவ காலத்தில் ஆலயத்தில் பணியாற்றிய 28 வயதான உதவி குருக்களை கைது செய்து விசாரணைகளை முன்னெடுத்தனர். இவரிடம் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளில் 40 பவுண் நகைகள் மீட்கப்பட்டுள்ளன. ஏனைய நகைகள் வங்கியில் அடகு வைக்கப்பட்டுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது. சந்தேகநபரை தொடர்ந்தும் பொலிஸார் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

அதேவேளை ஆலயத்தில் நகைகள், பணம் என்பன கொள்ளையடிக்கப்பட்டு நீண்ட காலமாகியும் குற்றவாளிகளை உடனடியாகக் கைது செய்ய வேண்டும் என கடந்த வாரம் பிரதேச மக்கள் கவனயீர்ப்புப் போராட்டம் ஒன்றையும் முன்னெடுத்திருந்தனர். இந்நிலையில் சந்தேநபர் கைது செய்யப்பட்டு, கோயில் நகைகள் ஒரு தொகுதி மீட்கப்பட்டதை அடுத்து பிரதேச மக்கள் வெடி கொளுத்தி தமது மகிழ்ச்சியை வெளிப்படுத்தினர்.

# மன்னார் இலுப்பைக்கடவை சோழமண்டல அரச காணியில் அத்துமீறிய செயல்பாட்டை கண்டித்து கவனயீர்ப்பு போராட்டம்





**தலைமன்னார் விஷேட நிருபர்**

இலுப்பைக்கடவை சோழமண்டல அரச காணியில் பணம் படைத்தவர்கள், வெளிநாட்டவர்களின் அத்துமீறிய செயல்பாட்டைக் கண்டித்து மன்னார் மாவட்ட செயலகத்துக்கு முன்பாக பாதிக்கப்பட்ட மக்கள் கனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர். இது தொடர்பாக ஜனாதிபதிக்கு சென்றடையும் வகையில் மகஜரும் அரச அதிபரிடம் கையளிக்கப்பட்டது.

கடந்த 30 ஆண்டுகளாக மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட இலுப்பைக்கடவை கிராம அலுவலர் பிரிவில் உள்ள சோழமண்டல குளத்தின் கீழ் காணியற்ற நூறு ஏழை விவசாயிகள் பயிர்ச்செய்கையில் ஈடுபட்டு வருகின்றனர். இவர்களுக்கு உரிய ஆவணங்களை வழங்குமாறு பல வருடங்களாக கோரிக்கை விடுத்தும் பயன் எதுவும் ஏற்படவில்லை.

தற்போது கொழும்பில் இருப்பவர்களுக்கும் வெளிநாட்டில் இருப்பவர்களுக்கும் காணி வழங்கப்பட்டு அவர்கள் பயிர்ச்செய்கையில் ஈடுபடுவதற்குரிய முன்னாயத்த வேலைகளில் ஈடுபடுகின்றனர்.

எனவே 30 ஆண்டுகளாக பயிர்ச்செய்கையில் ஈடுபடும் காணியற்ற ஏழை விவசாயிகளுக்கு காணியை உடனடியாக முறைப்படி வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என தங்களை கேட்டுக் கொள்வதுடன். அதனை வலியுறுத்தியே இக்கண்டன ஆர்ப்பாட்டத்தை மேற்கொள்கிறோம் என்பதையும் தங்களுக்கு தெரிவிக்க விரும்புகிறோம். எமது கோரிக்கையை சாதகமாக பரிசீலிப்பீர்கள் என்றும் நம்புகின்றோம் என தெரிவித்து மன்னார் மாவட்ட செயலகத்துக்கு முன்பாக திங்கட்கிழமை (22) காலை 9.30 மணியளவில் மன்னார் பொது அமைப்புக்களின் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் மக்களால் கவனயீர்ப்பு போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. இக்கவனயீர்ப்பு போராட்டத்தில் காணியற்ற பொது மக்கள் பொது அமைப்புக்களின் ஒன்றியத்தின் தலைவர் வீ.எஸ்.சிவகரன், அருட்பணி எஸ்.ஜெயபாலன் குரூஸ் அடிகளார், மன்னார் பிரஜைகள் குழுத் தலைவர் அருட்பணி எஸ். மாக்கஸ் அடிகளார்.

முன்னாள் மன்னார் நகர சபை உறுப்பினர் குமரேஸ் மற்றும் தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்க மன்னார் மாவட்ட இணைப்பாளர் ஏ.பெனடிக் ஆகியோரும் கலந்து கொண்டனர்

# வடக்கின் உதயம்

## தமிழ் மக்கள் கூட்டணியின் முதலாவது தேசிய மாநாடு



தமிழ் மக்கள் கூட்டணியின் முதலாவது தேசிய மாநாடு யாழ். தந்தை செல்வா கலையரங்கில் இடம்பெற்றுள்ளது.

கூட்டணியின் செயலாளர் நாயகம் நாடாளுமன்ற உறுப்பினர் சி.வி.விக்னேஸ்வரன் தலைமையில் நேற்று முன்தினம் (21) மாலை 3 மணியளவில் இடம்பெற்ற இந்த மாநாட்டில் பல்வேறு கட்சிகளின் பிரதிநிதிகள் உட்படப் பலரும் பங்கேற்றுள்ளனர்.

மங்கள வாத்தியங்கள் முழங்க விருந்தினர்கள் வரவேற்கப்பட்டு, மாலைகள் அணிவிக்கப்பட்டு, கட்சிக் கொடி ஏற்றப்பட்டு மங்கள விளக்கேற்றலுடன் மாநாட்டு நிகழ்வு ஆரம்பமாகியுள்ளது.

இதன்போது மங்கள விளக்கின் முதல் சுடரைப் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் ஏற்றிவைத்துள்ளார்.

அதனைத் தொடர்ந்து, செயலாளர் நாயகம் விக்னேஸ்வரன் எம்.பி., தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா, சிறப்புப் பேச்சாளரான யாழ். பல்கலைக்கழக அரசியல் துறைத் தலைவர் பேராசிரியர் கே.ரி.கணேசலிங்கம், யாழ். மாநகர முன்னாள் மேயர் சட்டத்தரணி விஸ்வலிங்கம் மணிவண்ணன், நல்லூர் பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் மயூரன், பேராசிரியர் கந்தையா சர்வேஸ்வரன் மற்றும் தமிழ் மக்கள் கூட்டணியின் மத்திய குழு உறுப்பினர்கள் ஏற்றிவைத்துள்ளனர்.

போரில் உயிரிழந்த தமிழ் உறவுகளுக்கான பொது நினைவுச்சுடரை விக்னேஸ்வரன் எம்.பி. ஏற்றிவைத்ததைத் தொடர்ந்து அகவணக்கம் செலுத்தப்பட்டுள்ளது.

அதன்பின்னர், அண்மையில் உயிரிழந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இராஜவரோதயம் சம்பந்தனுக்கு அஞ்சலி செலுத்தப்பட்டுள்ளது.

இதனையடுத்து, வரவேற்பு நடனங்கள், கலை நிகழ்வுகள், சிறப்புப் பேச்சுக்கள் இடம்பெற்று விருந்தினர் கௌரவிப்புக்களும் நடைப்பெற்றுள்ளன.

## யாழ்ப்பாணம் ஒஸ்மானியா கல்லூரியில் இடைவினைக் கழகம் அங்குரார்ப்பணம்



**சாவகச்சேரி விசேட நிருபர்**

சுன்னாகம் பாரம்பரிய ரோட்டரிக் கழகத்தினால் யாழ்ப்பாணம் ஒஸ்மானியா கல்லூரியில் கடந்த வியாழக்கிழமை இடைவினைக் கழகம் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டுள்ளது. ஒஸ்மானியா கல்லூரியில் இடம்பெற்ற மேற்படி ஆரம்ப நிகழ்வில் பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் சுன்னாகம் பாரம்பரிய ரோட்டரிக் கழக உறுப்பினர்கள் கலந்து கொண்டிருந்தனர்.

## கரவெட்டியில் சிறப்பாக இடம்பெற்ற இரத்ததான முகாம்...!



**கரவெட்டி தினகரன் நிருபர்**

வடக்கு கிழக்கு புனர்வாழ்வு அமைப்பின் அனுசரணையில் யாழ்ப்பாணம் கரவெட்டி ஒன்றிணைந்த இளைஞர் அமைப்பினரால் இரத்ததான முகாம் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை நடாத்தப்பட்டுள்ளது.

கரவெட்டி ஒன்றிணைந்த இளைஞர்கள் அமைப்பின் தலைவர் தலைமையில் கரவெட்டி பிரதேச வைத்திய சாலையில் இடம்பெற்ற குறித்த இரத்ததான முகாமில் கரவெட்டி பிரதேசத்திற்குட்பட்ட 39 பேர் இரத்ததானமளித்தனர்.

இந்நிகழ்வில் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை இரத்த வங்கியினர் கலந்துகொண்டு இரத்தத்தை பெற்றுக் கொண்டனர்.

# இ.தொ.கா தலைவர் முன்வைத்த இடைக்கால கொடுப்பனவு யோசனை வரவேற்புக்குரியது

## ஆனந்தகுமார் பாராட்டு

மலையக பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு இடைக்கால கொடுப்பனவாக 5 ஆயிரம் ரூபாவை அரசாங்கம் வழங்க வேண்டுமென இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தலைவரும், கிழக்கு மாகாண ஆளுநருமான செந்தில் தொண்டமான் முன்வைத்துள்ள கோரிக்கை நியாயமானது, அக்கோரிக்கையை நிறைவேற்றுவதற்கு ஜனாதிபதி நிச்சயம் நடவடிக்கை எடுப்பார் என்ற நம்பிக்கை உள்ளதாக ஜனாதிபதியின் கீழ் இயங்கும் தொழிற்சங்க முடிவுகளை எடுக்கும் குழுவின் உறுப்பினரும், ஐக்கிய தேசியக் கட்சியின் இரத்தினபுரி மாவட்ட அமைப்பாளருமான சுப்பையா ஆனந்தகுமார் தெரிவித்தார்.



இதுதொடர்பில் அவர் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில்,

பெருந்தோட்ட தொழிலாளர்களுக்கு நாள் சம்பளமாக ஆயிரத்து 700 ரூபா வழங்கப்பட வேண்டுமென தீர்மானம் எட்டப்பட்டிருந்தாலும் நீதிமன்ற நடவடிக்கை காரணமாக அது இடைநிறுத்தப்பட்டுள்ளது.

எனவே, தோட்ட தொழிலாளர்களுக்கு நாள் சம்பளமாக ஆயிரத்து 700 ரூபா கிடைக்கும்வரை இடைக்கால கொடுப்பனவாக 5 ஆயிரம் ரூபா வழங்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையை இ.தொ.கா தலைவர் முன்வைத்துள்ளார். இதனை வரவேற்றுள்ளோம். தோட்டத் தொழிலாளர்களுக்கு சம்பள உயர்வு கிடைக்க வேண்டுமென்பதில் ஜனாதிபதி உறுதியாக உள்ளார். அதனால் தான் மே தினத்தன்று கொட்டகலைக்கு வந்து தொழிலாளர்களுக்கு நற்செய்தியை வெளியிட்டார்.

எனினும், பெருந்தோட்டக் கம்பனிகள் நீதிமன்றத்தை நாடியுள்ளதால் தொழிலாளர்களுக்கு இன்னும் அந்த சம்பள உயர்வு கிட்டவில்லை. இது கவலையளிக்கின்றது. இருந்தபோதிலும் நீதிமன்றம் ஊடாக நல்ல முடிவு வரும் என நம்புகின்றோம்.

9 பெருந்தோட்ட நிறுவனங்கள் சம்பள உயர்வை வழங்குவதற்கு முன்வந்துள்ளன. ஆயிரத்து 700 ரூபாவுக்கும் குறைவான சம்பளத்தை ஏற்பதற்கு தோட்ட தொழிலாளர்கள் தயாரில்லை. நாமும் அதற்கு உடன்பட மாட்டோம். இந்நிலையில் தொழிலாளர்களுக்கு நாள் சம்பளமாக ஆயிரத்து 700 ரூபா கிடைக்கும்வரை 5 ஆயிரம் ரூபா இடைக்கால கொடுப்பனவை வழங்குமாறு முன்வைக்கப்பட்டுள்ள கோரிக்கை நியாயமானது என தெரிவித்தார்.





## புதிய வானம் விருது வழங்கும் விழா 2024

புதிய வானம் மக்கள் நல அறக்கட்டளையும் கணபதி அறநெறி பாடசாலையும் இணைந்து மகத்தான ஆளுமைகளை தேர்வு செய்து கௌரவிக்கும் மாபெரும் விருது வழங்கும் விழா விரைவில் நடைபெறவுள்ளது. இந்த விருது விழாவில் ஆன்மீகவாதிகள், ஆசிரியர்கள், சமூக ஆர்வலர்கள், கலை, இலக்கிய படைப்பாளிகள், ஓவியர்கள், கலைஞர்கள் உள்ளிட்டோருக்கு விருதுகள் வழங்கப்படவுள்ளன. இந்த விருதுக்கு நீங்கள் தகுதியானவர் என்று கருதினால் பாஸ்போர்ட் அளவிலான வண்ணப்படத்துடன் கீழே பிரசுரிக்கப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்தில் உள்ளவாறு தங்களின் விபரங்களை தெளிவான கையெழுத்து அல்லது (டைப் செய்து) தபாலிலோ அல்லது வாட்சாப், இமெயில் வழியாகவோ உறுதிப்படுத்துவதற்கான ஆவணங்களுடன் அனுப்பிவைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது. இது தொடர்பான மேலதிக தகவல்களை பெறுவதற்கும் மற்றும் விபரங்களை அறிவதற்கும் மணி ஸ்ரீ காந்தன் 0779614611, (இந்தியா 0091 8489726025 மாதவன் தனலட்சுமி 0763475466 சதாசிவம் உதயசாந்தன் 0763469947 தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. விண்ணப்பங்களை தபாலில் அனுப்புவதற்கான முகவரி 'Puthiya vaanam Award2024' Mrs. Dhanalakshmi Madhavan No19, Ellakanda, Horana. விண்ணப்பங்களை அனுப்புவதற்கான கடைசி திகதி 25.07.2024 என அறிவிக்கப்பட்டுள்ளது.

# யுனெஸ்கோவில் இலங்கை உறுப்புரிமை பெற்று 75 ஆண்டுகள் நிறைவு

## இலங்கை வந்த யுனெஸ்கோ விசேட குழுவினர்

**மாத்தளை சுழற்சி நிருபர்**





யுனெஸ்கோ அமைப்பில் இலங்கை இணைந்து 75 வருடங்கள் பூர்த்தியை முன்னிட்டு இலங்கை வந்துள்ள யுனெஸ்கோவின் பணிப்பாளர் நாயகம் ஒட்ரோ அசோலே அண்மையில் கண்டிக்கு விஜயம் மேற்கொண்டிருந்தார். யுனெஸ்கோவின் பணிப்பாளர் குழுவினர் sea plane மூலம் நேற்று முன்தினம் திகன பகுதியில் வந்து இறங்கினர். இவர்களுக்கு மத்திய மாகாண ஆளுநர் லலித் யூ கமகேவினால் மகத்தான வரவேற்பு அளிக்கப்பட்டது. கண்டிக்கு விஜயம் மேற்கொண்ட ஒட்ரோ அசோலே கண்டி தலதா மாளிகை, பேராதனை பல்கலைக்கழகம், பேராதனை பூங்காவனம் போன்ற வரலாற்று சிறப்புமிக்க இடங்களையும் பார்வையிட்டதுடன் அங்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ள நிகழ்வுகளிலும் இவர்கள் கலந்து கொண்டனர்.


# மாத்தளை மகாத்மா காந்தி சர்வதேச நிலையத்தில் குச்சுப்புடி, பரதநாட்டிய நிகழ்வு

## ஓய்வுபெற்ற பொறியியலாளர் கலாபூஷணம் புண்ணியசீலன் பிரதம அதிதி

டுபாயிலுள்ள அந்தரா இன்ஸ்டிடியூஷன்ஸ் ஒப் பெர்பார்மிங் ஆர்ட்ஸ் எல்எல்சி அமைப்பின் குச்சுப்புடி மற்றும் பரதநாட்டிய "பிரக்ருதி த்வனி 2024, சப்தமி " என்ற நிகழ்வு இன்று 23ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மாலை 5.30 மணிக்கு மாத்தளை மகாத்மா காந்தி சர்வதேச நிலையத்தில் நடைபெறவுள்ளது. அனுமதி இலவசம் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்வுக்கு ஓய்வுபெற்ற பொறியியலாளர் கலாபூஷணம் எஸ். புண்ணியசீலன் பிரதம அதிதியாக கலந்து கொள்ளவுள்ளார்.

எல்லைகளைத் தாண்டிய கடல் திரைகளை கடந்து ஒரு வசீகரிக்கும் பாரம்பாிய நடன கலைகளுக்குள் உங்களை இந்த நிகழ்வு அழைத்துச் செல்லவுள்ளது. இங்கு இந்திய பாரம்பரிய கலையான குச்சுப்புடி நடனமும், பாரதத்தின் பெருமையை புலப்படுத்தும் பரதநாட்டிய நடனமும் அரங்கேறவுள்ளன. இந்தியக் கலைஞரும் நடனம் மற்றும் இசை ஆசானுமாகிய திருமதி விம்மி பகவதிஷ்வர் தலைமையில் டுபாயிலிருந்து வருகை தரும் சிறப்புக் கலைஞர்கள் இந்நிகழ்வில் தங்களது கலைநிகழ்ச்சிகளை மேடையேற்றவுள்ளனர்.



# நுவரெலியாவில் ஆணொருவரின் சடலம் மீட்பு

லுள்ள தங்குமிட விடுதியொன்றிலிருந்து ஆணொருவரின் சடலம் நேற்று மீட்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர் .

பனாபிட்டிய கரந்தெனிய பகுதியை சேர்ந்த 31 வயதுடைய ஒருவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார். உயிரிழந்த நபர் கடந்த வெள்ளிக்கிழமை (19) பிற்பகல் தங்குமிடத்திற்கு வந்ததாகவும் நேற்று காலை அந்த இடத்தை விட்டு வெளியேறுவதாக விடுதி நிர்வாகத்துக்கு தெரிவித்திருந்ததாகவும் கூறப்படுகின்றது.

எனினும் திங்கட்கிழமை (22) காலை வரை அவர் வெளியே வராத காரணத்தால் சந்தேகம் ஏற்பட்ட ஊழியரொருவர் அறையில் ஜன்னல் வழியாக பார்த்த போது அந்த நபர் தரையில் விழுந்து கிடப்பதைக் கண்டு நுவரெலியா பொலிஸாருக்கு தகவல் வழங்கியுள்ளார்.

அதற்கமைய சம்பவ இடத்துக்கு வருகை தந்த பொலிஸார் குறித்த நபர் தங்கியிருந்த அறையின் கதவை உடைத்து உள்நுழைந்து பார்த்த போது அவர் கீழே விழுந்த நிலையில் காணப்பட்டுள்ளார்.

பின்னர் பொலிஸாரால் 1990 நோயாளர் காவு வண்டி சேவைக்கு அழைப்பு விடுத்ததையடுத்து ஸ்தலத்துக்கு விரைந்தவர்கள் பரிசோதனை செய்தனர். இதனையடுத்து குறித்த நபர் உயிரிழந்துள்ளதை உறுதிப்படுத்தினர்.

# இலங்கையை மீளக்கட்டியெழுப்புவதற்கான அரசாங்கத்தின் பணிகள் பாராட்டுக்குரியன

## ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமைத்துவத்தை மெச்சுகிறார் அவுஸ்திரேலிய முன்னாள் பிரதமர் ஸ்கொட் மொரிசன்

பொருளாதார நெருக்கடிக்குப் பின்னர் கடந்த இரண்டு வருடங்களில் இலங்கையில் ஸ்திரத்தன்மையை மீளக் கட்டியெழுப்புதற்காக மேற்கொள்ளப்பட்டு வரும் பணிகள் உண்மையிலேயே பாராட்டக்குரியதாகும். இது போன்ற எதிர்கால சவால்களை இனிவரும் காலங்களிலும் எதிர்கொள்வதற்கான தலைமைத்துவத்தைத் தெரிவு செய்வதற்கு எதிர்வரும் மாதங்களில் மக்கள் சரியான தீர்மானங்களை எடுக்க வேண்டுமென அவுஸ்திரேலியாவின் முன்னாள் பிரதமரும், நிதி அமைச்சருமான ஸ்கொட் மொரிசன் தெரிவித்தார்.

கொழும்பில் அண்மையில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய போது இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில், "கடந்த காலங்களில் நான் சில சந்தர்ப்பங்களில் இங்கு வந்திருக்கிறேன். அந்த காலகட்டத்துடன் ஒப்பிடுகையில் பல மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. அவ்வாறு சில ஆண்டுகளுக்கு முன்னர் திருகோணமலை துறைமுகத்துக்கு விஜயம் செய்திருந்த போது, அது உலகிலேயே சிறந்த துறைமுகம் எனத் தெரிவிக்கப்பட்டது.

நான் இலங்கைக்கு வந்ததற்கு மற்றுமொரு காரணம் இலங்கையர்களுடனான ஒற்றுமையை வலுப்படுத்துவதற்காகவாகும். இலங்கையர்கள் அவுஸ்திரேலியாவின் சிறந்த நண்பர்களாவர். இலங்கைக்கும் அவுஸ்திரேலியாவுக்கும் இடையில் அற்புதமான மக்கள் உறவுமுறை உள்ளது. அது உண்மையானதும் கூட. இலங்கை மீது எமக்கு பாரிய நம்பிக்கை உள்ளது. அனைத்து இலங்கையர்களையும் நான் கேட்டுக்கொள்வது என்னவென்றால், எதிர்வரும் மாதங்களில் நீங்கள் மிக முக்கியமான தீர்மானங்களை எடுக்க வேண்டியுள்ளது. இந்த கோரிக்கையை மக்கள் முடிவுகளை எடுப்பதில் அவுஸ்திரேலியா தலையிடுவதாக எண்ணிவிடக் கூடாது. இலங்கை சிறந்த ஜனநாயக நாடு என்பதை எண்ணி அனைவரும் பெருமை கொள்ள வேண்டும்.



பொருளாதார நெருக்கடிக்குப் பின்னர் கடந்த இரண்டு வருடங்களில் இலங்கையில் ஸ்திரத்தன்மையை மீண்டும் கொண்டு வருவதற்காக மேற்கொள்ளப்பட்டு வரும் பணிகள் உண்மையிலேயே அசாதாரணமானவை. எனினும் அவை தைரியத்துடன் முன்னெடுக்கப்படுகின்றன. இது இலங்கை மக்களின் பெரும் தியாகங்களையும், ஜனாதிபதியின் துணிச்சலான முடிவெடுக்கும் திறனையும் உள்ளடக்கியதாகக் காணப்படுகிறது. நாட்டுக்காக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தலைமைத்துவத்திற்கு அவருக்கு பாராட்டுகளையும் நன்றிகளைத் தெரிவிக்க விரும்புகிறேன். இலங்கை இன்னும் பல சாதனைகளை செய்யும். ஆனால் அதைச் செய்ய, வலுவான பொருளாதாரம் தேவை. நிலையான ஜனநாயகம் தேவை. அவுஸ்திரேலியா போன்ற நண்பர்கள் மற்றும் பங்காளிகளுடன் இலங்கை நெருக்கமாக இருக்க வேண்டும்" என்று குறிப்பிட்டார்.

**றிஸ்வான் சேகு முகைதீன்**

# நவீன சமூகமயமாக்கலில் நடைமுறை கல்வியின் நிலை

உலக நாடுகளுடன் ஒப்பிடும்போது நம் நாட்டின் வருடாந்த வருவாயில் பெருந்தொகையான நிதி இலவசக் கல்விக்காக ஒதுக்கப்படுகிறது. இம்முறைமையினால் அனைவருக்கும் கல்வி, கல்வியில் சம வாய்ப்பு என்பன சாத்தியமாகின்றன. முன்னைய காலங்களில் நிலவிய சமூக ஏற்றத்தாழ்வுகள், வரைமுறைகள், இறுக்கமான சமூக முறைமைகள் போன்றன இலவசக் கல்வி முறையினால் மாற்றம் பெற்றன.

கல்விக்கும் இந்த சமூகமயமாக்கலுக்குமான தொடர்பு மிகவும் பரந்ததும் ஆழமானதுமானதுமாகும். தற்கால நவீன சமூகமயமாக்கலுக்கு மாணவர்களை உட்படுத்துவதில் நம் நாட்டு கல்வி முறையை எத்தனை தூரம் சாத்தியப்படுகின்றது என்பதை இங்கு நோக்க வேண்டியுள்ளது.

பிள்ளையை சமூகத்தோடு தொடர்பு கொள்ளச் செய்வதில் குடும்பம், நட்பு வட்டாரம், ஊடகம், மொழி, மதம், கலாசாரம், அரசு, சட்டம் போன்ற பல விடயங்கள் அடிப்படையாய் அமைந்தாலும் கல்வி முறைமை பிள்ளையை சமூகமயப்படுத்துவதில் அடிநாதமாய் விளங்குகின்றது என்பதே உண்மை.



மாணவர்களின் நடத்தை விருத்தி, சிந்திக்கும் முறைமை, பிரச்சினைகளுக்கு தைரியமாக தீர்வு காணும் திறன், சவால்களை எதிர்கொள்ளும் திறன், வாழ்க்கையை திட்டமிடல், சமூகத்தோடு இணைந்து வாழும் திறமை, தேசிய ஒருமைப்பாடு, தேசப்பற்று, சமூக விழுமியங்களை மதித்து பேணல், சுயதிறன்களை வளர்த்துக் கொள்ளுதல், சுயமுயற்சிகளில் ஈடுபடுதல், நாட்டின் பொருளாதார அரசியல் தலங்களில் ஈடுபாடு காட்டுதல் போன்ற பல பரிமாணங்களில் மாணவர் சமுதாயத்தை கல்வி முறைமை இட்டுச் செல்கின்றதா என்று ஆராய வேண்டும்.

மருத்துவ, பொறியியல் துறையில் பட்டம் பெறும் மாணவர்களில் எத்தனை பேர் தாய்நாட்டிலே கடமையாற்ற விரும்புகின்றனர்? பட்டம் பெற்றும் தொழில் வாய்ப்பு இன்றி இருக்கும் பட்டதாரிகளில் எத்தனை பேர் அரச வேலை இன்றி சுயமுயற்சிகளில் ஈடுபட தயாராக உள்ளனர்? அதற்கான திறனையும் அடிப்படைகளையும் நம் நாட்டு கல்வி முறைமை ஏற்படுத்துகின்றதா? இளம் தலைமுறையினர் அரசியலில், சமூக செயற்பாடுகளில், பொதுக்கொள்கையாக்க செயற்பாடுகளிலும் ஈடுபாடு கொண்டுள்ளனரா? அல்லது இளந்தலைமுறையினரின் அரசியல் சமூக பொதுக் கொள்கையாக செயல்பாடுகளின் ஈடுபாடு திருப்திகரமானதா? அரசியல் சமூக முரண்களை புதிய சமுதாயம் எதிர்த்து கேள்வி கேட்கின்றதா?

மேற்கூறிய அனைத்து வினாக்களையும் சிந்திக்கையில் நம் நாட்டின் சமூக நகர்விற்கு எந்த கல்வி முறைமை காரணமாகியதோ, அதே கல்வி முறைமை சமூக தேக்க நிலைக்கும் தற்காலத்தில் காரணமாகியுள்ளது என்ற எண்ணம் தோன்றும். நீண்ட காலமாக நடைமுறையில் உள்ள ஆரம்ப மற்றும் இடைநிலை பாடசாலை கல்வித் திட்டமும் பாடத்திட்டமும் நடைமுறை தேவைகளை பூர்த்தி செய்வதில் தோல்வி கண்டுள்ளன எனலாம். இதற்கென கடந்த ஐந்து வருட காலப்பகுதியில் கல்விச் சீர்திருத்த முன்மொழிவுகள் பல முன்வைக்கப்பட்டாலும் இன்றும் செயல்நிலைக்கு வந்தபாடில்லை.

ஆரம்பத்தில் நகர்ப்புறங்களில் இயங்கி இப்போது கிராமப்புறம் வரை பரவி விட்ட பிரத்தியேக வகுப்பு கலாசாரம், நீண்ட காலமாக செயல்பட்டு வருகின்ற பரீட்சை மைய கல்வி முறையினால் சிறந்த சமூகமயப்படுத்தப்பட்ட சமூகத்தை கட்டி எழுப்ப முடியுமா என்பது அடுத்த பெரும் பிரச்சினை. மேலும் சமூகத்தோடு இயைபுபடக்கூடிய வகையிலான ஏற்பாடுகள் புகுத்தப்பட வேண்டும். பாலியல் விழுமியம் சார் அறிவு கட்டாயப்படுத்தப்பட வேண்டும். ஊடகங்களை பாவிக்கும் முறைமை, சமூகத்தை அணுகும் முறைமை என்பன நடைமுறை ரீதியாக கற்பிக்கப்பட வேண்டும் என்று மாணவரை சமூகமயப்படுத்த வேண்டிய ஏற்பாடுகள் பலவற்றை வரிசைப்படுத்தலாம்.

**சுபாகரன் சதீஸ்**
**கல்வியியல் சிறப்புக் கற்கை**
**கிழக்குப் பல்கலைக்கழகம்**

# டுபாய் அந்தரா கலைக் கல்லூரியின் மாபெரும் நாட்டிய நடன நிகழ்ச்சி






டுபாய் அந்தரா கலைக் கல்லூரியைச் சேர்ந்த மாணவிகள் தமது குருவான கலைக் கல்லூரியின் அதிபர் திருமதி விம்மி பகவதிஷ் வருடன் இலங்கை வந்து நடத்திய மாபெரும் நாட்டிய நடன நிகழ்ச்சி மருதானை எல்பின்ஸ்டன் மண்டபத்தில் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற போது பிடிக்கப்பட்ட படங்கள்...





கல்விக் கண் திறந்த பெருந்தலைவர் காமராஜரின் '121' வது ஜனன தினத்தை முன்னிட்டு உலகளாவிய காமராஜர் ஞாபகார்த்த மன்றத் தின் இலங்கை அமைப்பு அண்மையில் உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டது. இவ்விழா, அமைப்பின் தலைவர் அமிர்தம் ஜெயக்குமார் உட்பட மன்ற நிர்வாகிகள் தலைமையின்கீழ் மிகவும் விமர்சையாக நடைபெற்றது. இந்நிகழ்வில், பிரதம மற்றும் சிறப்பு அதிதிகள் என பலரும் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. மன்றத்தின் ஆரம்ப நிகழ்வாக தெரிவு செய்யப்பட்ட சில பாடசாலை மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களும் வழங்கி வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## தமிழ்நாடு சிவாக்கர தேசிக சுவாமிகள் அறநெறிப் பாடசாலைகளுக்கு விஜயம்

திருக்கயிலாய பரம்பரை ஸ்ரீ கந்தப் பரம்பரை சூரியனார் கோயில் ஆதீனம் ஸ்ரீ கார்யம் அருட்குருநாதர் தவத்திரு ஸ்ரீமத் சிவாக்கர தேசிக சுவாமிகள் அருளாணையின் வண்ணம் பிரணவம் அறக்கட்டளையின் அனுசரணையில் திருஞானசம்பந்தர் சைவப் பணி மன்ற அறநெறிப் பாடசாலைகளுக்கு சுவாமிகள் விஜயம் செய்து அருளாசி வழங்கவுள்ளார்.

அத்துடன் தமிழ்நாடு திருஞான சம்பந்தர் திருமடத்தைச் சேர்ந்த திருக்கயிலாய பரம்பரை ஸ்ரீ கந்த பரம்பரை சூரியனார் கோவில் ஆதீனம் ஸ்ரீ கார்யம் வாமதேவ தவத்திரு சிவாக்கர தேசிக சுவாமிகள் ஆன்மீக சொற்பொழிவுகளையும் ஆற்றவுள்ளார்.




மட்டக்களப்பு கண்ணபுரம் கிழக்கு 35ஆம் கிராமத்தில் அமைந்துள்ள ஸ்ரீ சிவமுத்துமாரி அம்பாள் ஆலயத்தில் இடம்பெற்ற பக்திமிகு தீ மிதிப்பு வைபவத்தில் நூற்றுக்கும் மேற்பட்ட பக்தர்கள் தங்களது நேர்த்தியை நிறைவேற்றினர். இந்நிகழ்வு ஆலய பிரதம குரு கிரியா மணி. சிவஸ்ரீ தர்ம சுதந்திரன் குருக்கள் தலைமையில் இடம்பெற்றது.
(படங்கள்: கலாபூஷணம் இராசையா கிருஷ்ண பிள்ளை ஜே.பி)

## பிரணவம் அறக்கட்டளையினதும் திருஞானசம்பந்தர் சைவப்பணி மன்றத்தினதும் ஓராண்டு நிறைவு விழா


பிரணவம் அறக்கட்டளையினதும் திருஞானசம்பந்தர் சைவப் பணி மன்றத்தினதும் ஓராண்டு நிறைவு விழா திருக்கயிலாய பரம்பரை ஸ்ரீகந்தப் பரம்பரை சூரியனார் கோயில் ஆதீனம் ஸ்ரீ கார்யம் அருட்குருநாதர் தவத்திரு ஸ்ரீமத் சிவாக்கர தேசிக சுவாமிகள் அருளாணையின் வண்ணம் பிரணவம் அறக்கட்டளையினதும் திருஞானசம்பந்தர் சைவப்பணி மன்றத்தினதும் ஓராண்டு நிறைவு விழாவையொட்டி பிரணவம் அறக்கட்டளைக்கும் திருஞானசம் பந்தர் சைவப்பணி மன்றத்துக்கும் திருக்கயிலாய பரம்பரை ஸ்ரீ கந்தப் பரம்பரை சூரியனார் கோயில் ஆதீனம் ஸ்ரீ கார்யம் அருட்குருநா தர் ஸ்ரீமத் சிவாக்கர தேசிக சுவாமிகள் அருளாசி வழங்கி சொற்பொழி வாற்றவுள்ளார்.

இந்த அருளாசி வழங்கும் நிகழ்வு எதிர்வரும் 2024.08.25ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு ஹட்டன் ஸ்ரீ மாணிக் கப்பிள்ளையார் தேவஸ்தானத்தின் ஸ்ரீ கஜலட்சுமி மண்டபத்தில் நடை பெறவுள்ளது.

இந்த அருளாசி வழங்கலைத் தொடர்ந்து அறநெறிப் பாடசாலை ஆசிரியர்களை கௌரவிக்கும் நிகழ்வும் மாணவர்களுக்கு பரிசில் கள் வழங்கும் நிகழ்வும் நடைபெ றவுள்ளது.

இந்த அருளாசி வழங்கும் நிகழ் வுக்கு தினகரன், தினகரன் வாரமஞ் சரி ஊடக அனுசரணை வழங்குகி றது.



# கொள்வனவு அறிவிப்பின் திருத்தம்

நீர் வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சு

தேசிய சமூக நீர் வழங்கல் திணைக்களம்

DNCWS

## கேள்வி மனுக்கோரல்

16.07.2024 அன்று தேசிய சமூக நீர் வழங்கல்திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட ஒப்பந்த எண் DNCWS/PRO/2024/Nano/01 கீழ்க்கண்டவாறு தகுதிகள் (Qualifications) திருத்தப்பட்டுள்ளது என்பதை அன்புடன் தெரிவித்துக் கொள்கிறேன். ஏனைய நிபந்தனைகள் மற்றும் விதிகள் மாறாது என்பதையும் மேலும் தெரிவித்துக் கொள்கிறேன்.

| பெயர் மற்றும் ஒப்பந்தத்தின் பெயர் | தகமைகள் | மீளளிக் கப்படாத கட்டணம் LKR | மனு செல்லுப டியாகும் (நாட்கள்) | மனுப் பாதுகாப்பு LKR | மனுப் பாதுகாப்பு செல்லுபடி யாகும் (நாட்கள்) | மனுக்கள் மூடப்படும் திகதி மற்றும் நேரம் |
|---|---|---|---|---|---|---|
| Construction of Plant Rooms and Installation RO/Nano Plants Monaragala , Batticaloa ,Puttalam District, CBO<br>**Contract No: DNCWS/PRO/2024/Nano/01** | CIDA Grade C7 or above / 3 Year Experience of Nano Plants Installation | 4,000.00 | 77 | 180,000/- | 21.11.2024 | 2024.08.06 மு.ப.10.00 |
| நீர் வழங்கல் மற்றும் கழிவுநீருக்கான CIDA பதிவு கட்டாயமாகும் | | | | | | |

தலைவர்,
திணைக்களத்தின் பெறுகை குழு,
**தேசிய சமூக நீர் வழங்கல் திணைக்களம்,**
இல-1114, பன்னிபிட்டிய வீதி, தலவத்துகொட.
**2024.07.23**

SELACINE MEDIA SOLUTIONS

WATERS EDGE

# விலைக்கோரல் அறிவித்தல்

## காப்புறுதிக்கான சேவை வழங்குநர்
## ஊழியர் மருத்துவ காப்பீடு

விலைக்கோரல் இல. WE/PUR/SI/2024/24

**ஊழியர் மருத்துவக் காப்பீடு - வருடாந்த காப்புறுதிக்காக கீர்த்தி வாய்ந்த காப்புறுதி நிறுவனங்களிடமிருந்து விலைமனுக்களை பத்தரமுல்ல, வோட்டர்ஸ் எட்ஜ் நிறுவனம் அழைக்கின்றது.**

**கவனிக்கவும்:**

ஒரு கேள்விப் படிவத்திற்கு மீளளிக்கப்படாத 2000.00 ரூபாவை ரொக்கப் பணமாக செலுத்துவதன் பேரில் 2024 ஜூலை 23ஆம் திகதி முதல் 2024 ஆகஸ்ட் 12ஆம் திகதி வரையான வார நாட்களில் மு.ப. 8.30 மணி முதல் பி.ப. 5.30 மணி வரையில் வோட்டர்ஸ் எட்ஜ் நிறுவனத்தின் கொள்வனவுப் பிரிவிலிருந்து கேள்விப் படிவங்கள் மற்றும் தொடர்புடைய ஆவணங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை தலைவர், பெறுகைக் குழு, வோட்டர் எட்ஜ் லிமிடெட், இல. 316, எத்துள் கோட்டே வீதி, பத்தரமுல்ல எனும் முகவரிக்கு முகவரியிட்டு 2024 ஆகஸ்ட் 14ஆம் திகதி மு.ப. 11.00 மணி அல்லது அதற்கு முன் தலைவரின் செயலாளர் அறையில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடுதல் வேண்டும். விலைமனுக்களைத் தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ''விலைக்கோரல் பெயர்'' குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும். விலைமனுக்கள் 2024 ஆகஸ்ட் 14ஆம் திகதி மு.ப. 11.00 மணிக்கு விலைமனுதாரர்கள் அல்லது விலைக்கோரலில் பங்குபற்றுவதற்கு அவர்களால் தெரிவுசெய்யப்பட்ட பிரதிநிதிகளின் முன்னிலையில் விலைமனுக்கள் முடிவுறுத்தப்பட்டு உடன் திறக்கப்படும். விலைமனுவுடன் மீளளிக்கப்படாத கட்டணம் செலுத்தியதற்கான பற்றுச்சீட்டின் பிரதியொன்றை தயவு செய்து இணைக்கவும். விலைக்கோரல் ஆவணத்தில் தேவைப்படுத்தப்பட்டுள்ள சகல விபரங்களையும் விலைமனுதாரர்கள் பூர்த்தி செய்தல் வேண்டும்.

**குறிப்பு:**

**2024 ஆகஸ்ட் 13ஆம் திகதி விலைக்கோரல் முடிவுறுத்தப்படும்.**

**பெறுகைக் குழுத் தலைவர் (DPC),**
**வோட்டர்ஸ் எட்ஜ் லிமிடெட்,**
**316, எத்துள் கோட்டே வீதி,**
**பத்தரமுல்ல,**
**இலங்கை.**
**தொலைபேசி:** 0112863863/0112887050 (நீடிப்பு 3030)

---

## கிழக்கு மாகாண சுற்றுலா பணியகம்
## உட்துறைமுக வீதி,
## திருகோணமலை

# வெளிப்படுத்துகை விண்ணப்பங்கள் கோரல்

அரச தனியார் பங்களிப்பின் கீழ் திருகோணமலையில் சுற்றுலா சார்ந்த முன்முயற்சியாக (80 பேர்ச்சஸ்) காணியின் முகாமைத்துவம் மற்றும் பராமரித்தல்

உள்ளூராட்சி, கிராமிய அபிவிருத்தி, சுற்றுலா அமைச்சின் கீழ் அமைந்துள்ள கிழக்கு மாகாண சுற்றுலா பணியகமானது, திருகோணமலையில் சுற்றுலா சார்ந்த முன்முயற்சியாக உட்துறைமுக வீதி, திருகோணமலையில் (80 பேர்ச்சஸ்) காணியினை சுற்றுலா அபிவிருத்தி மையமாக பராமரித்து செயற்படுத்துவதற்கான செயற்றிட்டத்தை முன்னெடுத்துள்ளது.

முகாமைத்துவம் செய்வதற்காக கிழக்கு மாகாண சுற்றுலா பணியகமானது மேற்கூறப்பட்ட துறையில் முதலீடு செய்ய விரும்பும் தனியாரின் விருப்பை வெளிப்படுத்துவதற்கான வேண்டுகோள் விண்ணப்பங்களை கோரியுள்ளது. இதில் துறைசார் முன் அனுபவம், தொழில் திறமை, நிதி நிலைமை மற்றும் முகாமைத்துவ தகைமைகள் கருத்திற் கொள்ளப்படும்.

இது தொடர்பான மேலதிக தகவல்களை பெற்றுக்கொள்ள கிழக்கு மாகாண சபையின் www.ep.gov.lk இணையதளத்தில் பார்வையிடலாம்

**தவிசாளர்**
**பெறுகைக் குழு**
**கிழக்கு மாகாண சுற்றுலா பணியகம்**
**உட்துறைமுக வீதி**
**திருகோணமலை**
**23.07.2024**

---

இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசு
போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு
**வீதி அபிவிருத்தி அதிகாரசபை**

# விலைமனுக்கோரல்

**வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் அஸ்போல்ட் ஆலைகளுக்காக 60/70 தர Decanted Bitumen 1,400 MT கொள்வனவு செய்தல்**

**ஒப்பந்த இல : RDA/DPR/PRO/WK/NCB/ASPL/2024/94**

| விபரம் | இயந்திராலை | எண்ணிக்கை |
|---|---|---|
| 60/70 Grade Decanted Bitumen | All RDA Asphalt Plants | 1,400 MT |

மேற்குறிப்பிடப்பட்ட 60/70 தர Decanted Bitumen கொள்வனவு செய்வதற்காக தேசிய மனுக்கோரல் போட்டி முறையின் கீழ் விலைமனுக்கள் கோரப்படுகின்றன. ஆர்வமுள்ள மனுதாரர்கள் 2024.07.22 ஆம் திகதி முதல் 2024.08.09 ஆம் திகதி வரை வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் இணையத்தளம் **www.rda.gov.lk** இனை பார்வையிடுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

---

Marriage Proposals
in the
Sunday Observer
Is the best way to fulfil
your Future Dreams

Repeat
Your ad
For
Better
Offers

---

## சுகாதார சேவைகள் மாகாண பணிப்பாளர் - மேல் மாகாணம்

# விலைமனுக்களுக்கான அழைத்தல்

## மேல் மாகாணத்திலுள்ள மருத்துவ நிலையங்களுக்கான நிர்மாணம்

1. பின்வரும் அம்சங்களுக்காக கொழும்பு-10, மாளிகாவத்த செயலக கட்டிடத்திலுள்ள சுகாதார சேவைகள் மாகாண பணிப்பாளரின் அலுவலக திணைக்கள பெறுகைக் குழுத் தலைவர் முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை பெற்றுக் கொள்வதுடன், விலைமனுக்கள் 2024.08.06 ஆம் திகதியன்று மு.ப. 10.30 மணிக்கு மூடப்படும்.

| இல. | விலைமனு குறியீட்டு இல. | விலைமனுப் பெயர் | பொது கம்பனி சட்டமூலம் 03 | மீளளிக்கப்படாத விலைமனுக் கட்டணம் (ரூ) | CIDA தரம் |
|---|---|---|---|---|---|
| 1. | WP/PD/PRO/02/Con/ Wathupitiwala-1/2024 | வத்துப்பிட்டிவள த. வை 13 ஆம் இலக்க வார்ட்டிற்கான உணவருந்தும் இடப்பரப்பு | இல்லை | 1,000.00 | சி-9 மற்றும் சி-8 |
| 2. | WP/PD/PRO/02/Con/ Wathupitiwala-2/2024 | வத்துப்பிட்டிவள தள வைத்தியசாலையின் ஓவர்சியர்களின் உடை மாற்றும் அறையின் கூரையின் பழுதுபார்த்தல் | இல்லை | 1,000.00 | சி-9 மற்றும் சி-8 |
| 3. | WP/PD/PRO/02/Con/ Wathupitiwala-3/2024 | வத்துப்பிட்டிவள தள வைத்தியசாலையின் அநுர பண்டாரநாயக்க கிளினிக் கட்டிட கூரைமுகட்டின் பழுதுபார்த்தல் | இல்லை | 2,000.00 | சி-8 மற்றும் சி7 |
| 4. | WP/PD/PRO/02/Con/ Wathupitiwala-4/2024 | வத்துப்பிட்டிவள தள வைத்தியசாலையின் 10,11,12 மற்றும் 13 ஆம் வார்ட்டுக்களைச் சுற்றிவர கழிவுநீர் குழிகளை அமைத்தல் | இல்லை | 1,000.00 | சி-9 மற்றும் சி-8 |
| 5 | WP/PD/PRO/02/Con/ Wathupitiwala-5/2024 | வத்துப்பிட்டிவள தள வைத்தியசாலையின் 10 ஆம் வார்ட்டின் அமரும் இடப்பரப்பின் விஸ்தரிப்பு | இல்லை | 1,000.00 | சி-9 மற்றும் சி-8 |
| 6. | WP/PD/PRO/02/Con/ Wathupitiwala-6/2024 | வத்துப்பிட்டிவள தள வைத்தியசாலையின் மழை நீர் வடிகாலமைப்பு முறையை மேம்படுத்தல் | இல்லை | 1,000.00 | சி-9 மற்றும் சி-8 |
| 7. | WP/PD/PRO/02/Con/ Wathupitiwala-7/2024 | வத்துப்பிட்டிவள தள வைத்தியசாலையின் 2 ஆம் வார்ட்டின் புதுப்பித்தல் | ஆம் | 5,000.00 | சி-6 மற்றும் சி-5 |
| 8. | WP/PD/PRO/02/Con/ Gampaha/2024 | கம்பஹா மாபொவையின் பொல்வத்த SHO விடுதிகளின் மேம்படுத்தல் | ஆம் | 8,000.00 | சி-6 மற்றும் சி-5 |
| 9. | WP/PD/PRO/02/Con/ Nawagamuwa/2024 | நவகமுவ பிரதேச வைத்தியசாலையில் உத்தேசிக்கப்பட்ட HLC கட்டிட நிர்மாணம் | ஆம் | 4,000.00 | சி-6 மற்றும் சி-5 |
| 10. | WP/PD/PRO/02/Con/ Gampaha/2024 | மினுவாங்கொட தள வைத்தியசாலை இடப்பரப்பின் மீதிப் பகுதியை சுற்றுவர எல்லைச் சுவர் மற்றும் சங்கிலித்தொடர் வேலியின் நிர்மாணம் | ஆம் | 3,500.00 | சி-5 மற்றும் சி-6 |

2. 2024.07.23 ஆம் திகதியிலிருந்து 2024.08.05 ஆம் திகதியன்று வரையும் வேலை நாட்களில் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும் மீளளிக்கப்படாத கட்டணத்தைச் செலுத்திய பின்னர், மே மா மாசுசேப அலுவலகத்திற்கு எழுத்து மூலமான கோரிக்கையொன்றை தெரிவு செய்யப்பட்ட விலைமனுதாரர் அல்லது அவர்களின் தரஅங்கீகாரம் பெற்ற முகவர்களினால் சமர்ப்பிப்பதன் மூலம், விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான விலைமனுக்கோரல் ஆவணங்களின் தொகுதியொன்று கொள்வனவு செய்யப்படலாம்.
3. 2024.08.06 ஆம் திகதியன்று உத்தேசிக்கப்பட்ட மூடும் நேரமாகிய மு.ப. 10.30 மணிக்குப்பின் கொழும்பு-10, மாளிகாவத்த, த.பெட்டி 876, மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளரின் (மே.மா.) அலுவலகத்தில் உடனடியாகவே விலைமனுக்கள் திறக்கப்படும்.
4. முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் மூடும் நேரத்திற்கு முன்னராக கிடைக்கும் வகையில் ஒன்றில் பதிவுத் தபாலில் அனுப்பப்படல் வேண்டும் அல்லது கொழும்பு-10, மாளிகாவத்த, த.பெட்டி 876, சுகாதார சேவைகள் மாகாண பணிப்பாளரின் (மேல் மாகாணம்) அலுவலகத்தின் பிரதிப் பணிப்பாளரின் (நிர்வாகம்) அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டும்.
5. விலைமனு ஆவணத்தின் மூலப்பிரதி மற்றும் அதனது பிரதியானது தனித்தனியாக முத்திரைக்குறி பொறிக்கப்பட்டு தனியொரு தபாலுறையில் சேர்க்கப்படல் வேண்டும். தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் விலைமனு குறிப்பீட்டு எண் எழுதப்படல் வேண்டும்.
7. மேலதிக விபரங்களுக்கு, மேல் மாகாண சுகாதார சேவைகள் மாகாண பணிப்பாளரின் அலுவலகத்துடன் தயவு செய்து தொடர்பு கொள்ளவும். தொடர்பு இலக்கம்: 011-2437154/ 011-2434852.

**தலைவர் - திணைக்கள கொள்முதல் குழு,**
**சுகாதார சேவைகள் மாகாண பணிப்பாளர் (மேல் மாகாணம்),**
**சுகாதார சேவைகள் மாகாண பணிப்பாளர் (மேல் மாகாணம்) அலுவலகம்,**
**மாளிகாவத்த,**
**கொழும்பு-10.**

---

## அத்தனகல்ல பிரதேச சபை

# கேள்வி அழைப்பு

## அத்தனகல்ல பிரதேச சபைக்குச் சொந்தமான ரன்பொக்குனகம கழிவுக் களஞ்சியத்தில் காணப்படும் கொங்கிறீட் நிலைக்கான கூரையை நிர்மாணித்தல்

01. அத்தனகல்ல பிரதேச சபையின் பெறுகைக் குழுவின் தலைவரால் மாகாண சபை நிதி - 2024 மானியங்களின் அடிப்படையில் கீழே அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ளவாறு தகைமையுள்ள கேள்விதாரர்களிடமிருந்து பொறியிடப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.

| தொ. இல. | செயற்றிட்ட பெயர் | மதிப்பிடப்பட்ட தொகை ரூ. (வெட் இன்றி) | ஒப்பந்த கால எல்லை | ஒப்பந்தப் பதிவு | மீளளிக்கப்படாத படிவக் கட்டணம் (ரூபா) | மீளளிக்கப்படும் வைப்புத் தொகை (ரூபா) |
|---|---|---|---|---|---|---|
| 01 | அத்தனகல்ல பிரதேச சபைக்கு சொந்தமான ரன்பொக்குனகம கழிவுக் களஞ்சியத்தில் இருக்கும் கொங்கிறீட் நிலைக்கான கூரையை நிர்மாணித்தல் | 11,160,000/- | 02 மாதங்கள் | C6, C5 | 6000/- | 111,6000/- |

02. கேள்வி கோரப்படுவது தேசிய போட்டி கேள்விகோரல் முறையின் பிரகாரமாகும். பிரதேச முன்னுரிமை மேல் மாகாணத்திற்குள் 5% ஆகும்.

03. இதுபற்றிய ஆர்வம் காட்டுகின்ற கேள்விதாரர்களுக்கு 2024.07.23 முதல் அரச அலுவலக நாட்களில் மு.ப. 9.00 முதல் பி.ப. 3.00 வரையான காலத்திற்குள் அத்தனகல்ல பிரதேச சபையின் தலைமையகத்தின் பௌதீக திட்டமிடல் மற்றும் அபிவிருத்தி பிரிவிற்கு வருகை தந்து கேள்விப் பத்திரங்களைப் பரீட்சித்துப் பார்க்க முடிவதுடன், இதுபற்றிய மேலதிக விபரங்களை அலுவலக நேரங்களில் வேலை அதிகாரி (033 - 2050886) இடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

04. 2024.07.23 முதல் 2024.08.12 வரை மு.ப. 9.00 முதல் பி.ப.3.00 வரையான காலத்திற்குள் கேள்விப் படிவக் கட்டணத்தை காசாக செலுத்தி குறித்த நிறுவனத்தில் கடிதத் தலைப்பில் எழுத்து மூல விண்ணப்பத்தை சமர்ப்பித்து அத்தனகல்ல பிரதேச சபையின் தலைமையகத்தில் பௌதீக திட்டமிடல் மற்றும் அபிவிருத்தி பிரிவில் முழுமையான விண்ணப்பப் படிவத் தொகையை பெற்றுக் கொள்ளலாம். கேள்வி விண்ணப்பங்களைப் பெற்றுக் கொள்ளும் போது CIDA பதிவுச் சான்றிதழை சமர்ப்பித்தல் வேண்டும்.

05. இலங்கை மத்திய வங்கியில் பதிவு செய்த அங்கீகரிக்கப்பட்ட வங்கியிலிருந்து அல்லது காப்புறுதி நிறுவனத்திலிருந்து பெற்றுக் கொண்ட நிபந்தனையற்ற மற்றும் கோரும்போது பெற்றுக் கொள்ளக் கூடிய, 2024.11.13 வரை செல்லுபடியாகும் ரூபா.111,600/- (ஒரு இலட்சத்து பதினொராயிரத்து அறுநூறு) பெறுமதியுடைய அத்தனகல்ல பிரதேச சபையின் தலைவருக்கு எழுதப்பட்ட கேள்விப் பிணையொன்றை பொறியிடப்பட்ட கேள்வியுடன் சமர்ப்பித்தல் வேண்டும். காசாகச் செலுத்துவதாயின் ரூ.111,600/- தொகையை அத்தனகல்ல பிரதேச சபையில் வைப்புச் செய்து, அப்பற்றுச்சீட்டுடன் சமர்ப்பித்தல் வேண்டும்.

06. கேள்வித் தொகை மற்றும் நகல்பிரதிகளாக தயாரிக்கப்பட்டு, 2024.08.13ம் திகதி மு.ப. 10.00 இற்கு அல்லது அதற்கு முன்பு கிடைக்குமாறு செயலாளர், அத்தனகல்ல பிரதேச சபை, நீர்கொழும்பு வீதி, நிட்டம்புவ என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் அல்லது அத்தனகல்ல பிரதேச சபையின் செயலாளரின் உத்தியோகபூர்வ அறையில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும். செயற்றிட்டத்தின் பெயர் மற்றும் மூலப்பிரதி அல்லது நகல்பிரதி என்று உறையின் இடதுபக்க மேல் மூலையில் தெளிவாகக் குறிப்பிடுதல் வேண்டும். தாமதமாகக் கிடைக்கும் மற்றும் பூர்த்தியற்ற கேள்விகள் நிராகரிக்கப்படும். அக் கேள்விகள் 2024.08.13ம் திகதி கேள்விகள் ஏற்றுக் கொள்ளல் முடிவடைந்தவுடன் வருகைதந்துள்ள கேள்விதாரர்கள்/ பிரதிநிதிகள் முன்னிலையில் அத்தனகல்ல பிரதேச சபை கேட்போர்கூடத்தில் திறக்கப்படும்.

07. இக் கேள்வியை ஏற்றுக் கொள்ளல் அல்லது சகல கேள்விகளையும் நிராகரிக்கும் அதிகாரம் அத்தனகல்ல பிரதேச சபையின் பெறுகைக் குழுவிற்கு உரியது.

**கே.ஏ. உபுல் ரஞ்சித்,**
**அத்தனகல்ல பிரதேச சபை,**
**செயலாளர் மற்றும் சபையின் அதிகாரம்,**
**செயற்பாடுகளை அமுல்படுத்தும் அதிகாரி,**

**தலைவர்,**
**பெறுகைக் குழு,**
**அத்தனகல்ல பிரதேச சபை**
**நீர்கொழும்பு வீதி, நிட்டம்புவ**
**2024.07.22**
**தொ.பே.: 033 - 2287277 பெக்ஸ் : 033 - 2292443**

**இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசு அரசாங்கம்**
**போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு**
## வீதி அபிவிருத்தி அதிகாரசபை

## 2024.07.19 ஆம் திகதியன்று பிரசுரிக்கப்பட்ட விலைமனு அழைத்தலுக்கான திருத்தம்

வட மாகாணத்திற்காக இந்த பத்திரிகையில் 2024.07.19 ஆம் திகதியன்று பிரசுரிக்கப்பட்ட விலைமனுவிற்கான அழைத்தல் தொடர்பான திருத்தங்களுக்காக www.rda.gov.lk மற்றும் www.mohsl.gov.lk ஆகிய இணைய பக்கங்களை வீஅஅ மற்றும் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் ஆகியவற்றிற்காக தயவு செய்து பார்வையிடவும்.

**தலைவர்,**
**பிராந்திய கொள்முதல் குழு (வட மாகாணம்),**
**வீதி அபிவிருத்தி அதிகாரசபை,**
**கடற்கரை வீதி, யாழ்ப்பாணம்.**

---

**தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்களுக்கான அழைத்தல்**
### இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம்
**சுத்திகரிப்பு பணிமனை**
**பொது கேள்வி 4509T**
### SUPPLY OF PONA / PIONA GAS CHROMATOGRAPHIC SYSTEM

இலங்கை, களனி, சப்புகஸ்கந்த, சுத்திகரிப்பு பணிமனை, இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபன, திணைக்கள பெறுகைக் குழுத் தலைவர் மேலே குறிப்பிட்டுள்ள அம்சத்தின் வழங்கலுக்காக நம்பகமான உற்பத்தியாளர், அவர்களது அங்கீகரிக்கப்பட்ட ஏற்றுமதி முகவர்கள் வெளிநாட்டு அல்லது அவர்களது உள்ளூர் வழங்குநர்களிடமிருந்து விலைமனு ஆவணங்களின் கீழ் தரப்பட்டுள்ள விதிகள் மற்றும் நிபந்தனைகளை உறுதி செய்யக்கூடிய முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை பெற்றுக் கொள்வார்.

விலைமனுவொன்றை சமர்ப்பிக்கும் எந்தவொரு விலைமனுதாரரும் 2024 ஓகஸ்ட் 20 ஆம் திகதியன்று வரையும் எந்தவொரு வேலை நாளிலும் பி.ப. 3 மணிக்கு முன்னராக மீளளிக்கப்படாத ஆவணக் கட்டணமான 3,500 ரூபாவை கொழும்பு-09, டொக்டர் டனிஸ்டர் த சில்வா மாவத்தை, 609 ஆம் இலக்கத்திலுள்ள இபெகூ தலைமை அலுவலக, 5 ஆம் மாடியிலுள்ள காசாளரிடம் அல்லது களனி, சப்புகஸ்கந்த, சுத்திகரிப்பு பணிமனை காசாளரிடம் அத்துடன் கேள்வி இலக்கம் மற்றும் விலைமனுதாரரின் பெயர் ஆகியவற்றை சுருக்கமாக குறிப்பிட்டு 004100110208633 என்ற கணக்கிலக்கத்திற்கு மக்கள் வங்கியில் இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்தின் பெயரில் ரொக்கப் பணத்திலும் செலுத்திய பின்னர், மேற்குறிப்பிட்டுள்ள காசாளர் ஒருவருக்கு விண்ணப்பக் கடிதமொன்றை சமர்ப்பித்து விலைமனுக்கோரல் ஆவணங்களை பெற்றுக் கொள்ளலாம்.

**www.ceypetco.gov.lk & www.dgmarket.com** ஆகிய இணையதளங்களில் விலைமனுக்கோரல் ஆவணம், கேள்வியின் நிபந்தனைகள் மற்றும் விபரக் குறிப்புக்கள் ஆகியவற்றை அடக்கியுள்ளவை காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

மாற்றுவழியாக, கீழேயுள்ள முகவரியிலிருந்தும் விலைமனுக்கோரல் ஆவணங்களை பெற்றுக் கொள்ளலாம்.

2024 ஓகஸ்ட் 21 ஆம் திகதியன்று பி.ப. 2.30 மணி வரையும் திணைக்கள பெறுகைக் குழுத் தலைவரினால் விலைமனுக்கள் பெற்றுக் கொள்ளப்பட்டு அதன் பின்னர் உடனடியாகவே சுத்திகரிப்பு கேட்போர் கூடத்தில் திறக்கப்படும்.

**பொருட்கள் முகாமையாளர்,**
**இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம்,**
**சுத்திகரிப்பு பணிமனை, சப்புகஸ்கந்த, களனி. இலங்கை**
**தொ.பே. 0094-11-2400110**
**மின்னஞ்சல் : ref.materials@ceypetco.gov.lk**

---

**தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்களுக்கான அழைத்தல்**
### இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம்
**சுத்திகரிப்பு பணிமனை**
**பொது கேள்வி 4514T**
### SUPPLY OF SAFETY SHOES WITH STEEL TOE CAP

இலங்கை, களனி, சப்புகஸ்கந்த, சுத்திகரிப்பு பணிமனை, இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபன, திணைக்கள பெறுகைக் குழுத் தலைவர் மேலே குறிப்பிட்டுள்ள அம்சத்தின் வழங்கலுக்காக உள்ளூர் வழங்குநர்களிடமிருந்து முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை பெற்றுக் கொள்வார்.

விலைமனுவொன்றை சமர்ப்பிக்கும் எந்தவொரு விலைமனுதாரரும் 2024 ஓகஸ்ட் 23 ஆம் திகதியன்று வரையும் எந்தவொரு வேலை நாளிலும் பி.ப. 3 மணிக்கு முன்னராக மீளளிக்கப்படாத ஆவணக் கட்டணமான 1,000 ரூபாவை கொழும்பு-09, டொக்டர் டனிஸ்டர் த சில்வா மாவத்தை, 609 ஆம் இலக்கத்திலுள்ள இபெகூ தலைமை அலுவலக, 5 ஆம் மாடியிலுள்ள காசாளரிடம் அல்லது களனி, சப்புகஸ்கந்த, சுத்திகரிப்பு பணிமனை காசாளரிடம் அத்துடன் கேள்வி இலக்கம் மற்றும் விலைமனுதாரரின் பெயர் ஆகியவற்றை சுருக்கமாக குறிப்பிட்டு 004100110208633 என்ற கணக்கிலக்கத்திற்கு மக்கள் வங்கியில் இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்தின் பெயரில் ரொக்கப் பணத்திலும் செலுத்திய பின்னர், மேற்குறிப்பிட்டுள்ள காசாளர் ஒருவருக்கு விண்ணப்பக் கடிதமொன்றை சமர்ப்பித்து விலைமனுக்கோரல் ஆவணங்களை பெற்றுக் கொள்ளலாம்.

**www.ceypetco.gov.lk & www.dgmarket.com** ஆகிய இணையதளங்களில் விலைமனுக்கோரல் ஆவணம், கேள்வியின் நிபந்தனைகள் மற்றும் விபரக் குறிப்புக்கள் ஆகியவற்றை அடக்கியுள்ளவை காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

மாற்றுவழியாக, கீழேயுள்ள முகவரியிலிருந்தும் விலைமனுக்கோரல் ஆவணங்களை பெற்றுக் கொள்ளலாம்.

2024 ஓகஸ்ட் 28 ஆம் திகதியன்று பி.ப. 2.30 மணி வரையும் திணைக்கள பெறுகைக் குழுத் தலைவரினால் விலைமனுக்கள் பெற்றுக் கொள்ளப்பட்டு அதன் பின்னர் உடனடியாகவே சுத்திகரிப்பு கேட்போர் கூடத்தில் திறக்கப்படும்.

**பொருட்கள் முகாமையாளர்,**
**இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம்,**
**சுத்திகரிப்பு பணிமனை,**
**சப்புகஸ்கந்த, களனி.**

---

**நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சு**
**நலன்புரி நன்மைகள் சபை**

## வெற்றிடங்கள்

நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சின் கீழ் தாபிக்கப்பட்டுள்ள நலன்புரி நன்மைகள் சபையில் பின்வரும் வெற்றிடங்களுக்கு பொருத்தமான தகுதியும் அனுபவமுமிக்க இலங்கை பிரசைகளிடமிருந்து 2024.07.20 முதல் 2024.08.02 வரை விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

குறிப்பு: மேற்கண்ட வெற்றிடங்களுக்கான தகைமைகள் மற்றும் மேலதிக விவரங்களை பின்வரும் இணையதளத்தில் பெற்றுக் கொள்ளமுடியும்.

**https://www.treasury.gov.lk/web/ministry-of-finance-vacancies/section/current%20vacancies**

**https://www.wbb.gov.lk/web/si/jobs**

**ஆணையாளர்**
**நலன்புரி நன்மைகள் சபை**
**ஜே.ஆர். ஜயவர்தன நிலையம்**
**இல. 191, தர்மபால மாவத்தை, கொழும்பு - 07**




---

## இலங்கை பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழு

## பொது அறிவிப்பு

இலங்கை மின்சார சபை அல்லது லங்கா மின்சார தனியார் கம்பனி வழங்கும் மொத்த மின்சார விநியோகத்தை (அடுக்குமாடி வளாகங்கள், வணிக கட்டிடங்கள் போன்றவை)எந்தவொரு நுகர்வோருக்கும்.'.குத்தகைதாரருக்கும் வழங்குவதற்காக மீள் பகிர்வு செய்து விநியோகிக்கும் எந்தவொரு நபரும் அல்லது நிறுவனமும் 2009 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க இலங்கை மின்சாரச் சட்டத்தின் பிரிவு 7 இல் குறிப்பிடப்பட்டுள்ள மின்சார விநியோக உரிமம் அல்லது இந்த ஆணைக்குழுவிலிருந்து விலக்கு பெற வேண்டும்.

இந்தத் தேவைக்கு இணங்கத் தவறினால், 2009 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க இலங்கை மின்சாரச் சட்டத்தின் பிரிவு 7 (2) இன் கீழ் சட்ட நடவடிக்கை எடுக்கப்படலாம். இது நீதிமன்றத்தின் முன் விசாரணைக்குப்பிறகு குற்றவாளியாகும் அடிப்படையின் பொறுப்பு கூறலாகும்.

தலைவர்
இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு
06-வது மாடி, இலங்கை வங்கி வர்த்தகக் கோபுரம்,
இலக்கம் 28, புனித மைக்கல் வீதி,
கொழும்பு 03

திகதி: 2024.07.23

தொலைபேசி: (011) 2392607/8
தொலைநகல்: (011) 2392641
பெக்ஸ்: licensing@pucsl.gov.lk
இணையதளம்: www.pucsl.gov.lk




---

## விலைமனுக்களுக்கான அழைப்பு (IFB)

**பொது நிர்வாகம், உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு**
**உள்ளூர் அபிவிருத்தி உதவித் திட்டம் - செயற்றிட்ட அடையாளம்: P 163305**
**கிழக்கு மாகாணம், மட்டக்களப்பு மாவட்டம்**

## மின்பிறப்பாக்கிகள், வளிச்சீராக்கிகள் மற்றும் மின்சாரம் மற்றும் இலத்திரனியல் பொருட்களை வழங்குதல் மற்றும் பொருத்துதல்

1. இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசு உள்ளூர் அபிவிருத்தி உதவித் திட்டத்தின் (LDSP) செலவுக்கு உலக வங்கியிடமிருந்து கடனைப் பெற்றுள்ளது, மேலும் இதன் ஒரு பகுதியை பின்வரும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ள செயற்றிட்டங்களுக்கு செலுத்துவதற்குப் பயன்படுத்த விரும்புகிறது.
2. மட்டக்களப்பு, உள்ளூராட்சி நிறுவனங்களின் சார்பில் மட்டக்களப்பு, உள்ளூராட்சி பெறுகைக் குழுத் தலைவர் பின்வரும் அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ளவற்றிற்கு தகுதி மற்றும் தகைமை வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை அழைக்கின்றார்.
3. விலைக்கோரல்கள் தேசிய போட்டிரீதியிலான விலைக்கோரல் (NCB) நடைமுறையின் ஊடாக இடம்பெறும்.
4. ஒப்பந்தத்தைக் கையளிக்க தகுதி பெறுவதற்கு வெற்றிகரமான விலைமனுதாரர் அபகீர்த்தியாளர் பட்டியலுக்கு உட்படாதவராக இருத்தல் வேண்டும் என்பதுடன் இலங்கையில் வியாபாரப் பதிவைக் கொண்டிருத்தல் வேண்டும்.
5. விலைமனு ஆவணத்தில் குறிக்கப்பட்டுள்ள தகைமைத் தேவைப்பாடுகள்,
   அ. கடந்த ஐந்து வருட காலத்தில் இதே கொள்ளளவைக் கொண்ட இதனையொத்த குறைந்தபட்சம் ஒரு வழங்கலையாவது மேற்கொண்டிருத்தல் வேண்டும்.
   ஆ. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் அல்லது உற்பத்தியாளர்கள் குறைந்தபட்சம் கடந்த ஐந்து வருட காலத்தினுள் இந்த ஒப்பந்தத்தின் இதனையொத்த பொருட்கள் மற்றும் சேவைகளை வியாபாரமாக மேற்கொண்டிருத்தல் வேண்டும்.
6. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவல்களை மட்டக்களப்பு, கல்லடி, சரவணா வீதி, உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், LDSP அலுவலகம், உதவி செயற்றிட்டப் பணிப்பாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம் (தொலைபேசி இல. 065-2223512 தொலைநகல்: 065-2225655 மின்னஞ்சல்: bteclg@gmail.com) என்பதுடன் விலைமனு ஆவணங்களை இதே இடத்தில் எந்தவொரு வேலை நாளிலும் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 4.00 மணி வரை பரீட்சித்துப் பார்க்கலாம்.
7. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மீளளிக்கப்படாத 3,500.00 ரூபா கட்டணத்தைச் செலுத்துவதன் பேரில் அட்டவணையில் பட்டியலப்படுத்தப்பட்டுள்ள இயைபுடைய உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு எழுத்து மூலமான வேண்டுகோள் ஒன்றைச் செய்வதன் பேரில் 2024-07-23ஆம் திகதி முதல் 2024-08-12ஆம் திகதி வரை மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரை ஆங்கில மொழியிலான முழுமையான விலைமனு ஆவணத் தொகுதியொன்றைக் கொள்வனவு செய்யலாம். கொடுப்பனவுகளை ரொக்கப் பணத்திலேயே மேற்கொள்ள வேண்டும்.
8. விலைமனுக்களை அட்டவணையில் பட்டியலப்படுத்தப்பட்டுள்ள இயைபுடைய உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு 2024-08-12ஆம் திகதி பி.ப. 3.00 மணி அல்லது அதற்கு முன்பதாக ஒப்படைத்தல் வேண்டும். பிந்திய விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். சமுகம்தந்துள்ள விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளின் முன்னிலையில் விலைமனுக்கள் முடிவுறுத்தப்பட்டு உடன் திறக்கப்படும்.
9. அட்டவணையில் தரப்பட்டுள்ள ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட லொட்களில் வளமுள்ள விலைமனுதாரர்கள் பங்குபற்றலாம்.
10. அட்டவணையில் தரப்பட்டுள்ள காலப்பகுதி வரையில் விலைமனுக்கள் செல்லுபடியாதல் வேண்டும்.
11. அட்டவணையில் தரப்பட்டுள்ள தகவல்களின் பிரகாரம் விலைக்கோரல் பிணை முறி விலைமனுக்களுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.
12. வழங்குதல் மற்றும் பொருத்துதலுக்கான காலம் ஒப்பந்தம் கையளிக்கப்பட்ட நாள் முதல் 30 நாட்காட்டி நாட்களாகும்.
13. விலைக்கோரலுக்கு முன்னரான கூட்டம் 2024-08-02ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு மட்டக்களப்பு, கல்லடி, சரவணா வீதி, உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், LDSP அலுவலகத்தில் இடம்பெறும் என்பதுடன் ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் தங்கள் சொந்த செலவில் இந்த கூட்டத்தில் பங்கேற்கலாம்.
14. ஒப்பந்தத்தை வழங்குதல் தொடர்பில் உள்ளூராட்சி நிறுவன பெறுகைக் குழுவின் தீர்மானமே இறுதித் தீர்மானமாகும்.
15. ஒப்பந்தத்தை வழங்குவதற்கு முன் எந்தநேரத்திலும் இந்தப் பெறுகையை மீளப்பெற்றுக்கொள்வதற்கு அல்லது இரத்துச் செய்வதற்கான உரிமையை தொழில்தருநர் தன்னகத்தே கொண்டுள்ளார்.

| தொ. இல. | உள்ளூராட்சி நிறுவனத்தின் பெயர் | லொட் இல. | பொருட்களின் விபரம் | எண்ணிக்கை | விலைக்கோரல் பிணை முறி | | விலை மனுக்களின் செல்லுபடிக் காலம் | விலைமனுக்கள் திறக்கப்படும் மற்றும் விலைமனுக்களை ஒப்படைக்கும் இடம் |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | தொகை (ரூபா) | செல்லுபடிக் காலம் | | |
| 1 | மண்முனை தெற்கு, மேற்கு பிரதேச சபை, கொக்கட்டிச்சோலை | LDSP/EP/BT/MSWPS/PT3/2021/01a | 30 K V A மின்பிறப்பாக்கியை வழங்குதல் மற்றும் பொருத்துதல் | 01 | 60,000.00 | 2024-11-25ஆம் திகதி வரை | 2024-10-28ஆம் திகதி வரை | மண்முனை தெற்கு, மேற்கு பிரதேச சபை, கொக்கட்டிச்சோலை |
| 2 | கோரளைப்பற்று பிரதேச சபை, வாழைச்சேனை | LDSP/EP/BT/KPPS/BT4/2024/01 | 30 K V A மின்பிறப்பாக்கியை வழங்குதல் மற்றும் பொருத்துதல் | 01 | 60,000.00 | 2024-11-25ஆம் திகதி வரை | 2024-10-28ஆம் திகதி வரை | கோரளைப்பற்று பிரதேச சபை, வாழைச்சேனை |
| 3 | | LDSP/EP/BT/KPPS/BT4/2024/02 | முழுமையான நிறுவல்கள் சகிதம் இன்வேர்டர் வகையான 24000 BTU வளிச்சீராக்கிகளை வழங்குதல் மற்றும் பொருத்துதல் | 10 | 50,000.00 | 2024-11-25ஆம் திகதி வரை | 2024-10-28ஆம் திகதி வரை | கோரளைப்பற்று பிரதேச சபை, வாழைச்சேனை |
| 4 | கோரளைப்பற்று வடக்கு பிரதேச சபை, வாகறை | LDSP/EP/BT/KPNPS/PT3/2024/02 | மொனிட்டர்கள் மற்றும் துணைப்பாகங்கள் உள்ளடங்கலாக 12th Gen intel Core i5 8GB/IT Branded கணனிகளை வழங்குதல் மற்றும் பொருத்துதல் | 04 | 15,000.00 | 2024-10-28ஆம் திகதி வரை | 2024-09-30ஆம் திகதி வரை | கோரளைப்பற்று வடக்கு பிரதேச சபை, வாகறை |
| 5 | | LDSP/EP/BT/KPNPS/PT3/2024/03 | Multifunction புகைப்படப் பிரதி இயந்திரத்தை வழங்குதல் மற்றும் பொருத்துதல் | 01 | 10,000.00 | 2024-10-28ஆம் திகதி வரை | 2024-09-30ஆம் திகதி வரை | கோரளைப்பற்று வடக்கு பிரதேச சபை, வாகறை |
| 6 | | LDSP/EP/BT/KPNPS/PT3/2024/04 | முழுமையான நிறுவல்கள் சகிதம் இன்வேர்டர் வகையான 24000 BTU வளிச்சீராக்கிகளை வழங்குதல் மற்றும் பொருத்துதல் | 04 | 20,000.00 | 2024-11-11ஆம் திகதி வரை | 2024-10-14ஆம் திகதி வரை | கோரளைப்பற்று வடக்கு பிரதேச சபை, வாகறை |

**தலைவர்,**
**இயைபுடைய உள்ளூராட்சி பெறுகைக் குழு, மட்டக்களப்பு,**
**உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம்,**
**சரவணா வீதி, கல்லடி, மட்டக்களப்பு.**
**2024-07-23**

# மக்கள் வங்கி

## குருநாகல் பிராந்தியம்

### மீட்கப்படாத அடகு நகைகளை ஏலத்தில் விற்பனை செய்தல்

மக்கள் வங்கியின் கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள கிளைகள் மற்றும் சேவை நிலையங்கள் என்பவற்றில் 2023.05.31ஆம் திகதி வரை (ஒரு வருடத்திற்கு அடகு வைக்கப்பட்ட) அடகு வைக்கப்பட்டு, 2024.08.23ஆம் திகதி கொடுக்கல் வாங்கல் முடிவடையும் வரை மீட்கப்படாத தங்க நகைகள் கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள திகதிகளில் மற்றும் இடங்களில் மு.ப. 9.00 மணிக்கு ஆரம்பித்து பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும் என்பதை இத்தால் அறியத்தருகின்றோம்.

**ஏலவிற்பனை நடைபெறும் திகதி - 2024.08.24 மற்றும் 2024.08.25**

| ஏலவிற்பனை நடைபெறும் இடம் | குருநாகல் கிளை வளாகம் | குளியாபிட்டிய கிளை வளாகம் | வாரியபொல கிளை வளாகம் |
|---|---|---|---|
| கிளை | குருநாகல், மலியதேவ, எதுகல்புர, பொல்கஹவெல, அளவ்வ, பொதுஹெர, மாவத்தகம, இப்பாகமுவ, மெல்சிரிபுர, ரிதீகம | குளியாபிட்டிய, நாரம்மல, ஹெட்டிபொல, கிரிஉல்ல, மாகந்தர, பிங்கிரிய | வாரியபொல, நிகவெரட்டிய, மஹவ, கல்கமுவ, கொபெய்கனே, பொல்பிதிகம |
| சேவை நிலையம் | வைத்தியசாலை அலகு, நகர சபை அலகு, மலியதேவ வீதி, பிதுறுவெல்ல, ஹிரிபிட்டிய, மல்லவபிட்டிய, கொடவெல,போயவலான, மத்தவ, பரகஹதெனிய, கும்புக்கெடே, பானகமுவ, தொடம்கஸ்லந்த | தும்மலசூரிய, உடுபத்தாவ, பிஹல்பொல, கந்தானேகெதர, கட்டுபொத, பண்டாரகொஸ்வத்த, பம்மன்ன, தம்பதெனிய, பன்னல, வீரபொகுன | மாஸ்பொத, நிக்கவெரட்டிய, ரஸ்நாயகபுர, கிரில்ல, நாகொல்லாகம, அம்பன்பொல, பொரளுவெவ |

மேலே குறிப்பிடப்பட்டுள்ளபடி நடத்தப்படவிருக்கும் இந்த ஏல விற்பனையை மீள அறிவிக்காமல் வங்கியின் தற்றுணிவின்படி இரத்துச் செய்வதற்கு ஒத்திவைப்பதற்கு அல்லது ஒருங்கிணைத்து நடத்துவதற்கு வங்கிக்கு உரிமை உண்டு.

**பிராந்திய முகாமையாளர், மக்கள் வங்கி,**
**பிராந்திய தலைமை அலுவலகம்,**
**இலக்கம் 03, வத்ஹிமி ரோட், குருநாகல்.**

www.peoplesbank.lk 1961
PEOPLE'S BANK
Pride of the Nation

# நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு

## கட்டிடங்கள் திணைக்களம்

## கேள்விகளுக்கான அழைப்பு

1. கீழே விபரிக்கப்பட்ட வேலைகளுக்காக தகைமையும் தகுதியும் கொண்ட கேள்விதாரர்களிடமிருந்து முத்திரை பொறிக்கப்பட்ட கேள்விகளை கட்டிடத் திணைக்களத்தின் சார்பில் திணைக்கள பெறுகைக் குழுத் தலைவர் கோருகிறார்.

| | வேலை விபரங்கள் | வெட் இன்றி மதிப்பீட்டுச் செலவு (ரூபா மில்லியன்) | நிர்மாணக் காலம் (நாட்கள்) | CIDA தரம் | கேள்விப் பிணை முறி | | கேள்வியின் செல்லுபடிக் காலம் (நாட்கள்) | மீளளிக்கப் படாத கட்டணம் (ரூபா) |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | பெறுமதி (ரூபா) | செல்லுபடிக் காலம் | | |
| 1. | வவுனியா, செட்டிக்குளம், மாவட்ட வைத்தியசாலையில் இரண்டு மாடி Hemodialysis பிரிவை நிர்மாணித்தல் - மிகுதி வேலைகள் (படிநிலை - 1) (BD-101-Z2-18/CT 09/24) | 4.4 | 63 | C8 அல்லது C7 | 66,000.00 | 2024-11-04 | 63 | 1,500.00 |
| 2. | யாழ்ப்பாணம், சுண்டிக்குழி அஞ்சல் அலுவலகத்தின் புதுப்பித்தல் வேலைகள் (BD-0022sp01/Z2/CT 14/24) | 6.3 | 91 | C7 அல்லது C6 | 94,000.00 | 2024-11-18 | 77 | 2,500.00 |
| 3. | கைதடி, சித்த போதனா வைத்தியசாலையில் தற்போதுள்ள கட்டமைப்புகளுடன் பெண்கள் கட்டணம் செலுத்தும் வார்ட் முறைமையைப் புதுப்பித்தல் (BD-0022sp01/Z2/CT 07/24) | 6.6 | 91 | C7 அல்லது C6 | 99,000.00 | 2024-11-18 | 77 | 2,500.00 |

2. கேள்விகள் தேசிய போட்டி கேள்வி கோரல் முறையின் கீழ் இடம்பெறும். இப்பெறுகையின் மொத்த மதிப்பீட்டுக் கிரயம் 50 மில்லியன் ரூபாவிற்கு குறைவாக இருப்பதனால் 04/2016 (iii)ஆம் இலக்க அரச நிதி சுற்றறிக்கையில் திட்டவட்டமாக குறிப்பிட்டுள்ளதற்கமைய பிராந்திய முன்னுரிமை மற்றும் CIDA தர முன்னுரிமை என்பன பிரயோகிக்கப்படும்.

3. ஒப்பந்தத்தை வழங்கப் பெறுவதற்குத் தகைமை கொண்ட வெற்றிகரமான கேள்விதாரர்கள் அபகீர்த்தியாளர் பட்டியலில் இடம்பெற்றிருத்தல் கூடாது என்பதுடன் கேள்விகள் மூடப்படும் திகதி வரை செல்லுபடியாகக் கூடிய நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபையில் (CIDA) கட்டிட நிர்மாணத் துறைக்காக மேலே அட்டவணையிலுள்ள தரத்தில் பதிவைப் பெற்றிருத்தல் வேண்டும். குறித்த பதிவானது ஒப்பந்தம் வழங்கும் திகதி வரையில் செல்லுபடியாதல் வேண்டும்.
``பொது ஒப்பந்தங்கள் பதிவாளரிடம் கேள்விதாரர்கள் 1987இன் 3ம் இலக்க ஒப்பந்த விதிகள் பற்றிய ஒப்பந்தச் சட்டத்தின் பெறுகை விதிகளின் பிரகாரம் தம்மைப் பதிவு செய்து கொள்ளல் வேண்டும். பதிவுச் சான்றிதழின் மூலப் பிரதியை (Original Certificate of PCA 03) கேள்வியுடன் சமர்ப்பித்தல் வேண்டும். PCA 03 பதிவுச் சான்றிதழை சமர்ப்பிக்கத் தவறும் எந்தவொரு விலைமனுதாரருக்கும் இந்தப் பெறுகை கையளிக்கப்பட மாட்டாது'' 1ஆம் திட்டத்தை விடுத்து.

4. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் யாழ்ப்பாணம், குருநகர், கடற்கரை வீதி, கட்டிடங்கள் திணைக்களம் (வலயம் 2), பிரதம பொறியியலாளரிடமிருந்து மேலதிக விபரங்களைப் பெற்றுக்கொள்ளலாம். மற்றும் அதே முகவரியில் வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 4.00 மணி வரை கேள்வி ஆவணங்களைப் பார்வையிடலாம். தொடர்பு இலக்கங்கள்: தொலைபேசி: 021-2222781 தொலைநகல்: 021-2222781

5. மேற்கூறிய அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள மீளளிக்கப்படாத கட்டணத்தை 2024-07-23ஆம் திகதி முதல் 2024-08-05ஆம் திகதி வரையான காலத்தில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையில் யாழ்ப்பாணம், குருநகர், கடற்கரை வீதி, கட்டிடங்கள் திணைக்களம் (வலயம் 2), பிரதம பொறியிலாளருக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பித்து ஆங்கில மொழியிலான முழுமையான கேள்வி ஆவணத் தொகுதியொன்றைக் கொள்வனவு செய்யலாம்.

6. கேள்விகளை 2024-08-06ஆம் திகதி மு.ப. 10.00 மணி அல்லது அதற்கு முன் கிடைக்கும் வகையில் தலைவர், திணைக்கள பெறுகைக் குழு, கட்டிடங்கள் திணைக்களம், 2ம் மாடி, செத்சிறிபாய, பத்தரமுல்ல எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். பத்தரமுல்ல, செத்சிறிபாய, 2ம் மாடி, கட்டிடங்கள் திணைக்களத்தின் ஒப்பந்தக் கிளையில் வருகை தந்துள்ள கேள்விதாரர்களின் கேள்வியில் பங்குபற்ற தெரிவுசெய்யப்பட்ட பிரதிநிதிகளின் முன்னிலையில் கேள்விகள் மூடப்பட்டு உடன் திறக்கப்படும்.

7. கேள்விகள் பெற்றுக்கொள்ளும் இறுதி நாள் அல்லது நீடிக்கப்பட்ட காலத்திலிருந்து 77 நாட்களுக்கு கேள்விகள் செல்லுபடியாதல் வேண்டும்.

8. அனைத்துக் கேள்விகளுடனும்
   * கேள்வி ஆவணத்தின் 09ம் பிரிவில் உள்ளடங்கும் படிவத்தின்படி
   * கட்டிடப் பணிப்பாளர் நாயகத்திற்கு எழுதப்பட்ட
   * மேற்கூறிய அட்டவணையில் காட்டப்பட்டுள்ள தொகைக்கு
   * மேற்கூறிய அட்டவணையில் காட்டப்பட்டுள்ள திகதி வரையில் செல்லுபடியாகும்
   * கேள்வித் தரவின் 16.0ம் வாசகத்தில் குறித்துரைக்கப்பட்ட முகவரகம் ஒன்றினால் வழங்கப்பட்ட

   கேள்விப் பிணையொன்று இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

9. விலைகூறல் முடிவடைவதற்கென நிர்ணயிக்கப்பட்டுள்ள நேரத்துக்குக் குறைந்தபட்சம் ஒரு மணித்தியாலத்துக்கு முன்னரே பாதுகாப்புச் சோதனைகளின் நிமித்தம் ``செத்சிறிபாய'' வளவுக்குள் வந்துவிடுமாறு விலைகூறுநர்கள் அறிவுறுத்தப்படுகிறார்கள்.

**பொறி. (திருமதி) K.G.S. குமுதினி,**
**கட்டிடங்கள் பணிப்பாளர் நாயகம்,**
**கட்டிடங்கள் திணைக்களம்,**
**2ம் மாடி, ``செத்சிறிபாய'', பத்தரமுல்லை.**
**www.buildings.gov.lk**

# தேசிய வைத்தியசாலை – கண்டி

## SERVERS இயந்திரம் மற்றும் WIFI உபகரணங்கள் கொள்வனவு செய்தல்

## கேள்வி அழைப்பு

கண்டி தேசிய வைத்தியசாலைக்கு கீழ்க்காணும் SERVERS இயந்திரம் WIFI உபகரணங்களை வழங்கிப் பொருத்தி செயற்படுத்தி ஒப்படைப்பதற்கு தகைமையுள்ள வழங்குநர்களிடமிருந்து பிரதேச பெறுகைக்கு ழுவின் தலைவரால் கேள்விகள் கோரப்படுகின்றன. கேள்விகள் திறத்தல் 2024.08.13 மு.ப. 10.30 இற்கு இடம்பெறுவதால், அன்றே மு.ப. 10.30 இற்கு முன் கிடைக்குமாறு கேள்விகளை அனுப்புமாறு கேட்டுக்கொள்கிறேன். கேள்விப்பத்திரத்துடன் சம்பந்தப்பட்ட ஏனைய ஆவணங்களுடன் இரு பிரதிகளை "மூலப்பிரதி" மற்றும் "நகல்பிரதி" என்று தயாரித்து "தலைவர், பிரதேச பெறுகைக் குழு, தேசிய வைத்தியசாலை, கண்டி" என்ற முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பவேண்டியதுடன், கையோடு கொண்டுவந்து ஒப்படைப்பதாயின் பிரதம கணக்காளர் பணிமனையில் பொறியிடப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் குறித்த நேரத்திற்கு முன்பு உள்ளிடலாம். கேள்விப்பத்திரங்கள் அனுப்பும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் கேள்விகள் திறக்கப்படும் திகதி மற்றும் குறித்த Procurement 02 No of Rack Mountable Servers for National Hospital Kandy (NHK/BH/M/NETWORK/2024(11)) / Procurement of a Wireless Access Points with cloud / Network Management System to National Hospital Kandy - (NHK/BH/M/NETWORK/2024(111)) உபகரணத்தின் பெயர் குறிப்பிடப்படல் வேண்டும்.

| | உபகரணத்தின் பெயர் | அளவு | ஒப்பந்த இலக்கம் | கேள்விப்பிணையின் பெறுமதி |
|---|---|---|---|---|
| 1 | Computer Servers | 02 | (NHK/BH/M/NETWORK/2024(11)) | ரூ. 400,000.00 |
| 2 | WIFI உபகரணங்கள் 1 Lot (128 Nos) | | (NHK/BH/M/NETWORK/2024(111)) | ரூ. 400,000.00 |

01. கேள்விப் படிவங்களை பெற்றுக்கொள்வதற்காக ரூ. 5000.00 மீளளிக்கப்படாத கேள்விக் கட்டணத்தை, கண்டி தேசிய வைத்தியசாலையின் காசாளரிடம் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டின் மூலப்பிரதியுடன் வியாபார பதிவுச் சான்றிதழின் உறுதி செய்த பிரதி மற்றும் வேண்டுதல் கடிதமொன்றை சமர்ப்பித்தல் வேண்டும். 2024.07.23 முதல் 2024.08.12 வரை சாதாரண அலுவலக நாட்களில் மு.ப. 9.30 முதல் பி.ப. 2.30 வரையான காலத்திற்குள் கண்டி தேசிய வைத்தியசாலையின் நிர்வாகப் பிரிவில் கேள்வி மாதிரிகளைப் பெற்றுக்கொள்ளலாம். பிரதிநிதியொருவர் சமுகமளிக்கும் போது விண்ணப்பதாரிகளின் அதிகாரமளிக்கப்பட்ட கடிதம் மற்றும் ஆளடையாளத்தை உறுதி செய்வதற்கான அடையாள அட்டையைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

02. கேள்விப் படிவங்களைப் பெற்றுக்கொள்வதற்கு முன்பு கண்டி தேசிய வைத்தியசாலையின் நிர்வாகப் பிரிவில் கேள்வி மாதிரிப் பத்திரங்களை இலவசமாக பரீட்சிக்கலாம்.

03. சகல கேள்விப் பத்திரத்துடனும் கண்டி தேசிய வைத்தியசாலையின் பணிப்பாளரின் பெயரில் மேற்படி அட்டவணையில் குறிப்பிடப்படும் பெறுமதியுடன் மற்றும் 2024.12.31 வரை செல்லுபடியாகும் கேள்விப் பிணையொன்றை கேள்வி மூலப்பிரதிக்கு இணைத்து சமர்ப்பித்தல் வேண்டும்.

04. கேள்வி மாதிரிப் பத்திரங்களில் குறிப்பிடப்படும் நிபந்தனைகள் மற்றும் மாதிரி அறிவுறுத்தல்களுக்கு அமைவாக கேள்விகளைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

05. இதுபற்றிய கேள்விக்கு முன்னரான கலந்துரையாடல் (Pre bid - Meeting) 2024.08.02 மு.ப. 10.30 இற்கு கண்டி தேசிய வைத்தியசாலையின் பணிப்பாளர் அறையின் அருகில் உள்ள கலந்துரையாடல் அறையில் நடைபெறும். அக் கலந்துரையாடலுக்கு சமுகமளித்தல் கட்டாயமாகும்.

06. 2024.08.13 மு.ப. 10.30 இற்கு கேள்விகள் ஏற்றுக்கொள்ளல் முடிவடைந்தவுடன் குறித்த கேள்விகள் கண்டி தேசிய வைத்தியசாலையின் பணிப்பாளர் அறைக்கு அருகில் உள்ள கலந்துரையாடல் அறையில் திறக்கப்படும். கேள்விகள் திறக்கப்படும் வேளையில் விண்ணப்பதாரி அல்லது அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதியொருவருக்கு சமுகமளிக்கலாம். பிரதிநிதியொருவர் சமுகமளிக்கும் போது விண்ணப்பதாரியின் அதிகாரமளிக்கப்பட்ட கடிதம் மற்றும் ஆளடையாளத்தை உறுதி செய்வதற்காக அடையாள அட்டையை சமர்ப்பித்தல் வேண்டும்.

07. கேள்விப் பெறுமதி ஐந்து மில்லியன் (5,000,000.00) மேற்படின் 1978 இல. 03 பொது ஒப்பந்த சட்டத்தின் பிரகாரம் பொது ஒப்பந்த பதிவாளர் அலுவலகத்தில் பதிவுசெய்து பெற்றுக்கொண்ட PCA 03 சான்றிதழின் மூலப்பிரதி கேள்வி ஆவணங்களைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

08. திறந்த போட்டி (NCB) முறையின் கீழ் கேள்விகள் கோரப்படுகின்றன.

09. கண்டி தேசிய வைத்தியசாலையின் பிரதேச பெறுகைக் குழுவின் தீர்மானம் இறுதித்தீர்மானம் ஆகும் என கேள்விதாரர் ஏற்றுக்கொள்ளல் வேண்டும்.

**தலைவர்,**
**பிரதேச பெறுகைக் குழு,**
**தேசிய வைத்தியசாலை கண்டி**

# கேள்விக்கான அழைப்பு

## மாவட்ட பொது வைத்தியசாலை – எம்பிலிப்பிட்டிய

### உயிரியல் உபகரணங்களை வழங்குதல், கூட்டிணைப்பு செய்தல், செயற்படுத்திக்காட்டுதல் மற்றும் பராமரிப்பு செய்தல்.

எம்பிலிப்பிட்டிய மாவட்ட பொது வைத்தியசாலையின் பெறுகை குழுவின் தலைவரால், இவ் வைத்தியசாலையின் கீழ்க்காணும் மருத்துவ உபகரணங்களை குறித்த அளவுகளில் வழங்குதல், கூட்டிணைத்தல் செயற்படுத்திக்காட்டுதல் மற்றும் பராமரிப்பு உதவிகளை வழங்குவதற்காக தகைமையுள்ள இலங்கை வழங்குநர்களிடமிருந்து பொறியிடப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.

| விடய இலக்கம் | மருத்துவ உபகரணங்கள் | அளவு | மீளளிப்படாத கட்டணம் ரூபா | கேள்விப் பிணையின் பெறுமதி ரூபா |
|---|---|---|---|---|
| DGH/EMB/F10/BE/GENERAL/2024/01 | BP APPERATORS | 15 | 15,000.00 | 267,500.00 |
| | CTG MACHINE | 03 | | |
| | HANDHELD DOPLER | 05 | | |
| | MONITOR CARDIAC | 03 | | |
| | X-RAY ELUMINATOR | 01 | | |
| | ECG MACHINE | 02 | | |
| DGH/EMB/F10/BE/GENERAL/2024/02 | SLIT LAMP | 03 | 15,000.00 | 107,500.00 |
| | AUTO REFRACTOR MEATER | 02 | | |
| | RETINESCOPE | 02 | | |
| DGH/EMB/F10/BE/GENERAL/2024/03 | SLIDE STORING CABINET | 03 | 15,000.00 | 150,000.00 |
| | WAX CABINET WITH LOCK | 03 | | |
| DGH/EMB/F10/BE/GENERAL/2024/04 | DOUBLE PHOTOTHERAPY INCUBATOR | 01 | 15,000.00 | 75,000.00 |
| DGH/EMB/F10/BE/GENERAL/2024/05 | ELECTRO CAUTERY MACHINE | 02 | 15,000.00 | 150,000.00 |

01. தேசிய போட்டி கேள்வி முறைமையின் பிரகாரம் கேள்விகள் சமர்ப்பிக்கப்பட்ட வேண்டியதுடன் சகல கேள்விதாரர்களும் சகல கேள்விதாரர்களும் அபகீர்த்தியானோர் பட்டியல்படுத்தப்படாத வெற்றிகரமான கேள்விதாரர்களாக இருத்தல் வேண்டும். ஆர்வம் காட்டுகின்ற திறன் உடைய மற்றும் தகைமையுள்ள (CDDA/NMRA) கேள்வி வைப்பாளர்களால் மேலதிக தகவல்கள் மற்றும் கேள்வி ஆவணங்களை, எம்பிலிப்பிட்டிய மாவட்ட பொது வைத்தியசாலையின் கணக்காளர் (தொலைபேசி இல.: 070-7672718) இற்கு எழுத்துமூல விண்ணப்பத்தை சமர்ப்பித்து மற்றும் மீளளிக்கப்படாத கட்டணத்தை செலுத்தி 2024.01.24 முதல் 2024.08.22 வரை வார நாட்களில் முற்பகல் 09.00 முதல் பிற்பகல் 2.30 இற்கு இடைப்பட்ட காலத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

02. கேள்வியுடன் சமர்ப்பிக்க வேண்டிய கேள்விப் பிணை 2024.12.23 வரை செல்லுபடியாதல் வேண்டும். செல்லுபடியாகும் கேள்விப்பிணைக்கு அமைவாகாத எந்தக்கேள்வியும் முன் அறிவித்தல் இன்றி இரத்துச் செய்யப்படும்.

03. சகல கேள்விகளும் இரு பிரதிகளுடன், வேறுவேறாக உறைகளில் இட்டு மூலப்பிரதி மற்றும் நகல்பிரதியென குறிப்பிட்டு மீண்டும் ஒரு உறையில் உட்படுத்தி, கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் ஒப்பந்தத்தின் பெயரைக் குறிப்பிட்டு எம்பிலிப்பிட்டிய மாவட்ட பொது வைத்தியசாலையின் பெறுகைக் குழுவின் தலைவருக்கு 2024.08.23 முற்பகல் 10.00 இற்கு அல்லது அதற்கு முன் கிடைக்குமாறு அனுப்புதல் வேண்டும். தாமதமாகக் கிடைக்கும் கேள்விகள் நிராகரிக்கப்படுவதுடன் கேள்விகள் ஏற்றுக்கொள்ளல் முடிவடைவதுடன் வருகைதந்துள்ள பெயர் குறிப்பிடப்பட்டுள்ள கேள்வி வைப்பாளரின் பிரதிநிதிகள் முன்னிலையில் முற்பகல் 10.30 இற்கு வைத்தியசாலையின் விரிவுரை மண்டபத்தில் கேள்விகள் திறக்கப்படும்.

04. கேள்விகோரலுக்கு முன்னரான கூட்டம் 2024.08.08 முற்பகல் 10.30 இற்கு வைத்தியசாலையின் விரிவுரை மண்டபத்தில் நடைபெறும். சகல கேள்விதாரர்களும் இக்கூட்டத்திற்கு சமுகமளிக்குமாறு அறிவிக்கப்படுகிறது.

05. எந்தக் கேள்விகள் சம்பந்தப்பட்ட செலவுகளுக்காக இந்த வைத்தியசாலை பொறுப்புக்கூறாது. மேலும் எந்தக் கேள்விகளையும் ஏற்றுக்கொள்ளல் அல்லது நிராகரிக்கும் உரிமை வைத்தியசாலையின் பெறுகைக் குழுவின் தலைவருக்கு உரியது.

**தலைவர்**
**பிரதேச பெறுகைக் குழு**
**மாவட்ட பொது வைத்தியசாலை**
**எம்பிலிப்பிட்டிய**
**2024.07.23**
**தொ.பே. இலக்கம் : 047-2230261**

SUNDAY OBSERVER
Marriage Proposals
Decades of Trusted Service
Best way to fulfil your Future Dreams
Affordable & Attractive Packages for YOU.
077 7 278 948 / 011 2 429 343/ 342 / 011 2 429 383
E-mail - classified@lakehouse.lk

# மலேசியாவை வீழ்த்தி அரையிறுதியை நெருங்கியது இலங்கை மகளிர் அணி

மகளிர் ஆசிய கிண்ண டி20 கிரிக்கெட் தொடரில் மலேசியாவுக்கு எதிரான போட்டியிலும் வெற்றியீட்டிய இலங்கை அணி அரையிறுதி வாய்ப்பை நெருங்கியுள்ளது.

தம்புள்ளையில் நேற்று (22) நடைபெற்ற பி குழுவுக்கான போட்டியில் நாணய சுழற்சியில் வென்று முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை மகளிர் அணி சார்பில் சமரி அத்தபத்து 69 பந்துகளில் 14 பௌண்டரிகள் மற்றும் 7 சிக்ஸர்களுடன் ஆட்டமிழக்காது 119 ஓட்டங்களை பெற்றார். இதன்மூலம் இலங்கை அணி 20 ஓவர்களுக்கும் 4 விக்கெட்டுகளை இழந்து 184 ஓட்டங்களை விளாசியது. இந்நிலையில் பதிலெடுத்தாடிய மலேசிய அணி அடுத்தடுத்து விக்கெட்டுகளை பறிகொடுத்த நிலையில் 19.5 ஓவர்களில் 40 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுகளையும் இழந்தது. இதன்மூலம் 144 ஓட்டங்கள் வித்தியாசத்தில் இலங்கையால் வெல்ல முடிந்தது.




ஏற்கனவே பி குழுவின் முதல் போட்டியில் பங்களாதேஷ் அணியை வீழ்த்திய இலங்கை மகளிர் தற்போது 4 புள்ளிகளை பெற்று அந்தக் குழுவில் முதலிடத்தில் உள்ளது. இந்நிலையில் இலங்கை அணி நாளை (24) தாய்லாந்துக்கு எதிராக தனது கடைசி குழு நிலை போட்டியில் ஆடவுள்ள நிலையில் அரையிறுதிக்கு முன்னேறும் வாய்ப்பை நெருங்கியுள்ளது.

இந்தத் தொடரின் அரையிறுதிப் போட்டிகள் எதிர்வரும் வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ள நிலையில் இறுதிப் போட்டி எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை இடம்பெறும். அனைத்து ஆட்டங்களும் தம்புள்ளையில் நடைபெறவுள்ளன.



# சிட்டி லீக் சவால் கிண்ணத்தில் சோண்டர்ஸ், நியூ ஸ்டார் வெற்றி





**பிரின்ஸ் குணசேகர**

கொழும்பு – சிட்டி லீக் சவால் கிண்ண கால்பந்து தொடரில் நேற்று முன்தினம் (21) நடந்த சோண்டர்ஸ்–ஜாவா லேன் இடையிலான போட்டியில் 3–1 என்ற கோல் கணக்கில் சோண்டர்ஸ் அணி வெற்றியீட்டியதோடு, நியூ ஸ்டார் மற்றும் ஓல்ட் பென்ஸ் அணிகளுக்கு இடையிலான போட்டியில் நியூ ஸ்டார் 2–0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

சோண்டர்–ஜாவா லேன் இடையிலான போட்டியின் 45 ஆவது நிமிடத்தில் சோண்டர் வீரர் பீ.பீ. கிம்ஹான கோல் புகுத்தியதோடு, 48 ஆவது நிமிடத்தில் ஜாவா லேனின் எம்.என்.எம். சஜித் கோல் ஒன்றை பெற்றார். தொடர்ந்து 58 ஆவது மற்றும் 81 ஆவது நிமிடத்தில் எம். பிரியங்கர மற்றும் பீ.பீ. கிம்ஹான ஆகியோர் கோல் புகுத்தி சோண்டர்ஸின் வெற்றியை உறுதி செய்தனர்.

ஓல்ட்பென்ஸ் அணிக்கு எதிரான போட்டியில் நியூ ஸ்டார் அணி சார்பில் போட்டியின் முதல் பாதியில் மொஹமட் அனஸ் கோல் புகுத்தினார்.

இந்தத் தொடரின் இரண்டாவது சுற்றுப் போட்டிகள் எதிர்வரும் ஜூலை 27 ஆம் திகதி பிற்பகல் 2.30 இற்கு நியூ ஸ்டார் மற்றும் ஓல்ட் பென்ஸ் அணிகளுக்கு இடையிலும் பிற்பகல் 4.30 இற்கு ஜாவா லேன் மற்றும் சோண்டர்ஸ் அணிளுக்கு இடையிலும், 28 ஆம் திகதி பிற்பகல் 2.30 இற்கு மாளிகாவத்தை யூத் மற்றும் ரினொன் அணிகளுக்கு இடையிலும் பிற்பகல் 4.30 இற்கு செலஞ்சர்ஸ் மற்றும் ரத்னம் அணிகளுக்கு இடையிலும் நடைபெறவுள்ளன.

# கல்முனை அணி வெற்றி



**மாளிகைக்காடு குறூப் நிருபர்**

காரைதீவு விவேகானந்தா விளையாட்டுக் கழகத்தின் 37ஆவது ஆண்டு நிறைவையொட்டி அமரர். சௌந்தரம்மா ஞாபகார்த்த கிரிக்கெட் போட்டியில் கல்முனை விளையாட்டுக் கழகம் வெற்றியீட்டியது.

காரைதீவு விபுலானந்தா மத்திய கல்லூரி மைதானத்தில் கடந்த வெள்ளிக்கிழமை (19) நடைபெற்ற போட்டியில் விவேகானந்தா அணியை எதிர்கொண்ட கல்முனை அணி 18 ஓவர்களுக்கு நிர்ணயித்த 140 ஓட்ட வெற்றி இலக்கை ஐந்து விக்கெட்டுகளை இழந்து எட்டியது.




கொழும்பு, ஆர். பிரேமதாச மைதானத்தில் நேற்று முன்தினம் (21) நடைபெற்ற லங்கா பிரீமியர் லீக் இறுதிப் போட்டியில் கோல் மார்வல்ஸ் அணியை வீழ்த்தி குசல் மெண்டிஸ் தலைமையிலான ஜப்னா கிங்ஸ் அணி மீண்டும் ஒருமுறை சம்பியன் கிண்ணத்தை வென்றது. இதுவரை நடைபெற்ற ஐந்து எல்.பி.எல். தொடர்களில் ஜப்னா அணி நான்கு முறை கிண்ணத்தை வென்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# சம்பியனானது றஹீமிய்யா

**அக்கரைப்பற்று வடக்கு தினகரன் நிருபர்**



பள்ளிக்குடியிருப்பு பாயிஷியான் விளையாட்டுக்கழகம் நடாத்திய IPHS வெற்றிக் கிண்ண கிரிக்கெட் தொடரில் றஹீமிய்யா விளையாட்டுக் கழகம் சம்பியன் கிண்ணத்தை வென்றது.

அக்கரைப்பற்று அதாஉல்லா விளையாட்டு மைதானத்தில் நேற்று முன்தினம் (21) நடைபெற்ற தொடரின் இறுதிப் போட்டியில் டீன்ஸ் ஸ்டார் அணியை எதிர்கொண்ட றஹீமிய்யா அணி, நிர்ணயிக்கப்பட்ட 58 ஓட்ட வெற்றி இலக்கை இலகுவாக எட்டியது. தொடர் நாயகனாக நஜாத் ஏ வஹாப் தெரிவானார்.

## சர்வதேச செய்திகள்

# ஜனாதிபதி தேர்தலில் இருந்து ஜோ பைடன் விலகல்: வேட்பாளராக ஹாரிஸுக்கு ஆதரவு

அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் மீண்டும் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுவதில் இருந்து விலகியுள்ளதோடு எதிர்வரும் தேர்தலில் ஜனநாயகக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளராக துணை ஜனாதிபதி ஹமலா ஹாரிஸுக்கு ஆதரவை அளித்துள்ளார்.

கட்சி மற்றும் நாட்டினது நலனை கருத்தில் கொண்டு இந்த முடிவை எடுத்ததாக 81 வயதான பைடன் நேற்று முன்தினம் (21) வெளியிட்ட அறிவிப்பில் குறிப்பிட்டுள்ளார்.

குடியரசு கட்சி ஜனாதிபதி வேட்பாளர் டொனால்ட் டிரம்புடன் கடந்த ஜூன் 27 ஆம் திகதி இடம்பெற்ற விவாதத்தில் தடுமாறியதை அடுத்து பைடன் மீண்டும் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுவதற்கு கட்சிக்குள் எதிர்ப்பு வலுத்தது. அவரது வயது முதிர்ச்சி மற்றும் உடல் நிலை குறித்து பெரிய அளவில் கேள்வி எழுப்பப்பட்டு வந்தது.

எதிர்வரும் ஜனவரி மாதம் வரை உள்ள தனது பதவிக் காலத்தின் எஞ்சி பகுதியில் பணிகளைத் தொடரவுள்ளதாக பைடன் குறிப்பிட்டுள்ளார்.

அமெரிக்க ஜனாதிபதி வேட்பாளர் நியமனத்தை பெற்று வெற்றி பெறுவதாக குறிப்பிட்டிருக்கும் 59 வயது ஹாரிஸ், டிரம்புக்கு எதிராக நாடு ஒன்றுபட வேண்டும் என்று அழைப்பு விடுத்துள்ளார்.

'தேர்தல் தினத்திற்கு எமக்கு இன்னும் 107 நாட்கள் உள்ளன. நாம் ஒன்றிணைந்து போராட வேண்டும். நாம் ஒன்றிணைந்து வெற்றி பெற வேண்டும்' என்று அவர் குறிப்பிட்டுள்ளார். கமலா ஹாரிஸுக்கு ஜோ பைடன் மற்றும் கட்சியின் முக்கிய உறுப்பினர்கள் பலர் ஆதரவு தெரிவித்திருந்தாலும், அவர் உடன் ஜனாதிபதி வேட்பாளராகி விடமுடியாது. இதில் ஜனாதிபதி வேட்பாராக வதற்கு வேறு சிலரும் முயற்சி செய்யக் கூடும்.

ஜனநாயகக் கட்சியின் தேசிய மாநாடு அடுத்த மாதம் நடக்கும்போது, ஜனாதிபதி வேட்பாளர் மற்றும் துணை ஜனாதிபதி வேட்பாளர்கள் முறைப்படி அறிவிக்கப்படுவார்கள்.

நவம்பர் 5ஆம் திகதி ஜனாதிபதி தேர்தல் நடைபெறவுள்ளது.



இந்நிலையில் அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில், ஜனாதிபதி ஜோ பைடனை விடவும் துணை ஜனாதிபதி கமலா ஹாரிஸைத் தோற்கடிப்பது இன்னும் இலகுவானது என்று குடியரசுக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் டொனால்ட் டிரம்ப் கூறியுள்ளார்.

பைடனுக்கும் ஹாரிஸுக்கும் வித்தியாசம் இல்லை என டிரம்ப்பின் பிரசாரக் குழு கூறியது. குடியரசுக் கட்சியின் தேசியக் குழு யூடியுப் தளத்தில் ஹாரிஸின் குடிநுழைவுக் கொள்கைகளைத் தாக்கி 2 நிமிட வீடியோவை பதிவேற்றம் செய்தது.

# தொடர்ந்து பற்றி எரியும் ஹொதைதா துறைமுகம்



யெமனின் ஹொதைதா துறைமுகத்தில் எண்ணெய் தொட்டிகள் மற்றும் மின் நிலையத்தின் மீது இஸ்ரேல் கடந்த சனிக்கிழமை நடத்திய தாக்குதலினால் ஏற்பட்ட தீயை கட்டுப்படுத்த தீயணைப்பு படையினர் நேற்று மூன்றாவது நாளாகவும் தொடர்ந்து போராடி வந்தனர்.

கடுமையான தீ மற்றும் கரும்புகை வானை நோக்கி எழுந்த வண்ணம் இருப்பதாக ஹொதைதாவில் உள்ள ஏ.எப்.பி. செய்தி நிறுவனத்தின் செய்தியாளர் ஒருவர் விபரித்துள்ளார். இதனைக் கட்டுப்படுத்துவதில் தீயணைப்பு வீரர்கள் சிறிய அளவே முன்னேற்றம் கண்டிருப்பதோடு தீ மேலும் பரவி வரும் நிலையில் அது உணவுக் களஞ்சிய வசதிகளை அடையும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

இஸ்ரேலின் இந்தத் தாக்குதலில் ஆறு பேர் கொல்லப்பட்டதாக இந்த எரிபொருள் கிடங்கை நடத்தும் யெமன் பெற்றோலிய நிறுவனம் தெரிவித்துள்ளது. இதில் 80க்கும் அதிகமானவர்கள் காயமடைந்ததாக ஹூத்தி கிளர்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர். பலஸ்தீனர்களுக்கு ஆதரவை வழங்கி வரும் ஹூத்தி கிளர்ச்சியாளர்கள் இஸ்ரேலின் டெல் அவிவ் நகர் மீது நடத்திய ஆளில்லா விமானத் தாக்குதலுக்கு பதிலடியாகவே யெமன் மீது முதல் முறை பதில் தாக்குதலை நடத்தி இருந்தது.



# காசாவில் உயிரிழப்பு 39,000ஐ தாண்டியது: மக்கள் வெளியேற இஸ்ரேல் புது உத்தரவு

காசாவில் தொடர்ந்து மோதல் நீடிக்கும் நிலையில் கடந்த ஒன்பது மாதங்களுக்கு மேலாக இஸ்ரேல் இடைவிடாது நடத்தும் தாக்குதல்களில் கொல்லப்பட்ட பலஸ்தீனர்கள் எண்ணிக்கை 39,000ஐ தாண்டியுள்ளது.

தெற்கு நகரான கான் யூனிஸில் நேற்று இடம்பெற்ற சரமாரித் தாக்குதல்களில் 27 பேர் கொல்லப்பட்ட நிலையிலேயே பலி எண்ணிக்கை புதிய உச்சத்தை தொட்டுள்ளது. புதிய போர் நடவடிக்கைகளை முன்னேடுக்கும் வகையில் காசாவின் சில பகுதிகளில் இருந்து மக்களை வெளியேற புதிய உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

கான் யூனிஸின் கிழக்காக உள்ள பனீ சுஹைலா சிறு நகரில் இஸ்ரேலிய டாங்கிகள் நடத்திய சரமாரித் தாக்குதல்களில் குறைந்தது 16 பலஸ்தீனர்கள் கொல்லப்பட்டதாக பலஸ்தீன சுகாதார அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். இந்தப் பகுதிகளில் வானில் இருந்தும் குண்டுகளும் வீசப்பட்டுள்ளன.

கொல்லப்பட்டவர்களில் ஆறு சிறுவர்கள் மற்றும் நான்கு பெண்கள் அடங்குவதாக காசா சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. பலரும் காயமடைந்திருப்பதாக அது கூறியது.

எனினும் கான் யூனிஸில் இடம்பெற்ற தாக்குதல்களில் மொத்தம் 27 பேர் கொல்லப்பட்டதாக மருத்துவ வட்டாரங்களை மேற்கோள் காட்டி அல் ஜசீரா செய்தி நிறுவனம் குறிப்பிட்டுள்ளது.

கொல்லப்பட்ட சடலங்கள் மற்றும் காயமடைந்தவர்களை ஏற்றிய ட்ரக் வண்டி ஒன்று கான் யூனிஸில் உள்ள அல் நாசர் மருத்துவமனையை அடைந்திருக்கும் வீடியோ ஒன்று இணையதளத்தில் பகிரப்பட்டுள்ளது.

'சிறுவர்கள் உட்பட குடும்பம் ஒன்றின் அனைவரும் உறங்கிக் கொண்டிருந்தபோது துண்டு துண்டாக சிதறடிக்கப்பட்டுள்ளனர்' என்று சடலங்களை எடுத்துவந்த அம்புலன்ஸ் வண்டியில் இருந்த ஒருவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேநேரம் மத்திய காசாவில் உள்ள டைர் அல் பலாஹ்வில் குடும்ப வீடு ஒன்றின் மீது இஸ்ரேல் நடத்திய தாக்குதலில் குறைந்தது இரு பலஸ்தீனர்கள் கொல்லப்பட்டு மேலும் பலர் காயமடைந்திருப்பதாக பலஸ்தீன செய்தி நிறுவனமான வபா குறிப்பிட்டுள்ளது.



இந்நிலையில் பலஸ்தீன போராளிகளின் புதிய தாக்குதல்களை அடுத்து பலஸ்தீனர்களை வெளியேறும்படி புதிய உத்தரவு பிறப்பிக்கப்பட்டதாக இஸ்ரேல் இராணுவம் குறிப்பிட்டுள்ளது. இதில் கான் யூனிஸின் கிழக்கில் ரொக்கெட் தாக்குதல்கள் இடம்பெற்ற பகுதிகளில் இருந்தும் மக்களை வெளியேற உத்தரவிடப்பட்டுள்ளது.

இந்த வெளியேற்ற உத்தரவினால் 400,000 இற்கும் அதிகமானவர்கள் பாதிக்கப்பட்டிருப்பதாக பலஸ்தீன சிவில் பாதுகாப்பு நிறுவனம் குறிப்பிட்டுள்ளது. வெளியேற்ற உத்தரவுக்கான துண்டுப்பிரசுரம் வீசப்பட்ட விரைவிலேயே மக்கள் வெளியேறுவதற்கு அவகாசம் இன்றி இஸ்ரேல் படை நடவடிக்கை ஆரம்பித்ததாக அங்கிருக்கும் அல் ஜசீரா செய்தியாளர் தெரிவித்துள்ளார். ஹமாஸ் முன்னணி தளபதிகள் உட்பட போராளிகளை இலக்கு வைத்தே இங்கு தாக்குதல்களை நடத்தியதாக இஸ்ரேல் கூறியபோதும் இந்தக் குற்றச்சாட்டுகள் பொய்யானது என்றும் தாக்குதல்களை நியாயப்படுத்த இவ்வாறு கூறுவதாகவும் பலஸ்தீன அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை காசா நகரை நோக்கி பயணித்துக் கொண்டிருந்த அடையாளம் இடப்பட்ட ஐ.நா. வாகன தொடரணி மீது இஸ்ரேலியப் படை தாக்குதல் நடத்தியதாக பலஸ்தீன அகதிகளுக்கான ஐ.நா நிறுவனத்தின் தலைவர் பிலிப்பே லசரினி எக்ஸ் சமூகதளத்தில் குறிப்பிட்டுள்ளார்.

வாதி காசா ஆற்றுப் பள்ளத்தாக்கின் தெற்காக இஸ்ரேலிய சோதனைச்சாவடி ஒன்றுக்கு அருகில் காத்துக்கொண்டிருக்கும்போது கவச வாகனம் ஒன்றின் மீது ஐந்து துப்பாக்கி குண்டுகள் பாய்ந்ததாக அவர் குறிப்பிட்டுள்ளார். இதனால் வாகனம் கடும் சேதத்திற்கு உள்ளானதாகவும் ஐ.நா. பணியாளர்கள் பாதுகாப்பான இடத்தை நோக்கிச் செல்ல வேண்டி ஏற்பட்டதாகவும் ஆனால் யாருக்கும் காயம் ஏற்படவில்லை என்றும் தெரிவித்துள்ளார்.

கட்டார் மற்றும் எகிப்தின் மத்தியஸ்தத்துடன் இடம்பெறும் போர் நிறுத்த முயற்சிகளும் போர் தரப்புகள் இடையில் உடன்பாடு எட்டப்படாத நிலையில் ஸ்தம்பித்துள்ளது.

பணயக்கைதிகளை விடுவிப்பதற்கான பேச்சுவார்த்தைக்கு பொறுப்பான பிரதிநிதிகள் குழுவை வியாழக்கிழமை அனுப்புவதற்கு பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு ஞாயிற்றுக்கிழமை (21) உத்தரவிட்டதாக பிரதமர் அலுவலகம் கூறியபோதும் அந்தக் குழு எங்கே அனுப்பப்படுகிறது என்பது பற்றிய விபரம் வெளியிடப்படவில்லை.

அமெரிக்க பிரதிநிதிகள் அவையில் உரையாற்றுவதற்காக நெதன்யாகு நேற்று (22) வொஷிங்டன் புறப்பட்டுச் சென்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2024 ஜூலை மாதம் 23ம் திகதி செவ்வாய்க்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.